இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 229 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 29 வியாழக்கிழமை 13.07.2017

## ஊழல் ஒழிப்பு காரியாலயத்தை மூடத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 13

ஊழல் ஒழிப்பு செயலாளர் காரியாலயத்தை மூடிவிடுவதற்கான தீர்மானம் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2015 ஜூலை 2 ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர » 23

## றெஜிபோர்ம், லஞ்சீற் என்பவற்றுக்கும் செப்ரெம்பர் முதல் தடை

கொழும்பு, ஜூலை 13

லஞ்சீற், பொலித்தீன் மற்றும் றெஜிபோம் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகம் மாநாட்டில் இது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய மெல்லிய பொலித்தீன்களைத் தடை செய்வது குறித்து சுற்றுச்சூழல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதி » 23

## புதிய அரசமைப்பு மிகமிக அவசியம்

ஜே.வி.பி. மீண்டும் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 13

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசமைப்பை அரச தலைவர் நிறைவேற்றியாக வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. அத்துடன், காணாமல் ஆக்கப்படுவதை குற்றவியல் குற்றமாகக் கருதவேண்டும் » 25



## கடலில் தத்தளித்த யானை கடற்படையினரால் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவு, கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய்க் கடற்பரப்பில் உயிருக்காக போராடிக் கொண்டிருந்த காட்டு யானை ஒன்று » 06



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியை சந்தித்த போது...

## அரசியல் கைதிகளுடன் ஐ.நா. நிபுணர் சந்திப்பு

அவர்களின் நிலமைகள் குறித்து ஒவ்வொன்றாகக் கேட்டறிவு

வவுனியா, ஜூலை 13

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன், அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு » 25

# கடற்படை அதிகாரி தசநாயக்க கைது

5 மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் கொழும்பில் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜூலை 13

இலங்கைக் கடற்படை சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் ஊடகப் பேச்சாளருமான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வெலிசறையில் வைத்து நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார். இவரைக் கோட்டை நீதிவான் முன்பாக முன்னிலைப்படுத்தவுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.



"கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்பட 11 தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துவோம்" என்று குற்றப் புல » 25

## சைக்கிளில் சென்ற பெண்ணிடம் பணப்பையைப் பறித்த கும்பல்

சங்கானையில் நேற்றுத் துணிகரம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

சங்கானை மாவடி வைரவர் ஆலயத்துக்கு அண்மையாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணின் கைப் பை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த கும்பலால் கொள்ளையிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. » 06

## பொலிஸார் வசமுள்ள பாடசாலைக் கிணற்றை மீட்டுத்தரக் கோரிக்கை

குழாய்க் கிணறை அமைத்து தருகிறாராம் மீள்குடியேற்ற அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

பாடசாலைக்குச் சொந்தமான கிணற்றை பொலிஸாரிடமிருந்து மீட்டுத் தருமாறு கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு அமைச்சர், வேண்டுமா » 24

## பொறிவெடியில் சிக்கி கண்ணிவெடி அகற்றும் பணியாளர் படுகாயம்

முகமாலையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம், முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டு நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் பொறி » 25

**பருத்தித்துறை இளைஞன் கொலை**

## பொலிஸ் மீதான குற்றச்சாட்டு விசாரணை இடம்பெறுகிறது

யாழில் சி.ஐ.டியினர் தெரிவித்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

பருத்தித்துறையில் மணல் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞன் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பில்,பொலிஸா » 24

## விக்கியின் தாளத்துக்கு இராணுவம் ஆடாது

கூறுகிறார் தளபதி

கொழும்பு, ஜூலை 13

வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் போடும் அனைத்து தாளங்களுக்கும் இராணுவத்தினர் ஆடத் » 25

## காணாமற்போனோர் விவகாரத்துக்கு தீர்வை வழங்க அரசுக்கு அழுத்தம்

இறுக்கமாகவே பேச்சுக்கள் நடத்துவதாக உறவுகளிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

கிளிநொச்சி, ஜூலை 13

"காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் கொழும்பு அரசின் தலைமைகளுடன் நான் கடுமையாகவே பேசுகின்றேன். இந்த விடயத்தில் நாம் முயற்சிகளை முழுமையாக எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்தப் பிரச் » 25



## கொலையின் பின் 4 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

பருத்தித்துறையில் இளைஞன் உயிரிழந்த சம்பவங்களின் பின்னரான செயற்பாடுகள் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் 4 » 06

## வான் திடீரெனத் தீப்பற்றி எரிந்து தமிழ் வர்த்தகர் லண்டனில் சாவு

லண்டன், ஜூலை 13

லண்டனில் கடந்த திங்கள் இரவு வான் ஒன்றில் தீப்பிடித்ததில் இலங்கைத் தமிழரான வர்த்தகர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது » 25

## மக்கள் ஆணை இல்லாத அரசமைப்புவேண்டாம்

நடவடிக்கைகளை உடனே நிறுத்தக் கோருகிறார் எஸ்.பி.

கொழும்பு, ஜூலை 13

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்கள் ஆணை இந்த அரசுக்கு இல்லை. மக்கள் ஆணை இல்லாத ஒரு » 23

## வடமராட்சிக் கடலேரி மூலம் குடாநாட்டுக்குக் குடிதண்ணீர்

ரணிலின் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 13

யாழ்ப்பாணம் வடமராட்சி கடலேரி நீர் வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் யாழ்ப்பாண மக்களுக்குக் குடிதண்ணீரை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அரச » 25

## கூட்டமைப்பின் பதிவு முக்கியமல்ல ஒன்றுபட்டு இருப்பதே முக்கியம்

சம்பந்தன் கிளிநொச்சியில் திட்டவட்டம்

கிளிநொச்சி, ஜூலை 13

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது யார்? என்பது தற்போது முக்கியமல்ல. ஒற்றுமையாகச் செற்பட வேண்டியதே எதிர்காலத்தின் தேவை. நாம் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே அடையா » 25

newuthayan.com

உதயன் DIGITAL

newuthayan.com

24 மணிநேரப் பதிவேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்ப்பாண மாவட்டத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள்

## நேற்று ஆரம்பித்தார் அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாண மாவட்டத்தில் பல அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டங்கள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.




பனைசார் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் அதுசார்ந்த கைத்தொழில்களுக்கும் மக்களை ஈடுபடுத்தும் நோக்கில், நாவற்குழி பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தில் நிர்வாக அலகுக் கட்டடதும் பனை சார் பயிற்சிப்பாடசாலைக்குமான அடிக்கல் நடப்பட்டது. இதற்கு மீள்குடியேற்ற அமைச்சால் 125 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டளவில் இதன் கட்டுமாணப் பணிகள் நிறைவடையும். அத்துடன் பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான இருமாடி மாநாட்டு மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது. பனைசார் உற்பத்திகளை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்டு 60 பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. 45 கடைகளைக் கொண்ட மானிப்பாய் சந்தைக்கட்டடத்தொகுதிக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. இந்த இருமாடிக் கட்டடத்துக்காகச் செலவிடப்படும் தொகை 45 மில்லியன் ரூபாவாகும். 36 கடைகளைக் கொண்ட சங்கானை சந்தைக்கட்டிடத்தொகுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 80 மில்லியன் ரூபாவாகும்.

காங்கேசன்துறை யாழ். நடேஸ்வரா கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழாவும் இடம்பெற்றது. இதற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் நீர்வேலி காமாட்சி அம்பாள் இரும்பு வேலைத்தளமும், சந்தைப்படுத்தல் நிலையமும் திறந்து வைக்கப்பட்டன. இதற்காக செலவிடப்பட்ட தொகை 7 மில்லியன் ரூபா என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10, 17)

# வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை அரசு நிறைவேற்றும்

## அமைச்சர் சுவாமிநாதன் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்துள்ள கூட்டு அரசு வடக்குக் கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த மக்களின் அனைத்துத்தேவைகளையும், திட்டங்களை வகுத்து உடன் நிறைவேற்றும். இவ்வாறு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் தெரிவித்தார்.

நீர்வேலியில் அமைந்துள்ள காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழில் சங்கத்தின் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய கைத்தொழில்களில் ஈடுபடுவோரின் வாழ்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும். அதற்கு நாங்கள் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். எமது அமைச்சின் மூலம் நீர்வேலி காமாட்சி அம்பாள் இலகு பொறியல் துறைக்கு 6.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டு அரசு வடக்குகிழக்கு விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற முன்னிக்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தொடர்சியாக அரசுக்கு வழங்கும் ஒத்துழைப்பின் மூலம் இன்னும் போதியளவு சேவைகளை எமக்கு ஆற்ற முடியும் - என்றார்.

(ஐ-10)

# சாவகச்சேரி கோட்ட அலுவலகம் விக்கேஸ்வரா ம.விக்கு மாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 13
சாவகச்சேரி இந்துக் கல்லூரிக் கட்டடத்தில் இயங்கிவந்த சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகம் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு. சிவானந்தன், ஓய்வுநிலை அதிபர் அ. கைலநாத பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.



சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டட வசதி இல்லாத காரணத்தால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பாடசாலைக்கட்டடங்களில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

# மயானங்களை அகற்றக்கோரி காலவரையற்ற போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 13
மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றக்கோரி தொடர்போராட்டம் புத்தூர் மேற்கு கலைமதி கிராம மக்கள் மண்டபத்துக்கு முன்னால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

'வடக்கு மாகாண சபையே! மக்கள் குடியிருப்புகளுக்குமத்தியில் உள்ள மயானங்களை அகற்று' 'மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்து' என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் சடலங்களை எரியூட்டும் மயானங்களால் பல்வேறு சுற்றுச்சூழல் மாசடைதல், சுகாதாரப் பாதிப்புக்கள், உளவியல் பிரச்சினைகளை மயானங்களுக்கு அருகில் வாழும் சாதாரண மக்கள் நாளாந்தம் எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத் தும் இதுவரை எந்தவொரு முன்னெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காலவரையற்ற போராட்டத்தை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்புடனும் ஏனைய் அமைப்புக்களுடனும் இணைந்து முன்னெடுக்க ஆரம்பித்தோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-10, 12, 37)

# நில அளவையாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 13
ஆறு கோரிக்கைகளை முன்வைத்து அரச நில அளவையாளர்கள் சங்கம் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். நில அளவையாளர்களுக்கான அரசமைப்பொன்றை உருவாக்காமை, இரண்டாம் மொழி தொடர்பான பிரச்சினையைத் தீர்க்காமை, பத்து வருடங்களாக நில அளவை அதிகாரிகளை நியமிக்காமை, 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் ஓய்வூதியங்களை இரத்துச் செய்துள்ளமை, நில அளவை உதவியாளர்களைப் போதுமான அளவுக்கு நியமிக்காமை, சிரேஷ்டத் துவ அடிப்படையில் நில அளவையாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்காமை ஆகிய ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் துமிந்த உடுகொட தெரிவித்தார்.

(ஐ)

# சுமந்திரன் கொலை முயற்சி சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூலை 13
தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 5 சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5 சந்தேகநபர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான், சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்துக்கே முதன்மை எதிர்க்கமாட்டார் சம்பந்தன்

## இளம் பிக்குகள் மத்தியில் ரணில் புகழாரம்



கொழும்பு, ஜூலை 13

மகிந்த ஆட்சிக் காலத்தில் தேரர்கள் மிரட்டப்பட்டபோது அதற்கு எதிராக என்னுடன் இணைந்து குரல் எழுப்பிய சம்பந்தன், இன்றைய ஆட்சியில் பௌத்தத்துக்கான முதன்மை இடத்தை நீக்கக் கோரமாட்டார்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமகாலத்தில் பௌத்த மதம் தொடர்பில் சமூக மட்டத்தில் எழுந்த பிரச்சினைகள் குறித்து இளம் பிக்குகள் ஒன்றியத்துடன் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதில் நாம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

ஆனால், விகாரைகளில் பாதுகாக்கும் விடயத்தில் நாம் தலையிடவில்லை. விகாரை உண்டியல்களில் இருந்து பணத்தைத் திருடுவதற்கும் நாம் திட்டமிடவில்லை.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் மல்வத்தை பீடத்துக்கு பாரதூரமான முறையில் மிரட்டல் விடுக்கப்பட்டது. அந்தப் பீடத்தை இரண்டாக உடைந்து அரச அனுசரணையுடன் தனியாக ஒரு பீடம் உருவாக்கப்படும் என்று அரசு கூறியது. அதுமட்டுமல்ல தலதா மாளிகைக்குக் குண்டு வீசுவோம் என்றும் மிரட்டல் விடுத்தனர்.

தேரர்களிடையேபிரிவினையை உருவாக்கினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இதற்கு எதிராகப் பேசினேன். அதிகமானோரைச் சந்தித்தேன். ஆனால் அவர்கள் மகிந்தவை எதிர்த்துப் பேசவில்லை. இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைச் சந்தித்து இது தொடர்பில் என்ன செய்வது என்று கேட்டேன்.

தேரர்களுக்கு மிரட்டல் விடுப்பதையும் அவர்களிடையே பிளவை ஏற்படுத்துவதையும் சம்பந்தன் எதிர்த்து அறிக்கை விட்டார். அப்படிப்பட்ட சம்பந்தன் பௌத்த மதத்துக்கு முதன்மை இடத்தை நீக்குவதற்கு விரும்பமாட்டார்என்றார். (த-3)



## வெலிசிங்க ஹரிஸ்சண்ரா கல்லூரியின் மாணவர்கள் கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி, ஜூலை 13

அனுராதபுரம் வெலிசிங்க ஹரிஸ்சண்ரா கல்லூரிச் சமூகத்தினர் கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்தனர்.

இரு சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவர்களால் ஒற்றுமைப் பயணம் எனும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைவாக அனுராதபுரம் வெலிசிங்க ஹரிஸ்சண்ரா கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரிக்கு வருகை தந்தனர். கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி மாணவர்கள் நல்லிணக்கப் பயணத்தை கடந்த வருடம் அனுராதபுரம் வெலிசிங்க ஹரிஸ்சண்ரா கல்லூரிக்குச் சென்றிருந்தனர். இதன் இரண்டாம் கட்ட நல்லெண்ணப் பயணமாகவே அனுராதபுரம் வெலிசிங்க ஹரிஸ்சண்ரா கல்லூரிச் சமூகத்தினர் நேற்று வருகை தந்தனர். கல்லூரிக்கு வருகை தந்த அவர்களைப் பாடசாலை சமூகத்தினர் கலாச்சார விழுவியங்களுடன் வரவேற்று உபசரித்தனர். இவ்வாறான பயணங்கள் மூலம் இரு இனங்களுக்கும் இடையில் நல்லிணக்க உறவைக் கட்டியெழுப்பப்படும் என்று பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர். (ஜ-10)

## புலித் தொப்பி வழக்கு; சந்தேகநபர்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குரிய இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பியொன்றை, இலண்டனுக்கு அனுப்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு, கொழும்பு நீதிமன்ற மேலதிக நீதிவான் சந்தன கலன்சூரிய முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

15 மாதச் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த, முன்னாள் இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட மூவரை, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று விடுவித்தது.

சந்தேகநபர்களான முல்லைத்தீவு நந்திக்கடல் இராணுவ முகாமின் இலத்திரனியல் மற்றும் பொறியியல் படைப்பிரிவில் கடமையாற்றிய வவுனியாவைச் சேர்ந்த சுப்ரமணியம் நகுலராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜேசுரத்னம் ஜெகசாந்தன் மற்றும் மகாதேவா பிரசன்னா ஆகிய மூவரும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை நீதிமன்று நேற்று விடுவித்தது. (ஜ-10)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, ஜூலை 13

உமா ஓயாவுக்கு நீராச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 87 வயதான பாட்டி, 38 வயதான தாய், மற்றும் இரண்டரை வயதான குழந்தை ஆகிய மூவரே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் ஊவா, பரணகம, மொரகொல்லப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பெட் ஸ்கேன் இயந்திர கொள்வனவுக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 13



மகரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு பெட் ஸ்கேன் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அமைச்சரவை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களைப் பரிசோதிப்பதற்கு பெட் ஸ்கேன் வசதிகள் இல்லை என மருத்துவமனை நிர்வாகத்தால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கமைவாக பொது மக்களிடம் இருந்து சுமார் 20 கோடி ரூபா நிதி சேகரிக்கப்பட்டது.

இந்த இயந்திரத்தை வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. (ஜ-10)

## தஸாநாயக்கவின் கோரிக்கையை கொழும்பு நீதிமன்று நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 13

கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கமாண்டர் கேடி பி தஸாநாயக்க வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தார். அந்தக் கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்று நேற்று நிராகரித்தது.

2008 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் 11 பேர் வெள்ளை வானில் கடத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவின்றி சந்தேக நபரைக் கைது செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான குற்றச்சாட்டு உள்ளவரை வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்தது. சந்தேக நபரைக் கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் நேற்று கோரிக்கை விடுத்தது. எனினும் அவரைப் பொலிஸார் கைது செய்வதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று நீதிமன்றம் தெரிவித்தது. (ஜ)

## மாற்றுத் திறனாளிகளின் திறமைகளுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

மாற்றுத் திறனாளிகளின் திறமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், அனைத்து மேடைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். திறமையுடைய மாற்றுத் திறனாளிகள் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சமூகத்தில் உயர்வான நிலைக்கு வரவேண்டும் என்று விஸ் ஏபிலிற்றி அமைப்பினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை மட்டுமல்லாது வெளிநாடுகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு கைகொடுக்க பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கு நடனப் பயிற்சிகளை வழங்கி நடன நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம். அதற்கமைவாக மாற்றுத் திறனாளிகளுக்கான நடன நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பழைய பூங்காவில் நடைபெறும் நடனம் என்பது இன, மத, மொழிகளை கடந்தது. பன்னாட்டு ரீதியில் நடனமே அனைவராலும் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது. மாற்றுத் திறனாளிகள் நடனப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் அவர்களுக்கு [illegible] சியாகவும் இது அமையும். - என்றனர். (ஜ-10, 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டக்கச்சி ம.வியின் வைர விழா நிகழ்வு



கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி வைர விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டார். வைர விழாவை நினைவு படுத்தும் தூபி எதிர்கட்சி தலைவரால் திறக்கப்பட்டது. தொடர்ந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் விழா மண்டபம் வ்ரை அழைத்து செல்லப்பட்டனர்.

கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து கிராமத்தின் 80 வயது கடந்த மூத்த பிரஜைகள் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலையிலும், வலயத்திலும் சேவையாற்றியவர்கள் எதிர்கட்சிந்து தலைவரால் கௌரவிக்கப்பட்டனர். கல்வி சேவையாற்றிய வடமாகாண சபை உறுப்பினர்களாக உள்ள குருகுலராஜா, ப:அரியரத்தினம் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலையில் கல்வி, விளையாட்டுக்களில் சாதனை நிலை நாட்டிய மாணவர்கள் எதிர்கட்சி தலைவரால் கௌரவிக்கப்பட்டனர். (ற-8)

# உடையார்கட்டுபாடசாலையில் புதியவகுப்பறைக்கட்டடம்திறப்பு



முல்லைத்தீவு, ஜூலை 13
உடையார்கட்டு ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. லண்டனில் வதியும் சந்திரவதனி குடும்பத்தினர் இந்த வகுப்பறைக் கட்டடத்துக்கான நிதியுதவியை வழங்கினர். பல்வேறு வசதிகளுடன் இந்த வகுப்பறைக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெ.ஜெயந்தன், சிறப்பு விருந்தினர்களாகமுல்லைத்தீவுக்கோட்டக் கல்வி பணிப்பாளர் சுப்பிரமணியேஸ்வரன், ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் சு.சிவாகரன், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

# வடமாகாணக் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

## அமைச்சர் ஹக்கீம் உறுதி

வவுனியா, ஜூலை 13
வடக்குமகாணத்தில்குடிதண்ணீர்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதில் நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்என்றுநீர்வழங்கல்வடிகால் அமைப்பு அமைச்சர் ரவூம் ஹக்கிம் தெரிவித்தார்.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலத்தில் நீர் சுத்திகரிப்புத் தொகுதியைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துதெரிவிக்கும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
அரசின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றுகுடிதண்ணீர் பிரச்சினை. வடக்கு மாகாணம் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதில் ஏனைய மாகாணங்களில் ஒப்பிடும் போது



பின்தங்கியநிலையில்இருந்தது. யாழ் மாவட்டத்துக்குப் புதிய நீர் விநியோகத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் அதே நேரம், நாட்டுக்கு முதன்முதலாக கடல் நீரைச்சுத்திகரித்துவழங்கும்செயற்றிட்டத்துக்காக சுமார் 250மில்லியன் டொலர் செலவில் வேலைத்திட்டங்களும்நடைபெறவுள்ளன.

தீவுப்பகுதிகளுக்கும் வேறு வேறான திட்டங்களைஅறிமுகப்படுத்தும்செயற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனையிறவு கடல்நீர் ஏரியில் இருக்கும் கடல் நீரைச் சுத்திகரித்து வழங்கும் செயற்றிட்ட அறிக்கையும்தற்போதுதயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறுபலசெயற்பாடுகளை முன்னெடுத்து வடக்குமகாணத்தில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரதீர்வுகாண்பதில்நாம்முனைப்புடன் செயற்பட்டுவருகின்றோம். இதனோடு ஏனைய அபிவிருத்தி வேலைகளிலும் எமது அமைச்சு செயற்பட்டு வருகின்றது. இந்த அரசின் பங்காளிகள் என்ற அடிப்படையில் தமிழ்தேசியக்கூட்டமைப்புடன் நாங்களும்இந்தநாட்டுக்கு நிரந்தரமான நிம்மதியான எதிர்காலத்துக்குஅரசியல்யாப்புகளுடையஅபிலாசைகளைத்தீர்த்துவைக்கும்வகையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றோம். வழமைபோல்சிலதீவிரவாதஇயக்கங்கள் முட்டுக்கட்டை களைப் போடும் நிலவரம் தென்படுகிறது. அவற்றையெல்லாம் அரசியல் தலைமைகள் சாதுரியமாக சாணக்கியமாக சமாளித்து, அனைத்து சமூகங்களுக்கும் கௌரவமான சமத்துவம் கிடைக்கும் வகையில் அரசியல்யாப்பை உருவாக்குவதில் ஈடுபட்டுவருகின்றோம். - என்றார்.

நிகழ்வில்வவுனியாவின்சின்னசிப்பிக்குளம் கிராமம், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், கோவில்குளம் கிராமம், தேசிய கல்வியற் கல்லூரி ஆகிய பகுதிகளில் தேசிய நீர்வழ்ங்கல் வடிகால் அமைச்சால் அமைக்கப்பட்ட சுத்திகரிக் கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் தொகுதி நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியாமுஸ்லிம்மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ரம்சின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அமைச்சருடன்நாடாளுமன்றஉறுப்பினர்கே.கே.மஸ்தான், வடக்குமாகாணசபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

# அலைபேசியுடன் கைப்பையைத் திருடியவர் கைது

புத்தளம், ஜூலை 13
வெளிநாட்டுப் பொறியிலாளர் ஒருவரின் கைப்பையில் இருந்த அலைபேசி மற்றும் 60 ஆயிரம் ரூபா பணத்தை திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உமா ஓயா வேலைத்திட்டத்தை மேற்கொண்டிருந்த ஈரான் நாட்டு பொறியியலாளரது கைப்பையே இவ்வாறு திருடப்பட்டது. புத்தளையை ஊடறுத்துச் செல்லும் மாணிக்க கங்கையில் பொறியியலாளர் குளிப்பதற்காகத் தனது உடைகளுடன் கைப்பையைக் கங்கைக் கரையில் வைத்து விட்டுக் குளிக்கச் சென்றுள்ளார்.

குளித்த பின்னர் கரைக்குத் திரும்பி வந்த போது, தனது கைப்பை காணாமல் போனதைப் பொறியியலாளர் அவதானித்தார். அதனையடுத்து பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கினார். முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் ஒருரைப் பொரிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபரிடமிருந்து பொறியியலாளரின் அலைபேசி மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-10)

# பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் விழிப்புணர்வு



மட்டக்களப்பு, ஜூலை 13
பாடசாலை மாணவர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கின் மூன்றாம் கட்ட நிகழ்வு முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. கருத்தரங்கில் "மாணவர்களாகிய நாங்கள் எமது வாழ்நாளில் போதைப் பொருள்களை எக்காரணம் கொண்டும் நுகர மாட்டோம்" என மாணவர்கள் சத்தியப் பிரமாணம் செய்தனர். கையொப்பமும் இட்டனர். கையொப்பமிட்டபதாகை பாடசாலையில் காட்சிப்படுத்தப்பட்டது. போதைப் பொருள் பாவனையால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள், குடும்பப் பிணக்குகள், வறுமைக்கான காரணங்கள், மாணவர் கல்விப் பாதிப்பு போன்ற விடயங்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன. மண்முனை தென்மேற்குபிரதேசசமுர்த்திதலைமையக முகாமையாளர் இ.குணரெத்தினம் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் சுமார் 520 மாணவர்கள் கலந்துகொண்டனர். மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகமும், சமுர்த்தி திணைக்களமும் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

(ஐ-10)

# ஆசிரிய உதவியாளர் நியமனம் எதிர்காலத்தில் வழங்கப்படாது

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



நுவரெலியா, ஜூலை 13
எதிர்காலத்தில் ஆசிரியர் உதவியாளர்கள்நியமனங்கள் வழங்கப்படாது. இந்த நியமனத்தில் பல குளறுபடிகள் நிலவுகின்றன. இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களை அண்மித்த தமிழ் மொழி மூலப்பாடசாலைகளுக்கான உதவி ஆசிரியர்கள் 113 பேருக்கான நியமனங்கள் கல்வி அமைச்சில் வைத்து நேற்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த சில நாள்களுக்கு முன்பு பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பாகஎனக்குமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக கல்லூரியின் பீடாதிபதியிடம் தொடர்புகொண்டுவிடயங்களைகேட்டறிந்தேன். கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் எந்தக் காரணம் கொண்டும் பகிடிவ்தையில் ஈடுபட முடியாது. அவ்வாறுஈடுபட்டால் அவர்களது குற்றம் நிருபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்படும்.

தங்களுடைய சக மாணவர்களுக்குப் பகிடிவதை செய்வது எந்த விதத்திலும் நியாயமானதுஅல்ல. - என்றார்.

(ஐ-10)

# கட்டுப்பாட்டை இழந்தது டிப்பர்; இருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 13
மணல்ஏற்றிச்சென்றடிப்பர்வாகனம்வேகக்கட்டுப்பாட்டை இழந்து, சாலையில் தரித்து நின்ற பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த இருவர் கிளிநொச்சி மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சிப் பகுதியில் மணல் ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த போது விபத்து நடைபெற்றது. வாகனத்தின் சாரதியும், அவருடன் டிப்பரில் பயணித்த உதவியாளருமே காயமடைந்தனர். விபத்தில் டிப்பர் வாகனத்தின் முன் பகுதி முழுமையாகச் சேதமைடைந்துள்ளது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

(ஐ)



# டெங்கு ஒழிப்புத் திட்டம் நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 13
நாடாளவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முதற்கட்டமாக நேற்றுஆரம்பித்துவைக்கப்பட்டது. ஏற்கனவே விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட வேலைத்திட்டம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை முன்னெடுக்கப்பட்டது. நிதி மற்றும் ஊடக அமைச்சு, சுகாதார அமைச்சு, அரச தகவல் திணைக்களம், சகல ஊடக நிறுவனங்களும், தொலைபேசி நிறுவனங்கள் ஆகிய இணைந்து இந்தவேலைத்திட்டத்தைமுன்னெடுத்தன. டெங்குநோய்தொடர்பான விழிப்புணர்வுநிகழ்வுகளைத்தயாரித்து அனைத்து ஊடகங்களும் மக்களுக்குத்தெரியப்படுத்தவேண்டும்என்றுஊடகஅமைச்சுதெரிவித்துள்ளது. அதேவேளை இந்த வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## லயன்ஸ் கழக நிர்வாகிகளின் பதவியேற்பு,கழகப் பிரார்த்தனை தமிழ்மொழியில் நடைபெற்றன

சாவகச்சேரி, ஜூலை 13
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 39 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது. அதில் கழக நிர்வாகிகள் பதவியேற்பும் கழகப் பிரார்த்தனையும் இந்த முறை தமிழ் மொழியில் நடத்தப்பட்டன.
கழகத் தலைவர் லயன் இ.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக நீர்கொழும்பு ஒரியன்ற் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட முதலாவது ஆளுநர் லயன் பீற்றர் தேவா கலந்து கொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக 306 பி1 மாவட்ட ஆளுநரின் பிரதிச் செயலாளர் லயன் சுந்தரேஸ்வரன் மாவட்ட முதன்மை இணைப்பாளர் லயன் வ.சிறிபிரகாஸ் பிரதிப் பொருளாளர் தி.உதயசூரியன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக பிராந்தியத்தலைவர்லயன்பு.தினேஸ் குமார் வலயத் தலைவர் லயன் க.தர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
லயன்ஸ் கழக விதிமுறைகளின் பிரகாரம் வருடாந்தம் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு அந்த வருடத்தின் உப ஆளுநர் முன்னிலையில் நடத்தப்பட்டு அவரே புதிய நிர்வாகிகளுக்கு ஆங்கிலத்தில் பதவியேற்புச் செய்து வைப்பது வழமை. கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்ற சாவகச்சேரி லயன்ஸ் கழக நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட லயன் பீற்றர் தேவா கழக நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வை தமிழில் நடத்தினார். கழக பிரார்த்தனையும் இந்தமுறை தமிழ் மொழியில் ஆற்றப்பட்டது.
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்ற லயன் சிசில் றெமீடியஸ் புதிய திட்டங்களாக டெங்கு கட்டுப்பாடு, பொலித்தீன் பாவனை கட்டுப்படுத்தல், பூமி வெப்பமடைவதைத் தடுக்க மரக்கன்றுகளை நடுதல், மக்களின் தேவைகளை அறிந்து உதவுதல், போதையற்ற சமூகத்தை உருவாக்குதல், கழகத்துக்கு நிரந்தர அலுவலகம் அமைத்தல் போன்றவற்றை அறிவித்தார்.
அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளிக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. டெங்குக் கட்டுப்பாட்டு மருந்து வகைகளை மீசாலை கமலாம்பிகை பாடசாலைக்கு வழங்கல், நியுபவர் விளையாட்டுக் கழகத்துக்கு உதவி வழங்கல், போசாக்குக் குறைந்த கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவுப் பொதி வழங்கல், பொது அமைப்புகளுக்கு மரக்கன்றுகள் வழங்கல் மற்றும் மூக்குக்கண்ணாடி வழங்கல் போன்ற நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.
(4-9)

கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள்

# உணவு மற்றும் மாத்திரைகளை உட்கொண்ட பின் வரவேண்டும்

## சாவகச்சேரி மருத்துவமனை அறிவிப்பு

சாவகச்சேரி ஜூலை 13
மருத்துவமனையில் கிளினிக்குக்கு வரும் நோயாளர்கள் கட்டாயம் கிளினிக்குக்கு வழங்கப்பட்ட மாத்திரையை காலையில் உட்கொண்ட பின்னர் வைத்தியசாலைக்கு வருமாறு சாவகச்சேரி மருத்துவமனையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
"காலையில் கிளினிக் ஆரம்பமாவதையடுத்து கிளினிக் நோயாளர்கள் காலையிலேயே மருத்துவமனைக்கு வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் காலை நேர மாத்திரைகளை உட்கொள்ளாமல் வருவதால் அவருக்கு குருதி அழுத்தம் அதிகரித்துக்காணப்படுவதுடன் சிலர் மயக்கமடைந்து விடுதிகளில் அனுமதிக்கும் நிலை உருவாகிறது. இதனைத் தவிர்க்க கிளினிக் வரும் நோயாளர்கள் காலை உணவருந்திவிட்டு கட்டாயம் காலைக்குரிய மாத்திரையை உட்கொண்டுவிட்டு வருகை தரவேண்டும். காலையில் உணவு உட்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவோர் காலைத் தேநீருடன் மாத்திரையை உட்கொண்ட பின்னர் வருகை தரவேண்டும். கிளினிக்கில் பங்குபற்றும் கடைசி நோயாளர் வரை மருத்துவர்கள் கடமையில் இருப்பார்கள் என்பதால் கிளினிக் நோயாளர்கள் அவசரப்படாமல் மாத்திரைகளை உட்கொண்டு விட்டு வருகை தர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் மருத்துவமனைக் கிளினிக் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றதெனவும் தூர இடங்களிலிருந்து காலையில் புறப்படும் பேருந்துகளில் வரும் நோயாளர்களின் நலன்கருதி இரவுக் கடமையில் இருக்கும் மருத்துவர்கள் மூலம் காலை 6.30 மணிக்கு கிளினிக் நடாத்தப்படுகிறது. இதனால் நோயாளர்கள் சிலர் காலை மருந்து உட்கொள்ளாமல் வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(21-9)



யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற்பூங்காவில் தங்கி வாழ்கின்ற மாற்றுத்திறனாளிகளின் தேவை கருதி மன் விசிறிகள் கையளிக்கப்பட்டுள்ளன. கைதடி தெற்கைச் சேர்ந்த இராசேந்திரன் பிருந்தாபன் என்பவரினால் சங்கத்தின் தலைவர் எஸ்.மகேந்திரனிடம் அண்மையில் இந்த மின் விசிறிகள் கையளிக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டது. (21)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 13
புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை கலையரங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி, பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்து கொள்வார். பரிசில்களை யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறை மூத்த விரிவுரையாளர் திருமதி சிறிசங்குணராசா வழங்கி சிறப்பிப்பார் என தெரிவிக்கப்பட்டது. (21-35)

## பரிசளிப்பு விழா நளை

பொன்னாலை, ஜூலை 13
பொன்னாலை வதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
வித்தியாலய அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமாரும் மதிப்புறு விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (நடனம்) திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசனும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:
(21)

## வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 13
நெல்லியடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணமாவட்டச் செயலாளர் என்.வேதநாயகன் கலந்து கொள்வார்.
பரிசில்களை திருமதி பிரதீபா வேதநாயகன் வழங்கிச் சிறப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(21-35)

## விபத்தைத் தடுக்கதவறிய சாரதியிடம் ரூபா 18 ஆயிரம் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், ஜூலை 13
விபத்தைத் தடுக்கத் தவறியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவருக்கு 18 ஆயிரம் ரூபா தண்டம் சாரதிக்கு விதிக்கப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.
சந்தேகநபருக்கு எதிராக விபத்தைத் தடுக்கத் தவறியமை, அவதானமின்றி வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.
குற்றச்சாட்டுக்களைச் சந்தேகநபர் ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 18ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
(4-12)

## சாரதிப் பத்திரமின்றி வாகனம் ஓடியவருக்கு ரூ. 4 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 4ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில்நேற்றுவிசாரணைக்கு வந்தது.
குற்றச்சாட்டைச் சந்தேகநபர் ஏற்றுக் கொண்டதனால் தண்டமாக 4 ஆயிரம் ரூபா செலுத்துமாறு மன்று உத்தரவிட்டது. (4-2)

## கோட்டக் கல்வி பணிப்பாளராக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாண கல்வி அமைச்சால், நவாலி மகாவித்தியாலய அதிபர் த.மாதவன், வலிகாமம் வலய உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடந்த திங்கட்கிழமை முதல்நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.
986 முதல் இன்றுவரை தொடர்ச்சியாக நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பிரபல பாடசாலைகளில் 32 வருடங்கள் ஆசிரியர், அதிபராகக் கடமையாற்றிய இடவர் கொழும்பு கல்வி அமைச்சின்வெளிநாட்டுப் புலமைப் பரிசில் பெற்று ஸ்ரேல் நாட்டில் பாடசாலை முகாமைத்துவப் பயிற்சி பெற்றவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(21)

## 110 ஆவது அண்டு நிறைவு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணம் புனித ஹென்றியரசர் கல்லூரியின் 110 ஆவது அண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. 1907 ஆம் ஆண்டு றோமன் கத்தோலிக்க மிசனினால் , ஆண் பிள்ளைகளுக்கான ஆங்கிலப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் புனித ஹென்றியரசர் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழா அதிபர் ஜோ.அ. யேசுதாஸ் அடிகளார் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பித்து புனித ஹென்றியரசர் திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் நிறைவடையவுள்ளது . இவ் விழாவில் பழைய மாணவர்களும் கல்லூரி நலன்விரும்பிகளும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.
(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின்

# வெடிபொருள்கள் அவதானம்

யாழ்ப்பாணம் ஜூலை13
இராணுவத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட வலிவடக்கு மயிலிட்டிப் பகுதிக்கு செல்லும் மக்கள் வெடி பொருள்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அங்கு எச்சரிக்கை பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.
இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த 27 வருடங்களாக இருந்த மயிலிட்டிப் பகுதி கடந்த வாரம் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டது.
விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது காணிகளை மக்கள் சென்று பார்வையிட்டுசிரமாதமுயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். இந்த நிலையிலேயே குறித்த விளம்பர பதாகை தொங்கவிடப்பட்டுள்ளது.
"மிதிவெடி,வெடிபொருள்களில் இருந்து எமது மக்களை பாதுகாப்போம்" என்று இந்த எச்சரிக்கை பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.
குறித்த பகுதிகளில் வெடிபொருட்களை கண்டால் கீழ் கண்ட தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதில் சொன்ட் நிறுவனத்துக்கு 0212226700 என்ற தொலைபேசி இலக்கமும், ஹலோ ரெஸ்ட் நிறுவ னத்துக்கு 0212223779 என்ற இலக்கமும், பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துக்கு 0212285415 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி வெடிபொருட்களை கண்டால் உடனடியாக அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.
இராணுவத்தினர் வசம் இருந்து விடுவிக்கப்படும் இடங்களில் இருந்து கடந்த காலங்களில் இருந்து இன்று வரை பெருமளவான வெடி பொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றன. தையிட்டி பகுதியில் பொதுமக்களின் கிணறுகளில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தன. எனவே பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் இவ்வாறான பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.
(21-8)

### ஒட்டுசுட்டானில்

# யானை அட்டகாசம்

## நூலிழையில் தப்பினர் குடும்பத்தினர்

முல்லைத்தீவு, ஜூலை13
காட்டு யானையின் அட்டகாசத்தால் வீட்டின் உரிமையாளர்கள் நூலிழையில் உயிர் தப்பினர், வீட்டை உடைத்த யானை அங்கிருந்த 5 மூடை நெல்லை நாசமாக்கிச் சென்றது. யானையினுடைய அட்டகாசத்தால் கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் ஒட்டுசுட்டான் பேராறு கிராமத்தில் இடம்பெற்றது.
சம்பவம் பற்றி தெரியவருவதாவது, " ஒட்டுசுட்டான் பேராறு கிராம அலுவலர் பிரிவில் அருளம்பலம் சூரியகுமார் என்பவரது வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் வந்த யானை வீட்டு யன்னல் சுவரை உடைத்து அங்கு உணவுக்காக வைக்கப்பட்டிருந்த 5 நெல் மூடையினை உண்டு, அவற்றைச் சிந்தி நாசம் செய்தது. யானையினுடைய சத்தம் கேட்டு எழுந்த வீட்டின் உரிமையாளர்கள், பயத்தால் அலறியடித்துச் சத்தம் போட்டனர். சத்தத்தைக் கேட்ட யானை அங்கிருந்து அசையாது வீட்டைச் சுற்றி நோட்டமிட்டது.
இதன் காரணமாக உரிமையாளர்கள் யானையின் கண்ணில் தெரியாத வாறு வீட்டில் இருந்து தப்பித்துச் சென்றனர். இதனால் அவர்கள் நூலிழையில் உயிர் தப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
"கடும் வறட்சியால் நீரை பெற்றுக் கொள்வதற்காக காட்டுக்குள் இருக்கும் யானைகள் சாதாரணமாக மக்கள் குடிமனைக்குள் படையெடுக்கின்றன. இதனால் சொத்து இழப்புக்கள் ஏற்படுவதுடன், உயிர் சேதங்களும் ஏற்படுமோ என அஞ்ச தோன்றுகின்றது. எனவே இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களது வாழ்வாதாரத்தை காப்பாற்றுங்கள், உயிர்ச் சேதங்கள் ஏற்படாத வாறு தடுக்க முன்வாருங்கள் என்றுற மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
(21-500)

# அரச தலைவராக கோத்தா வந்துவிடுவார் என அச்சம்

### அதனாலேயே அவரைக் கைது செய்ய அரசு திட்டம் என்கிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜூலை 13
2020 இல் கோத்த பாய அரச தலைவர் தேர்தலில் போட்டி யிடப் போகின்றார் என்ற பயத்தின் காரணமாக அவரைக் கைது செய்து சிறை யில் அடைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று மகிந்த அணி நாடாளு



>> 24

# போர்க்குற்ற நீதிமன்றம் அமைக்கப்படுவது உறுதி

### *அதன் மூலம் மகிந்தவுக்குத் தண்டனை அரசின் திட்டம் அதுவே என்கிறார் விமல்*

கொழும்பு, ஜூலை 13
பலவந்தமாகக் காணாமற்போவதைத் தடுக்கும் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் அதன் அடிப்படையில் இலங்கையில் முத



>> 24

# கைப்பணிக் கைத் தொழிலில் பணிளார்களுக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடும் பணியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான தேசிய மடடத்திலான கண்காட்சி போட்டிகள்இடம்பெறஉள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
"தேசிய அருங்கலைகள் பேரவையால் முன்னெடுக்கப்படும் "சில்ப" எனும் கண்காட்சியும் போட்டியும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4 ஆம் வாரம் மாகாண வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்டவுள்ளது. இதில் தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசியமட்ட "சில்ப அபிமாணி 2017" போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். தமது ஆக்கங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு தயார்நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
கைத் தொழில்களை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தமது பிரிவு பிரதேச செயலகத் தொழிற்துறைத் திணைக்க்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது மாவட்ட செயலகத்தில் உள்ள தேசிய அருங்கலைகள் பேரவையின் உத்தியோகத்தர்கள் மூலமாக தொடர்பு கொண்டு தங்கள் ஆக்கங்களைக் கையளிக்கு முடியும் ஆக்கங்களின் வகைகளாக கைத்தறிநெசவு உற்பத்திகள், களிமண் உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருள்கள், ஆபரணங்கள் (உலோக, கற்பதித்த நானாவித ஆபரணங்கள்), முகமூடிகள் மற்றும் பாவைகள், சங்கீத உபகரணங்கள், துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருள்கள் (தையல் எம்புரொயிடர், இயந்திர எம்புரொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு), பற்றிக், ரேந்தை, மர உற்பத்திப் பொருள்கள், தோற் பொருள்கள், கற்கள் மூல கைப்பணிப் பொருள்கள், பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை பனை, கித்துள் சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருள்கள் (கடதாசி, பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருள்கள், சிப்பி ஒடுகள், பல தரப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள்கள்), நினைவுச் சின்னங்கள் என்பனவாகும். என யாழ்ப்பாண மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.
(21)

# தொல்புரம் வாசிகசாலைக்கு ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கீடு

தொல்புரம் மத்தி சனசமூக நிலையம் மற்றும் வாசிகசாலையின் உட்கட்டுமான அபிவிருத்திக்காக தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் ஒரு மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது.இதற்கான மதிப்பீட்டை உடன் தயாரித்து வழங்குமாறு வலி.மேற்கு பிரதேச செயலாளர் செல்வி எஸ்.பிறேமினி கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை மேற்படி சனசமூக நிலையத்துக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியின் கீழ் ஒரு லட்சம் ரூபா கிடைத்துள்ளதாக சனசமூக நிலையத்தின் தலைவர் சி.முத்துராசா தெரி வித்தார்.
(21-50)

## மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வும் நாளை

தென்மராட்சி கல்வி வலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வும் பதவியேற்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
வலய மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதி செயலாளர் நாயகமாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான த.கிருபாகரன், திருமதி சி.சிவநாதன், நா. கந்ததாசன் ஆகியோர் கடமையாற்றுவர்.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கொழும்பு கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராய்ச்சியும் சிறப்பு விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் வை.ஏ. என்.டி. யாப்பா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உத யகுமார், வேள்ட் விஷன் லங்கா நிறுவன தேசிய பணிப்பாளர் தனன் சேனாதிராஜா மாண வர் நாடாளுமன்ற வழிகாட்டலும் ஆலோசனையும் அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.ஏ. டபிள்யு.ஆர்.பத்மசாந்த, வேள்ட் விஷன் நிறுவன வடக்டகு -கிழக்கு வலயங்களின் முகாமையாளர்களான ஜெ.ரமேஸ்குமார், ஜெ.ஜெயராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.
வலயத்தில் உள்ள 24 பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது
(21-9)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கொலையின்...

முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவத்தில்சந்தேகநபராகக்குற்றஞ்சாட்டப்படும் சஞ்சீவன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் தந்தையார், தனது வீட்டுக்குள் புகுந்து பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பத் தேவை என்று முறையிட்டுள் ளார்.
தமது பேருந்துகள் சிலவற்றுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.
சாலை ரோந்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தமது வாகனம் சேதமாக்கப்பட்டுள்ளதாகச் சிறப்பு அதிரடிப்படையினர் ாகநெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.
இவை மட்டுமன்றி ஏனைய வன்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-26)

## சைக்கிளில்...

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. துவிச்சக்கர வண்டியில் பெண் பயணித்துக்கொண்டிருந்த போது, துவிச்சக்கர வண்டியின் கூடையில் இருந்த அவரது கைப்பையை தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் வந்த 3 இளைஞர்கள் பறித்தெடுத்துச் சென்றனர். கைப்பையில் ஒரு தொகைப் பணம் மற்றும் ஆவணங்கள் என்பன இருந்தன என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் இடம்பெற்ற வீதி ஆள் நடமாட்டம் கூடிய பகுதியாகக் காணப்படுகின்றது போதும் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
(வ)

## கடலில்...

கடற்படையினரால் மீட்கப்பட்டது.
"கிழக்கு பிராந்திய கடற்படையினர் நேற்று முன்தினம் வழக்கமான கடல் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு மீனவர்களால் அவசர அழைப்பு விடுக்கப்பட்டது. முல்லைத்தீவு கொக்கிளாயிலிருந்து 8 கடல் மைல்கள் தூரத்தில் கடலில் யானை ஒன்று உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாக மீனவர்களால் கூறப்பட்டது.
யானையை மீட்கும் பணியில் கடற்படைக்குச் சொந்தமான அதிவிரைவு தாக்குதல் படகு மற்றும் செட்ரிக் படகுகளுடன் கடற்படை சுழியோடிகள் ஈடுபட்டனர். அத்துடன் வன உயிரினங்கள் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்றும் அந்த மீட்பு பணிகளில் இணைந்து செயற்பட்டனர்.
கடற்படை மற்றும் வன உயிரினங்கள் திணைக்கள அதிகாரிகள் குழுவினரது பெரும் முயற்சியில் அந்தக் காட்டு யானை புல்மோட்டை யானு ஓயா பிரதேச கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தப் பகுதிக்குப் பொறுப்பான வன உயிரினங்கள் திணைக்கள அதிகாரிகளிடம் யானை கையளிக்கப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் திணைக்களங்களின் பதவி ஆளணியை அதிகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## சு.க. அமைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

"வடக்கு மாகாணத்திலுள்ள சகல பதவி ஆளணிகளுக்குமான வெற்றிடங்களை அதிகரிக்கும் நடவடிக்கையை கொழும்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. அதற்கு வடக்கு மாகாண தலைமைச் செயலாளர், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் திணைக்களத் தலை வர்கள் ஆகியோர் ஒத்துழைக்க வேண்டும்"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேலைதேடும் பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் வடக்கு மாகாணத்திலுள்ள சகல திணைக்களங்களின் ஆளணியை அதிகரிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட சகல திணைக்களங்களுக்கும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. பட்டதாரிகளைக் கொண்ட அபிவிருத்தி உதவியாளர்களுக்கான ஆளணிகளை 2013ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் குறைத்துள்ளது. இதனாலேயே அரச தலைவர் மைத்திபால சிறிசேன பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தபோதும் அதனை நிறைவேற்ற முடியவில்லை.

மாகாணங்களில் வேலைதேடும் பட்டதாரிகள் 100 நாள்களுக்கு மேலாக சாலைகளில் போராட்டங்கள் நடத்துகின்றனர். தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வடக்கில் ஆளணி அதிகரிப்புக்கு விவரங்களைக்கோரி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும், செயலாளர்களும் இந்தத் தருணத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு பட்டதாரி அபிவிருத்தி அலுவலர்களுக்கான ஆளணிகளை அதிகரிக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு திணைக்களமும் தமது தகுதி விதிகளுக்கு ஏற்ப வேலைப்பளுக்களுக்கு மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு 25 முதல் 30 வரையான பட்டதாரி அபிவிருத்தி அலுலர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் செயற்திட்டத்துக்கு வடக்கு மாகாண தலைமைச் செயலாளர், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண உறுப்பினர்கள், அரச திணைக்கள தலைவர்கள் முன்வந்தால் சாலையில் அலையும் பட்டதாரிகளுக்கு ஆளணி அதிகரிப்பு மூலமாக நன்மையளிக்கலாம்.

இதேபோன்று ஏனைய முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மற்றும் திணைக்களங்களுக்குப் பொருத்தமான ஆளணியை அதிகரித்து வடக்கு மாகாணத்தில் வேலைதேடும் பட்டதாரிகளுக்கு சகல துறைகளிலும் வேலை வழங்கி சுபீட்சத்தை ஏற்படுத்தலாம் - என்றார். (4-50)

# முல்லை. மாவட்ட செயலாளரின் மீது சாள்ஸ் எம்.பி. பாய்ச்சல்

> 1953 ஆம் ஆண்டு அந்த காணிகள் மக்களுக்கு 4 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது. அவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து போகும் போது அந்த காணிகளை வேறு நபர்களுடைய பெயர்களில் பதியப்பட்டுள்ளது. காணிக்குரிய மக்களுடைய அந்த 4 ஏக்கர் காணிகளை அவர்களுக்கே வழங்கு வதற்கு இணைத்தலைவர்கள் அடங்கலாக மாவட்ட செயலாளர் முயற்சி எடுக்க வேண்டும்

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவில் முஸ்லிம் மக்களை குடியேற்றுவதில் அக்கறை காட்டிய முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், தமிழ் மக்கள் மகாவலித் திட்டத்தில் பாதிக்கப்பட்டபோது மௌனித்திருந்தார் என்று நடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச்செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. முல்லைத்தீவில் காணிகளற்று உள்ள முஸ்லிம் குடும்பங்களைக் குடிய மர்த்துவதற்காகக் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று அமைச்சர் ரிசாட் பதியுதீன் கூட்டத்தில் தெரிவித்தார். இதனால் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளிடம் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. இதன் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகளின்றி வாழும் முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை நாங்கள் மறுக்கவில்லை. அவர்களுக்குக் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்குவதில் மாவட்டச் செயலாளர் காட்டிய அக்கறையை, மகாவலித் திட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஏன் காட்வில்லை? மீன்பிடியில் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்பட்ட போது ஏன் அக்கறை காட்டவில்லை?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

"மாவட்டச் செயலாளரால் அவருடைய அதிகாரத்தை மீறி ஒன்றுமே செய்ய முடியாது. இதற்கு மேல் அவரால் என்ன முடியும் என்று கூறுங்கள்?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸிடம் அமைச்சர் ரிசாட் கேட்டார்.

எழுந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், "மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக மகாவலி அதிகார சபைக்கு மேலதிக காணி ஆணையாளர் நாயகம் அனுப்பிய கடிதத்தை நான் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாட் மற்றும் அதிகாரிகளுக்குக் காண்பித்தேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதுவரைக்கும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த மக்கள் சாப்பிடுவதற்கு வழியின்றி உள்ளனர். அரிசி கொடுக்கின்றீர்களா? இல்லை, மகாவலி அபிவிருத்தித்திட்டத்துக்குட்பட்ட மக்களுடைய காணிகள் 4 ஏக்கர் என்று காணி உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இரண்டு ஏக்கர் காணி தான் எனக் கூறுகின்றீர்கள். மக்களுடைய காணிகளை கொள்ளையடிக்கின்றீர்களா? பறிக்கின்றீர்களா ? மக்களுடைய பிரதிநிதியாகத்தான் இங்கு நான் கேள்வி கேட்கின்றேன்" என ஆவேசமாகத் தெரிவித்தார்.

"1953ஆம் ஆண்டு அந்தக் காணிகள் மக்களுக்கு 4 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டன. அவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து போகும்போது அந்தக் காணிகளை வேறு நபர்களுடைய பெயர்களில் பதியப்பட்டுள்ளன. காணிக்குரிய மக்களுடைய காணிகளை அவர்களுக்கே மீள வழங்குவதற்கு இணைத்தலைவர்கள் அடங்கலாக மாவட்டச்செயலாளர் முயற்சி எடுக்க வேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

"இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது. அதில் காணியாளர் நாயகமும் வருகை தந்து கலந்து கொண்டிருந்தார். மகாவலி அதிகார சபைக்கு உள்பட்ட காணிகளில் பிரச்சினையிருக்கும் மக்களையும் அந்தக் கூட்டத்தில் அழைத்து கலந்துரையாடினோம். தமிழ் மக்களுடைய காணிகள் அவர்களுக்கே வழங்க வேண்டும் என்று காணியாணையாளர் தெரிவித்திருந்தார். இதற்கு மகாவலி அபிவிருத்தி திட்டத்தினரும் சம்மதிப்பதாக இருக்கின்றனர். ஆனால் சில வேளைகளில் அந்தக் காணிகள் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கிடையே பிரித்துக்கொடுக்கும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெறும்" என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (21)

# கலை முதற்தேர்வு ஓகஸ்ட் நடுப்பகுதியில்

யாழ்ப்பாணம், ஜுலை 13

கலைமுதற் தேர்வு 2014 (வெளிவாரி) பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது. "விண்ணப்பிக்கத்தவறிய பரீட்சார்த்திகள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். இந்தப் பரீட்சை எதிர்வரும் காலங்களில் நடைபெறமாட்டாது. இதுவே இறுதிச் சந்தர்ப்பம்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் கேட்டுள்ளார். (வ-4)

# செல்வந்தரின் மறியல் நீடிப்பு

பளையில் சிறுமிகள் மீதான துர்நடத்தையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட செல்வந்தரின் விளக்கமறியல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

பளைப் பகுதியில் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்படுவதாக பளைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஏப்ரல் 8ஆம் திகதி செல்வந்தர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் மேலதிக நீதிவான் திருமதி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது. (4-6)

# சிறுவர் இல்லங்கள் குறித்த நியதிச் சட்டத்துக்கு எதிர்ப்பு

## 27 பேர் கூடி மன்னாரில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

"சிறுவர் இல்லங்களைப் பேணுவதற்குப் பதிலாகச் சிறுவர் இல்லங்கள் மீது திணிப்பை ஏற்படுத்தி அந்த இல்லங்களை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையின் முதற்கட்டமே வடக்கு மாகாண சபையில் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டம் அமைந்துள்ளது"

இவ்வாறு வடக்கு மாகாண சிறுவர் இல்லங்களுடன் தொடர்புபட்ட 27 பேர் மன்னாரில் ஒன்றகூடி தீர்மானம் எடுத்துள்ளனர்.

"சிறுவர் இல்லங்கள் தொடர்பான வடக்கு மாகாண நியதிச் சட்டம் அண்மையில் வெளியானது.

வடக்கு மாகாண சிறுவர் இல்லங்களை முகாமை செய்வதற்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனை பொருத்தமற்றது. சிறுவர் இல்லங்களை நிர்வகிப்பதற்குப் பொருத்தமான வயதுடையவர்களும், சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுமே மிகப்பொருத்தமானவர்கள். சிறுவர் இல்லங்களை நிர்வகிப்பதற்கு 4 முகாமைத்துவக் குழுக்கள் நிர்வகிக்க நியதிச்சட்டம் வழிவகுக்கிறது. எனவே வடக்கு மாகாணச் சிறுவர் இல்லத் தலைவர், பணிப்பாளர் குழுவை அழைத்து கலந்தாலோசிக்காது நியதிச் சட்டத்தை உருவாக்கியது பொருத்தமற்றது. ஆனால் இல்லங்களை நிர்வகிப்பதற்கு ஒரு முகாமைத்துவ குழுவைக் கூட கொண்டு செல்வதற்கு பொருத்தமான ஆளணி கிடைக்கப் பெறுவதில்லை.

எனவே சிறுவர் இல்லம் தொடர்பான நியதிச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அதனுடன் தொடர்புபட்ட ஆணையாளர்கள் முன்வர வேண்டும். இதனைவிடச் சிறுவர் இல்ல தலைவர், செயலாளர்களை அழைத்து ஆலோசனை பெற்றே நியதிச் சட்டத்தை உருவாக்க வேண்டும்" என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-50)

# தென்னிலங்கை மீனவர்களால் முல்லை. மீனவர்கள் பாதிப்பு

## ஒருங்கிணைப்புக் குழுவிடம் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 13

தென்னிலங்கை மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தித் தொழில் செய்வதால் தமது தொழில் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

"தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக சாதாரண தொழிலை மேற்கொள்வதால் தமது தொழில் பாதிப்படைகின்றது. அண்மையில் முல்லைத்தீவுக்கு வருகை தந்த மீன்பிடித்துறை அமைச்சர், வெளிச்சத்தை பயன்படுத்தி தொழில் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அதில் ஈடுபடுவர்கள் கைது செய்யப்படுவர் என்று கூறியிருந்தார். ஆனால் தொடர்சியாக தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்" என்று கூட்டத்தில் மீனவர் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டின.

"மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர், மீன்பிடித்துறை அதிகாரிகள், தொழிலாளர்கள் அனைவரும் இணைந்து கலந்துரையாடி இது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படும்" என்று இணைத்தலைவர்களின் ஒருவரான அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார். (4-6)

# வணிகமாணி கற்கை விண்ணப்பத் திகதி ஜூலை 31 வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 13

வணிகமாணி (வெளிவாரி) கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. "2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை வணிகப் பிரிவில் தோற்றி 3 பாடங்களில் சித்தியடைந்த வர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்கள் www.Codl.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியூடாக பெற்றுக் கொள்ள முடியும்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மது பற்றிய உண்மைகள்



* மது மூளையின் செயற்பாட்டை மந்தப்படுத்துகின்றது.
* செயற்கையான மகிழ்ச்சிநிலையை ஆரம்பத்தில் ஏற்படுத்தினும் பின்னர் நடத்தை பிறழ்வுகளை ஏற்படுத்தும்.
* இறுதியில் தொழிற்பாட்டு மந்த நிலை ஏற்படுத்தி மயக்க நிலை சூழ்ந்த நித்திரை நிலையை ஏற்படுத்தும்.
* மது அருந்துபவர்களின் விகாரமான முகத்தை கொண்டே அவர்களை அடையாளம் காணமுடியும் மதுவை விளம்பரப்படுத்தும் நடிகர்கள் எவரும் தம் சொந்த வாழ்வில் மது அருந்துவதில்லை.
* மது அருந்திய சில கணங்களிலேயே அவர்கள் அசிங்கப்படுவதை காணலாம்.
* அருந்திய பின் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதையும் தெளிந்த பின் வருந்துவதையும் காண முடியும்.



*.தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை*

# இன்று முரண்படும் மக்கள் பிரதிநிதிகள் நாளை கட்டியணைத்துக் கொள்வார்கள்

## முல்லை. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாட் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 13
"மக்கள் பிரதிநிதிகள் இன்று முரண்படுவார்கள். நாளை அவர்கள் பேசிக்கொள்ளுவார்கள். மக்கள் அவர்களுக்கு சாதகமாக வாத்தைகளைவிட்டு மனச்சலிப்படைய வேண்டாம்"

இவ்வாறு முல்லைத்தீவு மக்களிடம் தெரி வித்தார் அமைச்சர் ரிசாட் பதியுதீன்.



முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாட்ட செயலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குழாமுறிப்பு பகுதியில் முஸ்லிம் மக்களை குடியேற்றம் செய்வதற்காக காணிகள் வழங்கப்பட உள்ளன என்று அமைச்சர் ரிசாட் பதியுதீனால் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 84 தமிழ் குடும்பங்கள் காணிகளின்றி உள்ளனர். அவர்களுக்கு காணிகள் வழங்கப்படாது, முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்கப்படுவது தவறானது. காணிகளை வழங்க வேண்டும் என்றால் இரண்டு இனங்களுக்கும் சேர்த்து வழங்க வேண்டும்" என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனால் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கும் இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜெனோபர் ஆகியோருக்கு இடையே கருத்து மோதல்கள் இடம்பெற்றன. மூவரும் கருத்துக்களால் மோதிக் கொண்டதால் கூட்டத்துக்கு தலைமை தாங்கி நடத்திய இணைத்தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் இடைநடுவில் கூட்டத்திலிருந்து வெளியேறினார். அவரோடு வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனும் அங்கிருந்து வெளியேறினார்.

> ரவிகரன் மட்டும் பேசவில்லை முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள் அதை கவனத்தில் கொள்ளுங்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 84 தமிழ் குடும்பங்களுக்கும் 902 முஸ்லிம் குடும்பங்களுக்கும் 270 சிங்களக் குடும்பங்களும் காணிகளின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் காணிகளை வழங்கும் வகையில் தீர்மானம் எடுக்க முற்பட்டவேளை மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கும் கொழும்பு அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

"கரைத்துரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 548 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு ஏற்கனவே காணி கச்சேரிகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. எனினும் தமிழ் மக்களுக்கான காணி விடயத்தில் எந்த அக்கறையும் செலுத்தவில்லை. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயம் என்ற திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை கையகப்படுத்தல், சட்டவிரோத மீன்பிடித்தொழில், காடழிப்பு போன்ற விடயங்களில் எந்தவித கரிசனையும் காட்டாத அமைச்சர் ரிசாட், இந்த விடயத்தில் மாத்திரம் அக்கறை செலுத்துவது பொருத்தமற்ற ஒன்று" என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது

வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரனுக்கும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜெனோபர் ஆகியோருக்கு இடையே சுமார் 57 நிமிடங்கள் நீடித்த கடும் கருத்து மோதல்கள் வாய்த்தக்கமாக மாறியதுடன், அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டன.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்களது வாழ்வாதாரத் தொழில்கள் குறித்து எந்தவித கரிசனைகளும் காட்டாத அரச தரப்பு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வெளியிடங்களில் இருந்து வருகின்ற பெரும்பான்மையினத்தவர்களுக்கு அனைத்தையும் வழங்கி வருகின்றனர்" என குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தப் பிரச்சனையின் போது வடக்கு மாகாண கிரராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலையிட்டு, "விகிதாசார அடிப்படையில் காணி வழங்குவதாக தீர்மானம் எட்டப்பட்ட நிலையில் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் சண்டை போடுவது தவறு" எனத் தெரிவித்தார். எனினும் து.ரவிகரன் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறாது தொடர்ந்து கருத்துக்களைத் தெரிவித்தார்.

"மாகாண அமைச்சர் பேசும் போது நியாயமில்லாமல் பேசாதீர்கள்" என்று அமைச்சர் ரிசாட் ரவிகரனை அதட்டினார். கூட்டத்தில் இருந்து எழுந்த பொது மக்கள் சிலர் "ரவிகரன் மட்டும் பேசவில்லை முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதை கவனத்தில் கொள்ளுங்கள்" என்றனர். அவ்வாறு பேசியவர்களை அடக்கிய அமைச்சர் றிசாட் "மக்கள் பிரதிநிதிகள் இன்று முரண்படுவார்கள். அவர்கள் நாளை பேசிக்கொள்ளுவார்கள். மக்கள் அவர்களுக்கு சாதகமாக வார்த்தைகளை விடவேண்டாம். வார்த்தைகளை விட்டு மனச் சலிப்படைய வேண்டாம்" என்று அதிகாரமாகக் கூறினார். (21)

# அரசியல் காழ்புணர்ச்சியின் வெளிப்பாடே வடமாகாண சபை மீதான குற்றச்சாட்டுக்கள்

## ஜி.ரி.லிங்கநாதன் விசனம்



வவுனியா, ஜூலை 13
"அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக செயல்படும் சிலரே வடக்கு மாகாண சபை இதுவரை ஒன்றுமே செய்யவில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்றனர்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பிர்னர் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகள், மாவீரர்களின் குடும்பங்களுடனான சந்திப்பு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் வவுனியா கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபை ஒன்றும் செய்யவில்லை எனக் கூறுகிறீர்கள். ஆனால் அப்படியல்ல. நிதி திரும்பிப் போவதாக கூறப்படுவதுகூட உண்மையில்லை. 98 வீதமான நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு வீதிகளாக இருக்கட்டும், மருத்துவமனைகளாக இருக்கட்டும், அம்புலன்ஸ் சேவையாக இருக்கட்டும் பல விடயங்கள் சீர் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பல நடந்தும் மாகாண சபை ஒன்றும் செய்யவில்லை எனக் கூறுகி றார்கள். அரசியல் காழ்புணர்ச்சி காரணமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக சிலர் சொல்கிறார்கள். சரி, பிழை இருக்கலாம். ஆனாலும் இதனை அரசியலாகப் பார்க்க வேண்டும்.

எங்களது காலம் இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. ஒரு நாள் வாக்களித்துவிட்டு எங்களை ஐந்து வருடங்கள் பேசாதீர்கள்.

உங்களுடைய பிரச்சனைகளை நிறைவு செய்யத் தான் எங்களை நீங்கள் தெரிவு செய்தீர்கள். ஆகவே நீங்கள் எங்களைப் பயன்படுத்தவேண்டும். உங்களது தேவைகள் என்ன என்று எங்களிடம் தெரிவியுங்கள் என்றார். (21)

# வடக்கு இளையோரின் தொழில் வாய்ப்புக்கு கனடா உதவிகளை வழங்கும்

## அந்த நாட்டுத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் உறுதி



யாழ்ப்பாணம் ஜூலை 13
"வடக்கு மாகாணத்தில் தொழிற்கல்வியுடன் இணைந்த துறைசார்ந்த அபிவிருத்திகளை மேம்படுத்தவும் இளையோருக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் கனேடிய அரசின் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும்" என்று இலங்கைக்கான கனேடியத் தூதுதர் ஷெல்லி வைற்றிங் தெரிவித்தார்.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை மையத்தின் எற்பாட்டில் 'வடக்கின் திறன் அபிவிருத்தி' என்னும் கருப்பொருளிலான ஒளிப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் இளையோர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புப் பிரச்சனை தொடர்பாக நாங்கள் நன்கு அறிவோம் .அவற்றில் நாம் எதிர்பார்க்கும் அளவிலான இளைஞர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்துவதற்குச் செயற்றிட்டங்களை முன்னேடுத்துள்ளோம்.

சுற்றுலாத்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், வியாபாரம், கடல் வளம் உள்ளிட்ட பொருளாதார ரீதியான துறைகளில் இளைஞர்களை வலுவூட்டுவதற்கான செயற்திட்டத்தில் எமது பங்களிப்பு விரைவாகக் கிடைக்கும். துறை சார்ந்த பயிற்சி நெறிக்காக 425 மாணவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர். அவற்றில் 80 வீதமான வர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையின் பொருளாதர்ர ரீதியான கட்டமைப்பை உருவாக்க இளைஞர்களுக்கான தொழில் முயற்சிக்கு கனேடிய அரசின் பங்களிப்பு இருக்கும் - என்றார். (4-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## Temporary Assistant Lecturer in Law

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the post of Temporary Assistant Lecturer in Law.

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;

OR

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

OR

3. (a) A Degree with specialization in the relevant subject without Honoursor any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

Salary Scale: Rs. 35,556/=p.m (fixed)

Closing date: 26.07.2017 (application should reach us on or before the given date)

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar
University of Jaffna
Jaffna

12.07.2017



# World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

## ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

- ★ All HND's are equal to NVQ Level 06
- ★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

## BSc (Hons) Quantity Surveying

RICS Accredited

» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

Progression Route to RICS: BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector



# அகில இலங்கை யாழ் நல்லூர் நாவலர் வீதி மடத்தடி சீரடி சாயி மந்திரில் நூதன பாபா விக்ரஹ பிரதிஷ்டா அஷ்டபந்தன திரிகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் – 13.07.2017

வாழிநின் அடியார் எல்லாம் வாழிநின் மகவு நரசிம்மனே
வாழிநின் அடிமைநின்தாள் போற்றும் வாரிசங்கள்
வாழி நின் மந்திர் மாயி வாழிநின் சாவடி பெருக்கே
வாழிநீயும் நின்தாளும் என் உள்ளக்கிடங்கை வாழியவே

*அன்பான அடியார்களே !*

நிகழும் மங்கலகரமான ஹேவிளம்பி வருஷம் ஆனித்திங்கள் 29 ஆம் நாளும் (13.07.2017) வியாழக் கிழமை சதுர்த்தித் திதியும் சதயநட்சத்திரமும் உள்ள காலை 7.29 மணிமுதல் 8.59 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் யாழ் நல்லூர் நாவலர் வீதி மடத்தார் பதி சீரடி சாயி மந்திரில் நூதன பாபா விக்ரஹ பிரதிஷ்டை செய்து மங்கல வாத்தியங்கள். வேதபாராணயங்கள் ஒலிக்க பக்தர்கள் நவவித பக்தி கொண்டு தொழுது நிற்க முப்பத்து முக்கோடி தேவர்கள் பூமாரி சொரிய கலியுக அவதாரமும் தத்தாத் திரேயே சொரூபமாக திகழும் சாயி நாதருக்கு மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது. எனவே அனைத்து அடியார்களும் வருகை தந்து சாயி நாதரை தரிசனம் செய்து இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### கிரியா விவரம்

*இன்று (13.07.2017) வியாழக்கிழமை மஹாகும்பாபிஷேகம் - அதிகாலை 5.30 மணிக்கு கங்கா பூஜை. ரக்ஷபந்தனம்*

*காலை 6.30 மணிக்கு 4ஆம் கால யாக பூசை ஸ்பரிசாகுதி இடம் பெற்று மஹாபூரணாகுதி யாககும்ப ஷோடசோபாசாரபூசை தேவாரபாராணயம். வேதபாராயணம். நாதகானம். மங்கலஆரத்தி. தீபாராதனை யாககும்ப புறப்பாடு. யாககும்பவீதி உலா. ஆலய பிரவேசம். மஹாகும்பாபிஷேகம். தசதர்சனம். மஹாஅபி ஷேகம். அலங்காரபூசை. அன்னதானம்.*

### மாலை நிகழ்வுகள்

*மாலை 5மணியளவில் வசந்தமண்டப பூசை திருஊஞ்சல் இடம்பெற்று சாயிநாதர். நவசக்திகணபதி. ஸ்ரீகர்பரட்சாம்பிகை தேவி ஆகிய மூர்த்திகள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதி உலா இடம் பெறும்.*

**வீதி உலா செல்லும் பாதை :**

**ஆலயம் ➡ மருதடி வீதி ➡ நக்கா வீதி ➡ இராசாவின் தோட்ட வீதி ➡ நாவலர் வீதி ஊடாக ஆலயத்தை வந்தடையும்.**

**உபயகாரர்கள்**
**திரு. ஸ்ரீ.மோகனதாஸ் (தேனுகளஞ்சியம்)**
பலாலி வீதி. திருநெல்வேலி

**உபயகாரர்கள்**
**திரு. பிரசாந்தன் (விஜிதா அரிசி ஆலை)**
தாவடி.

**விக்ரக நிர்மாணம்**
**சீர்டி**
**(மஹாராஷ்டிரா மும்பை)**

**தேவார புராணம் : திருமதி ஆ.பானுஜா**

*அனைவரும் வருக ! சாயி நாதன் அருள் பெறுக !*

" சீரடி சாயி மந்திர் "
314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.
077 722 2568

ஆலயத்தினர், உபயகாரர்கள்
பக்தர்கள்.

# பெறுகை அறிவித்தல்
## காரைநகர் பிரதேசசபை,காரைநகர்
### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை-2017

01. தலைவர். பெறுகைக்குழு.காரைநகர் பிரதேசசபை.காரைநகர்அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப் பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்ப டுகின்றன.

02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகா ணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும்; கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் காரைநகர் பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை வலந்தலை. காரைநகரில் அமைந்துள்ள காரைநகர் பிரதேச சபையில் 13.07.2017தொடக்கம் 02.08.2017 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை. மீளளிக்கப் படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 03.08.2017 ஆம் திகதி பி.ட 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர். பிரதேசசபை பெறுகைச் குழு. காரைநகர் பிரதேசசபை,காரைநகர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதி நிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் காரைநகர் பிரதேச சபை. தலைமை அலுவலகத் தில் 24.07.2017 ஆம் திகதியன்று பி.ப 02.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | மாப்பாணவூரி வீதிபுனரமைப்பு (தார்) | 2.11 | 02 மாதம் | C8 | 21,000.00 |

**தலைவர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**காரைநகர் பிரதேசசபை**
**காரைநகர்.**
**12.07.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு
26 . 08 . 1946

இறப்பு
25 . 05 . 2016

### விஸ்வலிங்கம் பாலசிங்கம்

ஆண்டு ஒன்று ஆயினும் அன்பு முகம் – மறக்கவில்லை
இன்றும் உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசி பிரகாசித்த நீங்கள் இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

51/4. பொற்பதி வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.


# பாதுகாப்புச் செயலருடன் அமெ. துணைத் தூதர் பேச்சு



இலங்கையின் புதிய பாதுகாப்புச் செயலராகப் பொறுப்பேற்றுள்ள கபில வைத்தியரத்னவை, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியும், துணைத் தூதுவருமான ரொபேர்ட் ஹில்டன் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இரு தரப்பு மற்றும் பரஸ்பரம் ஈடுபாடுள்ள விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ரொபேர்ட் ஹில்டனுடன், அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த 4ஆம் திகதி பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்ட பின்னர் கபில வைத்தியரத்னவை முதலில் ஜப்பானியத் தூதுவர் சந்தித்துப் பேசியிருந்தார். அதையடுத்து, அமெரிக்காவின் இராஜதந்திர விவகாரங்களுக்கான அதிகாரி ரொபேர்ட் ஹில்டன் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். (த)

# கடலில் தத்தளித்த யானையை காப்பாற்றினர் கடற்படையினர்



கொழும்பு, ஜூலை 13

காலிப் பகுதியிலுள்ள ஆழ்கடலில் ஆபத்தில் சிக்கியிருந்த யானையொன்று கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளது.

கிழக்குக் கடல் எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினராலேயே நேற்று முன்தினம் இந்த யானை காப்பாற்றப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பிரதேசத்தில் கொக்குத்தொடுவாயில் இருந்து 8 கடல்மைல் தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்ட யானையே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வேகத் தாக்குதல் படகினால் இந்த யானை அடித்து செல்லப்படுவது முதலில் கண்காணிக்கப்பட்டுள்ளது.

பின்னர் யானையைக் காப்பாற்றுவதற்காக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட மற்றுமொரு தாக்குதல் படகில் கடற்படைக் குழு விரைவாக அந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளும் இணைந்துள்ளனர். அவர்களின் ஆலோசனைக்கமைய கடற்படையினரினால் யானையைக் காப்பாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கயிற்றைப் பயன்படுத்தி அவர்கள் ஆழ்கடலில் சிக்கியிருந்த யானையைக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

யானை புல்மூட்டை, யான்ஓய பிரதேசத்திற்கு அழைத்து வரப்பட்டு வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (த)

# மஞ்சத்தொடுவாயில் படகுகள் திருத்தும் நிலையம் விரைவில்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை13

மட்டக்களப்பு, மஞ்சத்தொடுவாய் வாவியில் மீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன்பிடி படகுகளைத் திருத்துவதற்கான நிலையமொன்றை அமைப்பதற்கு கடற்றொழில் மற்றும் மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர அனுமதி வழங்கியுள்ள நிலையில், அதற்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து தனக்கு அவசரமாக அனுப்பி வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி மற்றும் நன்னீர் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருக்கு மீன்பிடி மற்றும் நன்னீர் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பு பகுதியிலுள்ள மீனவர்களுக்குப் படகுகளைத் திருத்துவதற்கான நிலையமொன்று இல்லாமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மீனவர்களது படகுகள் திருத்துவதற்கோ அல்லது வேறு ஏதேனும் தேவைகள் ஏற்படும் பட்சத்திலோ வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அல்லது ஒலுவில் துறைமுகத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எரிபொருள் விரயம், காலதாமதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை மீனவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பு, பூநொச்சிமுனை மீன்பிடி சங்கம் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து, அவர் இது குறித்து கடற்றொழில் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவின் கவனத்துக்குக்கொண்டு சென்றிருந்தார்.

இந்த நிலையில், அண்மையில் மட்டக்களப்புக்கு பயணம்செய்த அமைச்சர் அமரவீர உள்ளிட்ட அவரது அமைச்சின் உயர் அதிகாரிகளை மஞ்சத்தொடுவாய் பகுதிக்கு அழைத்துச் சென்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், அப்பகுதி மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை எடுத்துரைத்தார். பின்னர், மஞ்சத்தொடு வாய் பகுதியில் மீன்பிடிப் படகுகளை திருத்து வதற்கான நிலையமொன்றை அமைத்துத் தருவதாக வாக்குறுதி வழங்கிய அமைச்சர் அமரவீர, அதனைநிர்மாணிப்பதற்கான இடத்தையும் பார்வையிட்டார். (த)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
26 . 06 . 1958

மறைவு
25 . 06 . 2016

அமரர்

### துரைரத்தினம் திருக்கேதீஸ்வரன்

அன்பின் திரு உருவே
ஆண்டு ஒன்று சென்றது ஐயா
இன்னும் துயர் தீரவில்லை
ஈரவிழிகளில் நீர் சுமந்து
என்றும் நாம் காத்திருப்போம்.

தங்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நாவற்கட்டை,
கோப்பாய் வடக்கு.

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சங்கரப்பிள்ளை



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சங்கரப்பிள்ளை 12.07.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும் பரமேஸ்வரியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மரிய ஞானசீலனின் (தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர்) அன்பு மாமனாரும் சுதர்சினி (கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி), சுதறட்சன் (டுபாய்), சுதயூட்சன் (கனடா) அகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்குகட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
ம.பரமேஸ்வரி (மகள்)

0213217919



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02 . 04 . 1928

மறைவு
24 . 06 . 2016

### அமரர் சிவகுரு சபாபதிப்பிள்ளை J.P

திதி:- அபரபக்க சதுர்த்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் சேர்ந்துவிட்ட தெய்வமே!
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவுத் துயர்
[illegible] இறைஞ்சுகின்றோம்

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலித் துறைமுகத்தில் மிதக்கும் மின் நிலையம்

காலித் துறைமுகத்தில் 100 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மிதக்கும் மின்சார நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக மின் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கப்பலில் பொருத்தப்பட்ட, எரிபொருளில் செயற்படும் மின்உற்பத்தி நிலையம் ஒன்றைக் காலித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கும் திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது. காலித் துறைமுகத்தில் மிதக்கும் மின் நிலையத்தை அமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் ஓகஸ்ட் மாதம் கோரப்படும். 2019அம் ஆண்டு இதன் கட்டுமானப் பணிகள் முடிவடையும் என்றும் அவர் கூறினார். (த)

**உணவகம் வாடகைக்கு**

உணவகம் நடத்துவதற்குரிய உணவகம் பொருள்களுடன் வாடகைக்குண்டு மற்றும் உணவகத்துக்குரிய பொருள்கள் விற்பனைக்கும் உண்டு. குறைந்த முற்பணம், வாடகை

**076 574 8981** (CS 5749) (14)

**Group/personal Class**

Home visit - Eng/Tamil Medium
Accounting - Gr 10, O/L, A.L
English Language - Any grade

**077 331 6402**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய
கோயில் ஆலய சூழலில்
வசித்து வழிபடுபவருமாகிய

**திரு. மகாலிங்கம் ஞானசம்பந்தன்**

யாழ் கொக்குவில் இந்துக்-
கல்லூரியில் அதிபராக
பதவி ஏற்றுக் கொண்டதையிட்டு ஆலய நிர்வாக சபை
சார்பாக வாழ்த்துகின்றோம்.

**பரிபாலனசபை**
**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்**
**கொக்குவில்.**

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

அங்கர் பாதுகாப்பு சேவையின் கீழ் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்றமாவட்டங்களில் அரச நிறுவனங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தராக வேலை செய்ய விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களுடன் இம் மாதம் 17, 18, 19, 20, 21 ஆம் திகதிகளில் அலுவலக நேரமான காலை 8.30 முதல் பிற்பகல் 4.30 வரை எமது அலுவலகமான அங்கர் பாதுகாப்பு சேவை இலக்கம் - 255 B புகையிரத நிலைய வீதி, குருமன்காடு, வவுனியா என்ற முகவரியில் நேரடியாக சமர்ப்பித்து வேலையினை பெற்றுக் கொள்ள முடியும். வயது எல்லை 20 தொடக்கம் 65 வரை

**உரிமையாளர் : அங்கர் பாதுகாப்பு சேவை**
**வவுனியா.**

**077 239 2850/ 24 222 8169**

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 இல் பிறந்த பூராட நட்சத்திரம் உடைய நற்குணமுள்ள 6வருடம் மலேசியாவில் பணிபுரிந்து தற்போது யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

**077 356 2913**

**நவாலி களையோடை**
**கண்ணகை அம்மன் ஆலயம்**
**ஆடிப் பூரம்**

ஆடிப் பூரத்தை முன்னிட்டு நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பத்து நாள்கள் அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகம், பூசைகள் நடைபெற உள்ளன.

♦ 17.07.2017 - 25.07.2017 வரை தினமும்
முற்பகல் 10.00 மணிக்கு அபிஷேகமும், நண்பகல் 12 .00 மணிக்குப் பூசையும் நடைபெறும்.

♦ 26.07.2017 - முற்பகல் 9.30 மணிக்கு அபிஷேகமும், நண்பகல் 12.00 மணிக்கு பூசையும் நடைபெறும். பிற்பகல் 6.00 மணிக்கு அம்பாளின் வெளி வீதி உலா இடம்பெறும்

♦ மேற்படி அபிஷேகம், பூசை ஆகியவற்றில் கலந்துகொண்டு, அம்பாளின் அருட்காட்சியைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அம்பாள் அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய அறங்காவலர்கள்

## சாவகச்சேரிபிரதேச சபை.
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடையின் கீழான வேலைத்திட்டத்திற்கான கேள்விகோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரிபிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிகேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்விபெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி:021-373 4825, 021-2050356, தொலைநகல்: 021-2050356, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com) இல் இருந்து 04.08.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர் /செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 13.07.2017 ஆம் திகதியிலிருந்து 04.08.2017 வரை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப் படாதகட்டணமாகரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், கேள்வியானது நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 04.08.2017 திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து மீசாலை வடக்கு ஊரெல்லைவீதி இராமாவில் அல்லாரை ஊரெல்லைவீதி இணைப்புவீதி 49நாட்களும் இராமாவில் அல்லாரை ஊரெல்லைவீதி 63 நாட்களும் (நாற்பத்தொன்பது நாட்கள் 20.10.2017, அறுபத்து மூன்று நாட்கள் 03.11.2017) வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ருபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/PSDG /2017/12 | மீசாலை வடக்கு ஊரெல்லைவீதி இராமாவில் அல்லாரை ஊரெல்லைவீதி இணைப்புவீதி | 1.86 | 3மாதம் | C9 | 19000.00 | 20.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG /2017/13 | இராமாவில் அல்லாரை ஊரெல்லைவீதி | 2.47 | 3மாதம் | C8 | 25000.00 | 03.11.2017 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 25.07.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை**
**கொடிகாமம்**
**13.07.2017**

## SUSTAINABLE GREEN ENERGY (PVT) LTD.
## VACANCIES

1. **Receptionist - Female (1)**
   a. Good Knowledge in Three Languages
   b. Basic Computer Knowledge
2. **Accounts Clerk - Female (1)**
   a. Qualified in Account Work
   b. Working Experiences
   c. English Knowledge
3. **Drivers - Male (2)**
   a. Fluent in two Languages (Tamil & English)
   b. Sinhala Optional
   c. At least Five years heavy vehicle License with experiences

**VACANCIES - AAKASH PLANTATION**

1. **Plantation Manager (1) Male/Female**
   a. Degree obtained in Agriculture
   b. Working Experiences
   c. In possession of Driving License
2. **Plantation Assistants (6) Male/Female**
   a. Diploma in Agriculture Science
   b. Working Experiences
   c. Motor Bike reding License
3. **Mechanical Engineer (1) Male/Female**
   a. Be a degree holder
   b. Working Experience
4. **Civil Engineer (1) Male/Female**
   a. Be a degree holder
   b. Working Experience
5. **Secretary (1)Female**
   a. Good Command in all three languages
   b. Good Computer Literacy
   c. Smart Looking

**CONDITIONS**

1. Walk-in interview from 2nd to 4th August 2017 at No.:53, Navalar Road, Pandarikulam, Vavuniya from 9.00 Am to 4 Pm daily. (Office Situated Near by the Madasamy kovil on Vairavapuliyankulam - Koomankulam Road)
2. No telephone clarifications regarding the appointment.
3. All originals to suport your verbal explanation be submitted at Interview Board
4. Up & Down travelling expenses for attending to the interview willnot be paid by the company
5. No further date will be given for interview

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவச் சபையின் தலைமைப் பதவியை ஏற்க கார்லோ மறுப்பு

கொழும்பு, ஜூலை 13
இலங்கை மருத்துவச் சபையின் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்குமாறு இலங்கை அரச மருத்துவர் சங்கம் விடுத்திருக்கும் வேண்டுகோளைப் பேராசிரியர் கார்லோ பொன்சேகா நிராகரித்துள்ளார்.

தனது உடல்நலம் திருப்தியாக இல்லை என்ற காரணத்தைக் காட்டி அவர் இந்தப் பதவியைத் தொடர்ந்து வகிப்பதை விரும்பவில்லை எனக் கூறியுள்ளார்.

ஐந்தரை வருடங்களாகத் தொடர்ந்து இந்தப் பதவியை வகித்த பின் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி தனது பதவிக்காலம் முடிவுக்கு வந்திருப்பதால் பதவியிலிருந்து விலகிக்கொண்டதாகவும், பதவி நீடிப்புக்கான வேண்டுகோளை அரசு அந்த வேளையில் முன்வைத்திருந்தாலும் கூட தான் அதை ஏற்றிருக்கமாட்டார் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, மருத்துவக் கல்வி தொடர்பில் இப்போது எழுந்திருக்கும் சர்ச்சைகள் தீரும்வரையிலாவது அவர் இந்தப் பதவியில் நீடிக்க வேண்டுமென இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது எனவும், இந்த வேண்டுகோள் கடிதத்தை கார்லோ பொன்சேகாவின் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று கையளித்திருக்கின்றது எனவும் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. (த)

# மைத்திரி தரப்பில் பலர் மகிந்தவுடன் தொடர்ந்து பேச்சு

### விரைவில் நல்லது நடக்கும் என்கிறார் செஹான் சேமசிங்க எம்.பி.

கொழும்பு, ஜூலை 13
மகிந்த அணியில் இணைவதற்காக மைத்திரி தரப்பு அமைச்சர்கள் பலர் மகிந்தவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த அரசில் இருந்து அமைச்சர்கள் அனைவரும் வெளியேறி மகிந்தவுடன் இணைந்தால்தான் நாட்டுக்கு நல்லது நடக்கும். அதுதான் நடக்கப் போகின்றது. எம்முடன் இணைவதற்காக மைத்திரி தரப்பு அமைச்சர்கள் பலர் மகிந்தவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் எம்முடன் இணைந்தால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்துக்கு இந்த அரசு தள்ளப்படும். தேர்தல் நடந்தால் நாமே உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றுவோம். அது தேசிய அரசைக் கைப்பற்றுவதற்கு இலகுவாக வழியமைக்கும்.

நாம் மக்களுடன் இருக்கின்றோம். மக்கள் எம்முடன் இருக்கின்றார்கள். மைத்திரி அணியில் உள்ளவர்களும் எம்முடன் இருக்கின்றார்கள். இப்போது தேர்தல் மட்டும்தான் தேவை. அது வந்தால் எமது பலத்தை நாம் நிரூபிப்போம். இதை அறிந்துதான் அரசு தேர்தல் நடத்தாமல் இழுத்தடிக்கின்றது. இது இன்னும் எத்தனை நாள்களுக்கென்று பார்ப்போம்.

அரசின் தேசவிரோதச் செயற்பாடுகளை மக்கள் இப்போது நன்கு விளங்கி வைத்துள்ளனர். அரசால் கொண்டுவரப்படவுள்ள அரசமைப்பு தேச விரோத அரசமைப்பு என்பதை மக்கள் அறிவர். அந்த அரசமைப்பால் எமது நாடு இரண்டாகப் பிளவுபடுவது மாத்திரமன்றி பௌத்த மதமும் ஆபத்தை எதிர்நோக்கும்.

வரலாற்றில் முதல் தடவையாகப் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்படவுள்ளது. அரசு அதை மறுத்தாலும்கூட அது நடக்கும். இப்படிப்பட்ட அரசமைப்பை நாம் தோற்கடிக்க வேண்டும். அதன்மூலம்தான் இந்த நாட்டைப் பேராபத்தில் இருந்து காப்பாற்ற முடியும் - என்றார். (த)



## 4,053 ஏக்கர் தேயிலை தோட்டங்கள் அழிவு

### விரைவில் நட்ட ஈடு கிடைக்கும்

கொழும்பு, ஜூலை12
அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளால் நாட்டின் 39 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 4,053 ஏக்கர் சிறு தேயிலைத் தோட்டங்கள் முற்றாகப் அழிவடைந்திருப்பதாக சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதேநேரம் 14,073 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

காலி, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய ஏழு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீவிர ஆராய்ச்சியின் பின்னரே இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன எனச் சபையின் தலைவர் விஜேரத்ன தேவகெதர கூறினார்.

காலி மாவட்டத்திலேயே அதிக பாதிப்புகள் நடந்துள்ளன. அங்குள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1,724 ஏக்கர்கள் முற்றாகவும் 5,483 ஏக்கர்கள் பகுதியளவிலும் சேதமாகியுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 1,073 ஏக்கர் முற்றாகவும், 3,205 ஏக்கர்கள் பகுதியளவிலும் அழிவடைந்துள்ளன.

இந்தத் தகவல்களைக்கொண்ட முழு அறிக்கையொன்று கடந்த வெள்ளிக்கிழமை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அது விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின் பாதிக்கப்பட்ட தோட்ட உரிமையாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும் என அவர் மேலும் கூறினார். (த-ய)

## நீங்கா நினைவுடன் இரண்டாம் ஆண்டில்...



## அமரர் தயாநிதி கஜேந்திரன் (ராசா)

அன்னை மடியில் 30.08.1985 — ஆண்டவன் அடியில் 13.07.2015

**13.07.2017**

அன்பு மகன் எங்கள் ராசாவே!
ஆண்டு இரண்டானாலும் ஆறுமோ எம்மனம்
"இல்லை" என்ற சொல் என்றுமே அறிந்திடாய்
ஈவதிலே நன்றாய் இன்பம் பெறுவாய்
உலகம் அறிந்திட்ட உத்தமனே!
ஊர் பேர் தெரியாதோரையும் உவந்திடுவாய்
என்றுமே எதையுமே சாதித்திடுவாய்
ஏற்றத் தாழ்வு எவரிடமும் பார்த்திடாய்
ஐயம் இட்டு என்றும் அகமகிழ்வாய்
ஒருவரையும் ஒருபோதும் ஒரங்கட்டாய்
ஓலக்கத்தில் அமைந்திட்ட ஒருவனாம் ஒண் பொருளை நாடியே
ஔவையின் வாக்கின்படி இன்று அணைந்திட்டாயோ
ஆறுமோ எம்மனம் ஏங்குதே என்றும்.
விண்ணுலகம் சென்ற ஆன்மா ஆண்டவன்
அடியில் அமைதி அடைந்திடவே
அனுதினமும் வேண்டுகின்றோம்.

"இந்திரப் பிரஸ்தம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கு அடித்தளமிடுவது நிலைமாற்று நீதி

## தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைமை நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13



நிலைமாற்று நீதியானது பொதுவானதும் வழமையானதுமான நீதியிலிருந்து வேறுபட்டது. நிலைமாற்று நீதியானது சமாதானத்தை உருவாக்குவதற்கான நீதியாக நோக்கப்படுகின்றது.

இவ்வாறு தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைமை நீதியரசர் குடிக்காங் மொசெனகே தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு அண்மையில் சென்றிருந்த அவர், அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அந்த அமைச்சின் செயலாளர்வே.சிவஞானசோதியினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தென்னாபிரிக்காவில் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்புக்குச் சவால்கள் காணப்பட்டபோதிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கருக்களான வேற்றுமையில் ஒற்றுமை, நல்லிணக்கம், சனநாயகத்திற்கு மதிப்பளித்தல், அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சமத்துவத்தை உறுதிப்படுத்தல், சுதந்திரம் என்பன பொதுப் பெறுமதிகளாகச் சவால்களை எதிர்கொள்வதற்கு உதவியது.

தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறிதல் தொடர்பான நல்லிணக்கக் குழு காணாமற்போனவர்கள் மற்றும் இறந்தவர்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதன் மூலம் காயங்களை ஆற்றுப்படுத்தி வலிகளைக் குறைக்கும் நிலைமாற்று நீதியின் அம்சமாக முன்னெடுக்கப்பட்டது.

இழப்பீடுகளை வழங்கல் நிலைமாற்று நீதியின் இன்னுமோர் அம்சமாகத் தென்னாபிரிக்காவில் முன்னெடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் காயங்களை ஆற்றுப்படுத்தும் செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டமை, முரண்பாடுகளைத் தீர்ப்ப தற்கான ஒரு வெற்றிகரமான உபாயமாக நோக்கப்பட்டது.

ஞாபகார்த்த வேலைத்திட்டங்களும் நினைவுச் சின்னங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் மன ஏக்கங்களை ஆற்றுப்படுத்தும் செயன்முறையாகவும் மீண்டும் வன்முறைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான நிலைமாற்று நீதியின் ஓர் அம்சமாகவும் நோக்கப்பட்டது.

முரண்பாடுகளில் இருந்து விடுபட்டு நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்திற்கான பயணம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அத்தகைய முரண்பாடுகளுக்குப் பின்னணியான காரணிகள் இனங்காணப்பட்டுதிறந்த மனத்துடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் - என்றார். (கு-5)

# மாகாண சபைத் தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு இடமளிக்க சட்டத் திருத்தம்

## வெளியாகியது வர்த்தமானி

கொழும்பு, ஜூலை 13

மாகாண சபைகளில் பெண்களுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவத்தை அளிக்கும் வகையிலான, மாகாணசபைகள் திருத்தச் சட்டவரைவு, கடந்த திங்கள்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டின் 2 ஆவது இலக்க மாகாணசபைகள் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு இந்தச் சட்டவரைவு முன்வைக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம், மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் அனைத்துக்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது வேட்பாளர் பட்டியலில் குறைந்தபட்சம் 30 வீதம் பெண் வேட்பாளர்களை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு குறைந்தபட்சம் பெண் வேட்பாளர்களை உள்ளடக்காத எந்த வேட்புமனுவையும் நிராகரிக்கும் அதிகாரத்தைத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு, இந்தச் சட்டவரைவு அளிக்கிறது.

இது தொடர்பாக, வர்த்தமானி அறிவிப்பை உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளியிட்டுள்ளார்.

அரசியல் முடிவுகளை எடுக்கும் அனைத்துச் சபைகளிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு அரசு கொள்கை ரீதியான முடிவை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக, கடந்த மார்ச் மாதம், உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்கு 25 வீத இடங்களை ஒதுக்கும் வகையில் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் மாகாணசபைகளில் 4 வீதமும், நாடாளுமன்றத்தில் 5 வீதமுமே பெண்களின் பங்களிப்பு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (கு)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்
23 . 10 . 1939

அவனி விட்டு
14 . 06 . 2017

அமரர் சிங்காரவேல் பாலச்சந்திரன்
(இலங்கை மின்சார சபை முன்னாள் ஊழியர்)

சாலவும் போற்றி துதி செய் சான்றோன்
சார்ந்தவர் மனமதுள் குடி கொண்ட மறையோன்
ஞாலம் எங்கெனும் பெரும் புகழ் பூத்தோன்
நாளும் பொழுதும் பிறர்க்கென வாழ்ந்தோன்
காலன் அவனும் கரம் பற்றி கவர்ந்திட
கலங்குவோர். புலம்புவோர் எவர் அறியாதும் மறைந்தான்
பாலச்சந்திரன் நினைவும் நெஞ்சை விட்டு விலகுமோ
பரிதவிப்போர் மனதுயர் வாழ்நாளிடை நீக்குமோ
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.07.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் மிக அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
021 226 5275

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ
24 . 02 . 1950

மண் நெகிழ
25 . 05 . 2016

அமரர்
சபாரத்தினம் தவராசா (சிங்கம்)
(40 – 1688 கமல் லொறி உரிமையாளர்)
திதி : 13.07.2017

அன்பு அப்பா .......!
தவம் புரியாமலே கிடைத்த வரம் நீங்கள்........
என்ன தவறிழைத்தோம் அப்பா ......
இறைவன் மீண்டும் தன்னோடு சேர்த்துக் கொண்டான்
இன்று மாதங்கள் பன்னிரண்டு ஆனது அப்பா
பலன் இல்லை என்று தெரிந்தும் எம் தவம் தொடர்கிறது
உங்களின் மரணம் தான் பொய்யாகிப் போகாதா - நாம்
வணங்கும் தெய்வமாய் நித்தம் உம்
படத்தடியில் தொழுகின்றோம்
நீங்கள் நிம்மதியாய் உறங்குங்கள்......

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 அமெரிக்கத் தூதர்களை வெளியேற்ற ரஷ்யா திட்டம்

மொஸ்கோ, ஜூலை 13
அமெரிக்க அதிபர் தேர்தலில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாகவும், அதிபர் ஒபாமா கால அமெரிக்க நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்க வேண்டியுள்ளதாலும் ரஷ்யாவுக்கான அமெரிக்கத் தூதர்கள் 35 பேரை வெளியேற்ற ரஷ்யா முடிவு செய்துள்ளது.
கடந்த ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்புக்கு ஆதரவாக ரஷ்யா செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்க உளவுத்துறை விசாரணை நடத்தி வருகிறது. இந்த விவகாரத்திலும் ரஷ்யாவுடன் ஏற்கனவே இருந்த கருத்து முரண்பாடுகளாலும் தனது இறுதிக்காலத்தில் அமெரிக்காவில் இருந்த ரஷ்யத் தூதர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டார் அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமா. ட்ரம்ப் அடுத்த அதிபராகத் தெரிவாகியிருந்ததால் இது தொடர்பில் பதிலடி கொடுக்க எந்த நடவடிக்கையையும் ரஷ்யா எடுக்கவில்லை.
இந்த நிலையில் ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்கத் தூதர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளை வெளியேற்ற ரஷ்யா தற்போது முடிவு செய்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



> இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளதால் சிரியப் போர் மீண்டும் ஆரம்பமாகலாம் என்று கருதப்படுகிறது

**சிரிய உள்நாட்டுப்போர் மீண்டும் ஆரம்பமாகிறது**

வளர்ச்சியடைந்த நாடுகளின் மாநாடான ஜி20 மாநாடு ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் அண்மையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்யா அதிபர் புடின் இருவரும் சந்தித்தனர். இந்தச் சந்திப்பை அடுத்து நீண்டகாலமாக நடைபெற்றுவரும் சிரிய உள்நாட்டுப் போருக்குத் தற்காலிகத் தீர்வு காணப்பட்டது.
இந்த நிலையில் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளதால் சிரியப் போர் மீண்டும் ஆரம்பமாகலாம் என்று கருதப்படுகிறது. (ம)

# லட்சங்களைக் குவித்த காந்தியின் ஓவியம்

லண்டன், ஜூலை 13
மகாத்மா காந்தியின் கையொப்பத்துடன் கூடிய பென்சில் ஓவியம் இலங்கை மதிப்பில் சுமார் 60லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.
1931ஆம் ஆண்டு மகாத்மா காந்தி பிரிட்டன் சென்றபோது அவரை ஓவியமாகத் தீட்ட ஜோன் ஹென்றி ஆம்செவிட்ஸ் என்பவர் விருப்பப்பட்டார். காந்தியும் சம்மதித்ததை அடுத்து அவரை ஹென்றி ஓவியமாக வரைந்தார்.
மிகவும் அரிதான இந்த ஓவியத்தை பாதுகாத்து வைத்திருந்தவர் அதை ஏலத்தில் விட தீர்மானித்தார்.
இதையடுத்து, லண்டன் நகரில் உள்ள பிரபல 'சோத்பைஸ்' ஏல நிறுவனம் இதை ஏலத்தில் விடும் உரிமையைப் பெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஏலத்தில் இந்தப் படம் இலங்கை மதிப்பில் சுமார் 60 லட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டது. (ம)



# அல் பக்த… உயிரிழந்…

## சிரிய போர்க் கண்காணிப்பகம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது

டமஸ்கஸ், ஜூலை 13
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி மோசூல் மீட்புப் போரில் கொல்லப்பட்டார் என்று லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு சிரியாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பகம் தெரிவித்தது.
ஈராக்கின் மோசூல் நகரம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் விழுந்தது. நகரை மீண்டும் கைப்பற்றுவதற்காக பல வியூகங்களை அமைத்தது ஈராக். இறுதியில் அமெரிக்காவிதும், அமெரிகக் கூட்டுப்படையினதும் துணையுடன் மோசூல் நகர் கிழக்கு மேற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டு மீட்புப் போர் ஆரம்பமானது. கடந்த ஜனவரியில் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டது. மேற்குப் பகுதிக்கான போர் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மோசூல் முழுவதுமாக அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தது.
மோசூலில் தாம் நடத்திய வான் தாக்குதலில் பக்தாதியும் ஏனைய முக்கியத் தளபதிகளும் கொல்லப்பட்டனர் என்று கடந்த மாதத்தின் இறுதிப்பகுதியில் ரஷ்யா தெரிவித்திருந்தது.
இதை ஈரான் உறுதிப்படுத்தியது. எனினும் அமெரிக்கா ஏற்கவில்லை. இந்த நிலையில் லண்டனைத் தலைமையகமாகக்



குறி… ஒளி… ளது… இல்… கு… மா… ஒளி…



# ஈராக் எங்கும் கொண்டாட்டம்

பக்தாத், ஜூலை 13
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து மோசூல் மீட்கப்பட்டுள்ளமையை அங்குள்ள மக்கள் பெரும் எடுப்பில் கொண்டாடி வருகின்றனர்.
ஐ.எஸ். ஆயுதக் குழுவின் பிடியில் இருந்த இந்த நகர மீட்பு, ஈராக்கில் இருந்து ஆயுதக் குழுக்கள் முற்றாக விரட்டப்படுவதற்கு முக்கி மைல்கல்லாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈராக் படையின் இந்த வெற்றியை மோசூல் நகர மக்கள் மட்டுமல்லாமல் அந்த நாட்டு மக்களும் பெரும் எடுப்பில் கொண்டாடி வருகின்றனர். இரவு பகல் பாராமல் கொண்டாட்டங்கள் நீண்டு செல்கின்றன என்று ஈராக் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. அது தொடர்பான ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டன. (ம)

# ஆண்களுக்கு மட்டுமான தீவுக்கு யுனெஸ்கோ பாரம்பரிய அறிவிப்பு

டோக்கியோ, ஜூலை 13
ஜப்பானில் ஆண்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கும் ஒகினோ சிமோ தீவை பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது யுனெஸ்கோ.
ஜப்பான் கிழக்கு கடலின் ஒகினோசிமா பகுதியில் உள்ள இந்தத் தீவுக்கு பெண்கள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் ஆண் பார்வையாளர்கள் முதலில்அங்குள்ளகடலில்நிர்வாணமாகக் குளிக்க வேண்டும். இந்த தீவுக்கு குறிப்பிட்ட அளவிலான ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். இந்த ஆண்டு 200 நபர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது.
குறிப்பாக இரண்டு மணி நேரம் மட்டுமே அனுமதி வழங்கினர். இந்தப் பகுதியை சிண்டோ என்ற குரு நிர்வகிக்கிறார். இந்த நிலையில் தீவை யுனெஸ்கோ பாரம்பரிய இடமாக அறிவித்தது. (ம)



# துருக்கியின் தாக்குதலி… 11 ஆயுததாரிகள் கொல…



இஸ்தான்புல், ஜூலை 13
துருக்கி நாட்டில் குர்திஸ்தான் ஆயுததாரிகள் மீது விமானப் படை நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர்.
துருக்கி நாட்டில் குர்து இன மக்களுக்கு என்று தனிநாடு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் குர்திஸ்தான் ஆயுதக் குழு போராடி வருகிறது. கடந்த 1984ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போராட்டத்தின் விளைவாக ச… ஆயிரம் பேர் உயிரிழ… னர்.
இந்த அமைப்பை த… யப்பட்ட தீவிரவாத… மாக அறிவித்துள்ள… அரசு இவர்கள் மீது… தாக்குதல் நடத்தி… றது. நேற்றுமுன்தி… தப்பட்ட வான்வழித்… லில் 11 அயுததாரிகள்… லப்பட்டனர் என்று… பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதி
# ந்தார்

ப்பகம்
த்தது



ல்லப்
த்தின்
ரிவித்

ியது.
ஏற்க
ண்ட
ாகக்

கொண்டு செயற்படும் 'போர் கண்காணிப்பகம்' பக்தாதி கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தியது.

'ஈராக் நியூஸ்' என்ற ஆங்கில இணையத்தளம் பக்தாதியின் கொல்லப்பட்டார் என்று செய்தி வெளியிட்டதுடன் குறித்த செய்தி தொடர்பான ஓர் ஒளிப்படத்தையும் வெளியிட்டுள்ளது. அதில் பக்தாதிக்கு தலைமுடி இல்லாதிருந்தால் எவ்வாறிருக்குமோ அவ்வாறான ஒருவர் சடலமாகக் கிடப்பது போன்று அந்த ஒளிப்படம் அமைந்துள்ளது. (ம)



ஸ்பெய்னின் மட்ரிட் நகரில் புகழ்பெற்ற காளை அடக்கும் திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற திருவிழா ஒன்றின் ஒளிப் படமே இது. காளையின் தாக்குதலில் இருந்து தம்மைக் காப்பாற்றுவதற்காக தரையில் வீழ்ந்துகிடக்கும் போட்டியாளர்களுக்கு மேல் ஏறிச்செல்கிறது ஒரு காளை. (ம)

## ரக்கா நகரிலும் போர் உக்கிரம்

சிரியாவின் ரக்கா நகரிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு கடும் பின்னடைவு கொடுக்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் மோசூல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது. ஐ.எஸ்ஸிடம் தற்போதுள்ள மற்றொரு முக்கிய நகரெனில் அது சிரியாவின் ரக்காவே. அங்கிருந்தும் ஐ.எஸ். விரட்டப்படுவதற்கான போர் தற்போது கடும் உக்கிரமாக நடைபெற்று வருகிறது. மோசூலைப் போன்று ரக்கா நகரிலும் அதிகளவான மக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்ற காரணத்தால் மீட்புப் போரில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு பின்னடைவு கொடுக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

## நீண்ட ஆயுளுக்கு கோப்பி

தினமும் கோப்பி குடித்தால் நீண்டகாலம் வாழமுடியும் என்று ஆய்வு ஒன்றில் வெளிப்பட்டுள்ளது. அதிக அளவில் கோப்பி குடித்தால் பித்தம் அதிகரித்து உடல் நலக்குறைவு ஏற்படும் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால் தினமும் கோப்பி குடித்தால் நீண்ட நாள்கள் உயிர் வாழ முடியும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது. அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர் பேராசிரியர் வெரோனிகா டபிள்யூ செடியாவன் இந்த ஆய்வை மேற்கொண்டார். (ம)



## குதலில்
## கொலை



விளைவாக சுமார் 40
் பேர் உயிரிழந்துள்ள

மைப்பை தடை செய்
தீவிரவாத இயக்க
அறிவித்துள்ள துருக்கி
வர்கள் மீது தொடர்ந்து
தல் நடத்தி வருகி
நேற்றுமுன்தினம் நடத்
வான்வழித் தாக்குத
அயுததாரிகள் கொல்
னர் என்று தெரிவிக்க்
(ம)



### உலக சனத்தொகையில்

## இன்னும் ஏழே ஆண்டுகளில் இந்தியா முதலிடம் பிடிக்கும்

உலக சனத்தொகையில் இன்னும் ஏழே வருடங்களில் இந்தியா முதலிடம் பிடிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

உலக மக்கள் தொகைத் தினம் ஆண்டுதோறும் ஜுலை 11ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இந்தியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போதைய விவரப்படி இந்தியாவின் மக்கள் தொகை 121 கோடி, தற்போதைய மக்கள் தொகை 129 கோடியாக உயர்ந்திருப்பதாக தெரிய வந்துள்ளது. சீனாவின் தற்போதைய சனத்தொகை 139 கோடி. இன்னும் 7 ஆண்டுகளில் சீனாவை இந்தியா முந்திவிடும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. (ம)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமைசேர்த்த

செல்வி பிரபாகரன் கவிசாஜினி

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்களான

| | | | |
|---|---|---|---|
| சு.திகழோன் | - 146 | பி.சேருஜா | - 132 |
| ஜே.பகலவன் | - 142 | ர.மாதுரியன் | - 131 |
| பி.அபிசன் | - 143 | அ.அலோஜிதன் | - 131 |
| வி.யானுசா | - 140 | | |

ஆகியோரையும் இப் பரீட்சையில் 70 புள்ளிகளுக்குமேல் பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பௌத்தம் இங்கு மதம் அல்ல இனம்

இலங்கையில் பௌத்த மதத்துக்கு ஏனைய மதங்களால் அச்சுறுத்தல், ஆபத்து ஏதாவது இருக்கிறதா? இந்தக் கேள்விக்கு நாட்டின் எந்தவொரு குடிமகனாவது "ஆம்" என்று பதிலளிக்கும் நிலை இல்லை என்பது அனைவருக்குமே தெரியும். அப்படியிருக்கும்போது பௌத்தம் எப்படி அரசியல் தீர்வுக்கு அச்சுறுத்தலாக மாறுகிறது?

இலங்கையின் கடந்த கால வரலாறுகளைப் போலவே, தற்போதும் தீர்வை நெருங்கி வரும்போது அதற்கு அச்சுறுத்தலாக பௌத்தம் மேற்கிளம்பி நிற்கின்றது. துட்டகாமினி காலம் தொடக்கம், இனங்களின் ஒற்றுமைக்கு பௌத்தமும் அதன் துறவிகளும் அச்சுறுத்தலாகவே விளங்கி வருகிறார்கள் என்பதை பௌத்த நூல்களே எடுத்தியம்புகின்றன.

ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்ட இலங்கையின் வரலாற்றிலும் அதன் தொடர்ச்சியை நன்கு காணமுடிகிறது. இது அண்மையில் மீண்டும் அரசியலின் மையச் சுழற்சியை எட்டிப்பிடித்திருக்கிறது. புதிய அரசமைப்பையும் அதிலும் குறிப்பாக, பௌத்தத்துக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் நீக்கப்படுவதையும், ஒற்றையாட்சி நீக்கப்படுவதையும் தாம் ஏற்கப்போவதில்லை என்று மகாநாயக்கர்களும் பிக்குகளும் அண்மையில் அறிவித்தனர். அதைத் தொடர்ந்து அரசியலின் மையச் சுழற்சியை பௌத்தம் மீண்டும் கைப்பற்றியது.

அந்த அறிவிப்பு வந்த உடனேயே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, புதிய அரசமைப்பு முயற்சி குறித்து விளக்கமளித்தார். அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கித் தான் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று உறுதிகூறினார். அதன் பின்னர் நேற்று அம்பாறையில் தெஹியத்தகண்டியில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசும்போது, தற்போதுள்ள அரசமைப்பில் பௌத்தத்துக்கு உள்ள முன்னுரிமையும் ஒற்றையாட்சி முறையும் மாற்றப்படாது என்று பிக்குகளுக்கு உறுதியளித்துள்ளார்.

புதிய அரசமைப்பில் என்ன உள்ளது என்பது இடைக்கால வரைபாகக் கூடத் தயாராகாத நிலையில், சிலர் அது பற்றித் தவறானதகவல்களைப் பரப்பித் திரிகின்றனர் என்று அவர் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தரப்பினரையும் சாடினார். எனினும் பௌத்தத்தையும் ஒற்றையாட்சியையும் பாதுகாப்பேன் என்றும் உறுதியளிக்கிறார்.

இப்படி, பிக்குகளின் அச்சத்தைப் போக்க அரச தலைவர் ஒருவர் அவசரப்படும் அளவுக்கு பௌத்தம் இந்தநாட்டில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதா? ஒருவேளை புதிய அரசமைப்பில் அனைத்து மதங்களுக்கும் ஒரேயளவு உரிமை வழங்கப்பட்டாலும்கூட, பெரும்பான்மையானவர்களின் மதமாக அதுதான் இருக்கப் போகிறது. அதிலும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் விருப்பு மிகு மதமாகவும் அதுவேதான் இருக்கப்போகிறது. அப்படியான ஒரு நிலையில் பௌத்தம் இயல்பாகவே ஓர் அதிகாரப் பாதுகாப்பைக் கொண்டிருக்கிறது. எனவே பிக்குகளும் பௌத்தர்களும் அச்சப்படும் அளவுக்கு புதிய அரசமைப்பால் பௌத்தத்துக்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாது.

அதேநேரத்தில் அனைத்து மதங்களும் ஒரே மாதிரியாக நடத்தப்பட்ட உடனே, பௌத்தத்துக்கு அச்சுறுத்தலை விடுக்கக் கூடிய வேறு எந்த மதங்களும் இலங்கையில் இல்லைஎன்பதும் உள்ளங்கைநெல்லிக்கனி. 70விழுக்காடு மக்களின் மதமான பௌத்தத்தை 30 விழுக்காட்டைக்கூட எட்ட முடியாத மற்றைய மதங்களில் எந்தவொன்றும் அச்சுறுத்துவது நடக்காது.

அப்படியானால் இப்போது ஏன் மதம் இங்கு முதன்மைப் படுத் தப்படுகிறது? அப்படி முதன்மைப்படுத்தப்பட அனுமதிக்கப்படுகிறது?

ஏனென்றால், இலங்கையில் பௌத்தம் மதம் அல்ல. அது ஓர் இனம். எப்படி இஸ்லாம் இங்கு ஓர் இனமோ, அப்படித்தான் பௌத்தமும் இங்கு ஓர் இனம். சிங்களம் என்பதை உச்சரிப்பதற்குப் பதில் அவர்கள் பௌத்தம் என்பதை உச்சரிக்கிறார்கள். அதற்கூடாக அவர்கள் செய்ய நினைப்பதெல்லாம் இன அடக்குமுறையே தவிர, மதத்தை முன்னுரிமைப் படுத்தும் போராட்டம் அல்ல. எனவே பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்தும் எந்தவொரு அரசமைப்பும் சிறுபான்மையினருக்கு ஏற்புடையதாக இருக்கவே இருக்காது.





வழிமூலம் - ஏ.எப்:பி.
மொழியாக்கம் - நித்தியபாரதி

# புதிய அரசமைப்பு முயற்சிக்கு வலுக்கும் எதிர்ப்புக்கள்

இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ்மக்களுக்கு, சுயாட்சிவழங்கும், அரசியல்சீர்திருத்துத்துக்கு பௌத்த மத குருமார்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், இந்த நாட்டில் மீண்டுமொரு குருதி தோய்ந்த போர் இடம்பெறுவதைத் தடுப்பதற்காகவும், 1972 தொடக்கம் 2009 வரை இடம்பெற்ற உள்நாட்டு போரில் லட்சத்துக்கும் மேலான யிர்கள் காவுகொள்ளப்பட்டமை போன்று நாட்டில் மீண்டும் பிறிதொரு பிரிவினைவாதப் போர் இடம்பெறுவதற்குத் தான் இடமளியேன் எனவும், இதனால் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சுயாட்சியுடன் கூடிய நிர்வாக அலகின் கீழ் வாழ்வதற்கான உறுதிப்பாடுகள் புதிய அரசியல் சீர்திருத்தம் மூலம் வழங்கப்படும் என்றும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

> "பௌத்த பிக்குமார் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால் 2015ல் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரமே தற்போது புதிய அரசமைப்பு சீர்திருத்தம் இடம்பெறுகிறது"

### அரசின் அரசியல் சீர்திருத்தத் திட்டத்தை எதிர்க்கும் பௌத்த மதத் தலைமைகள்

தமிழ் மக்களுக்கு சுயாட்சியை ஒத்த நிர்வாகத்தை வழங்கும் அரசின் திட்டத்தை பௌத்த மதகுருக்கள் எதிர்க்கின்றனர் என்றும், இது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும் என்றும், மூத்த பௌத்த குருவான ஆனமடுவ தம்மதாசி அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமான புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறும் எனவும், அதிலிருந்து நாடாளுமன்றம் பின்வாங்காது என்றும், அதன்மீது மக்களின் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் அரசுப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

"பௌத்த பிக்குமார் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால் 2015இல் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரமே தற்போது அரசமைப்புச் சீர்திருத்தம் இடம்பெறு கிறது" எனவும் ராஜித சேனரட்ன தெரிவித்தார்.

### மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாகவே அரசு செயற்படும்

"மக்களின் விருப்பிற்கு எதிராக நாம் ஒருபோதும் செயற்பட மாட்டோம். பௌத்த மதகுருமார்கள், மக்களின் விருப்பத்துக்கு எதிராக நாங்கள் செய படவேண்டும் எனக் கூறுகின்றனர் எனவும் பேச்சாளர் ராஜித சேனரட்ன தெரிவித்தார்.

இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 70 சதவீதமானவர்கள் பௌத்தர்களாவர். இவர்கள் எப்போதும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சார்பான அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகின்றனர்.

தற்போதைய அரசியல் சீர்திருத்தத்தை பௌத்த குருமார்கள் எதிர்ப்பதாகவும், அது தொடர்பில் மூத்த பௌத்த குருமார்கள் ஒன்றிணைந்துள்ளதாகவும் மூத்த பௌத்த குருவான ஆனாமடுவ தம்மதாசி தெரிவித்தார். தற்போது பௌத்த மதகுருமார்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள எதிர்ப்பு நடவடிக்கையானது, அரச தலைவர் சிறிசேனவுக்குப் பெரியதொரு சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுயாட்சியை ஒத்த தீர்வு முயற்சிக்கு கடும்போக்கு சிங்கள மக்களும் எதிர்ப்பு

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கக்கூடிய சுயாட்சித் தீர்வை கடும்போக்குச் சிங்கள மக்களும் எதிர்க்கின்றனர்.

கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களில் தாம் பாரபட்சமாக அரசினால் நடத்தப்படுவதை எதிர்த்தே 1972இல் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப்போர் 2009இல் முடிவுக்கு வந்தது.


அந்தப்போரில் இலங்கை இராணுவத்தினரால் பல்வேறு மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2009இல் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் 40ஆயிரம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இத்தகைய நிலையில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகவும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மீறல்களுக்கு நீதி வழங்குவதாகவும் வாக்குறுதியளித்தே சிறிசேன தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் நாட்டின் அதிபரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# இலங்கை அரசியலில் தனித்துவமான தலைவர் தளபதி அமிர்.



அமிர்தலிங்கத்தின் மறைவின் 28ஆவது நினைவுதினம் இன்றாகும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமையாகப் பேசும் ஆற்றலை அவர் கொண்டிருந்தார். மக்களுக்குத் தலைமை தாங்கத் தக்க ஆற்றல்கள் அவரிடம் இருந்தன. அப்படிப்பட்டதொரு திறமைமிகுந்த அரசியல்வாதியான அமரர் அ.அமிர்தலிங்கம் தமிழினத்தின் விடுதலைக்காக ஈழத்தமிழர் வரலாற்றில் 40 ஆண்டுகள் தன்னையே அர்ப்பணித்துவாழ்ந்தவர். தமிழ் அரசுக்கட்சியின் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக, தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமாக இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தமிழ் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட அமரர் அ. அமிர்தலிங்கத்தின் மறைவின் 28ஆவது நினைவுநாள் இன்றாகும்.

### 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் வெற்றியால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வாய்ப்பு

தமது 40 வருட கால அரசியல் அனுபவத்தில் நாடாளுமன்றத்தில் தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்தவர் அவர். 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் தாயகப் பிரதேசங்க ளில் போட்டியிட்ட தொகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சித்தலைமைப்பதவியையும் கைப்பற்றிக் கொண்டது. நாட்டின் ஆளும் கட்சியாக ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் அமர, இரண்டாவது பெரியகட்சியாகவும் முக்கிய எதிர்க்கட்சியாகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி விளங்கியது.

மிகப்பலம் வாய்ந்த எமது எதிரியாகிய அரசை எதிர்த்து நாம் போரிடுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும் என்ற தந்தை செல்வாவின் கூற்றுக்கமைய அமிர்தலிங்கத்தின் ஆளுமையின் திறமையினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அவர்வசமாகியது.

அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை தமிழர்களின் ஒற்றுமைக்கும் உரிமைப்போராட்டத்திற்கும் கிடைத்த மாபெரும வெற்றியாகவே அன்று கருதப்பட்டது.

அமரர் அமிர்தலிங்கம் 22 வயது இளைஞராக சட்டக்கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில், துடிப்புடன் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க முன்வந்திருந்தார். அந்தக் கால அரசியலில் தமிழ் மக்கள் தந்தை செல்வா தலைமையில் உருவான தமிழ் அரசுக்கட்சிக்கு அமோக ஆதரவை வழங்க முன்வந்த வேளையில் அமிர்தலிங்கம் தமிழரசுக்கட்சியில் உறுப்பினராக இணைந்துகொண்டார். அமிர்தலிங்கத்திடம் இருந்த ஆற்றல், அறிவு, புலமை, நாவன்மை போன்ற சிறப்புப் பண்புகள் தமிழரசுக்கட்சியில் அவருக்கு முக்கிய இடமொன்று கிட்ட வழிவகுத்தன. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வன்னியசிங்கம், இ.எம்.வி.நாகநாதன், வி.நவரத்தினம் போன்ற சிறந்த தமிழ் அரசியல்வாதிகளுடன் இளைஞனான அமிர்தலிங்கமும் இணைந்து தமிழ் அரசுக்கட்சியை வளர்த்தெடுப்பதில் அரசியல் அரங்கில் எதிர்நீச்சல் போட வேண்டியிருந்தது.

அமரர் அ.அமிர்தலிங்கம் 1927 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி வட்டுக்கோட்டை, பண்ணாகத்தில் பிறந்தார். விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற முதல் மாணவனான அமிர்தலிங்கம், 1945 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்து பி.ஏ.பட்டம் பெற்றுக் கொண்டார்.

1951 ஆம் ஆண்டு வழக்கறிஞருக்கான சட்டப்படிப்பிலும் முதல் வகுப்பில் சித்தியடைந்து சட்ட அறிஞரானார். தந்தைசெல்வாவின் தீர்க்கதரிசனத்துடன் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழர் தேசியம் என்ற கோட்பாடுகளுடனும் உருவாகிய தமிழ் அரசுக்கட்சியில் இணைந்து பற்றுறுதி கொண்ட செயல்வீரனானார்.

### தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணியை உருவாக்கியவர் அமிரே

1950 களில் தலைவர் அமிர்தலிங்கத்தினால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசுக்கட்சி வாலிப முன்னணி பெரும் வளர்ச்சியடைந்தது. இளைஞர் படைகொண்ட அமைப்பாக அதனை உருவாக்கிய பெருமை அமிர்தலிங்கத்தையே சாரும். 1956 ஆம் ஆண்டு அப்போதைய தலைமை அமைச்சரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தை முழு மூச்சாக எதிர்த்து, தமிழ் மொழிக்கும் சமஅந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையை யேற்று தமிழ் அரசுக்கட்சி சாத்வீகப் போராட்டங்களை நடத்தியது.

அத்தகைய போராட்டங்களில் இளைஞரான அமிர்தலிங்கம் முன்னின்று தலைமை வகித்து நடத்தியிருந்தார். 1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழ் அரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1956 ஆம் ஆண்டில், தமது 29 ஆவது வயதில் நாடாளுமன்றம் சென்ற அமிர்தலிங்கம், தொடர்ந்து 1970 ஆம் ஆண்டு வரை வட்டுக்கோட்டைத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. 1977 ஆம் ஆண்டு ஜுலை 21 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் தாயகப் பிரதேசங்களில் போட்டியிட்டது.

### 1973இல் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகச் செயற்பட்டவர்

சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைமை தாங்கி நடத்திய அமிர்தலிங்கம் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அப்போதிருந்த நீதிபதியான பி.சி.எஸ்.டேவிட் அமிர்தலிங்கத்துக்கு 25 ரூபா தண்டம் விதித்திருந்தார். அந்தப் பணத்தை நீதி மன்றத்துக்குச் செலுத்த விரும்பாமல் அமிர்தலிங்கம் இருவாரகால சிறைவாசம் அனுபவித்தார். 1973ஆம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநாடு மல்லாகத்தில் நடைபெற்றபோது கட்சியின் தலைவராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

சிறிமாவோ அரசு 1972ஆம் ஆண்டு கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத்தினால் தமிழினத்திற்கு ஏற்பட்ட பாரதூரமான விளைவுகளை தமிழ் அரசுக்கட்சியினர் யதார்த்தமாக எடுத்து விளக்கி யிருந்தனர். தமிழ் அரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்கட்சி உட்பட பல கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி பின்னர் தந்தை செல்வா இறுதிக் கொள்கையாக தமிழர்களுக்கான தீர்வு தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தந்தை செல்வாவின் காங்கேசன்துறைத் தொகுதியில் அமிர்தலிங்கம் போட்டியிட்டு பெரு வெற்றியீட்டினார். மீண்டும் நாடாளுமன்றம் சென்ற அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராகவும் செயற்பட்டார்.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்ததும் தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதறடிப்பதற்காக ஒரு இனக்கலவரத்தை கட்டவிழ்த்துவிட்டது.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரமும் அதன் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசால் உருவாக்கப்பட்ட தமிழீழக் கொள்கைக்கு எதிரான சட்டமூலத்தின் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இழக்க வேண்டிய தாயிற்று.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ்த் தலைவர்கள் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டிருந்தாலும் தலைவர் அமிர்தலிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார் (அல்லது தோல்வியடையவைக்கப்பட்டார்) பின்னர் தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார். மீண்டும் அமிர்தலிங்கத்தின் குரல் தமிழினத்தின் குரலாக ஓங்கி ஒலித்தது.

தமிழினத்துக்காக தனது இறுதி மூச்சு வரை ஈழத்தமிழர்களின் அரசியலில் 40 ஆண்டுகாலம் உழைத்திருந்த போதிலும் எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களிடமும் மண்டியிடாமல் எவருக்கும் விலைபோகாதவராகவும், தமிழ்த் தேசியத்தை இறுகப் பற்றி நின்றவர். தியாக உணர்வோடும் உடல் பொருள் ஆவி என மூன்றையும் அர்ப்பணித்து கடைசிக்காலத்திலும் சேவையாற்ற வேண்டுமென்று கருதிய அமிர்தலிங்கம் எதிர்பாராதவாறு 1989 ஜுலை மாதம் 13 ஆம் திகதியன்று தாம் தாங்கியிருந்த இல்லத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். 17 ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் அமிர்த லிங்கத்தின் குரல் காலமாக தமிழர்களின் உரிமைகளுக்காக ஒலித்திருந்தது. ஈழவிடுதலைப்போராட்டத்தில் இருபக்கங்களில் அமிர்தலிங்கத்தின் பணி காத்திரமாக இருந்தது. தந்தை செல்வா காட்டிய பாதையில் வழி தவறாது சென்றார். தமிழ்த்தேசியப்போராட்டத்தை இராஜ தந்திரப் போராட்டமாக மாற்றியமைத்து சர்வதேசத்தின் கவனத்தை தமிழர்கள் பக்கம் திருப்பிய பெருமை காலஞ்சென்ற அமிர்தலிங்கத்துக்கே உரியதாகும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### ஒலி பெருக்கி பாவனையை குறைப்பதற்கு முன்வருவார்களா?

கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது பழமொழி. அதற்கமைய இன்று தமிழர் தாயகத்தில் ஏராளமான பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வழிபாட்டுத்தலங்களைப்பார்ப்பதற்கு ஒரு வித மகிழ்ச்சிதான். மறுபுறம், வழிபாட்டுத் தலங்களின் பெயரால் பொதுமக்கள் அவதிப்படுத்தப்படும் சம்பவங்களுக்கும் குறைவில்லை. இதற்கெல்லாம் காரணம் கட்டுக்கடங்கா ஒலி பெருக்கிகளின் ஆக்கிரமிப்பு. முன்னைய காலகட்டத்தில் பெருந்திருவிழாக்கள், கும்பாபிசேகம் போன்ற சிறப்பு உற்சவ காலங்களில் மட்டும் திருவிழா உபயகாரர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஒலிபெருக்கிகளை வாடகைக்கு அமர்த்தி தத்தமது திருவிழாக்களை அமர்களப்படுத்தி வந்தனர். ஆனால் அண்மைக்காலமாக சிறியனவோ அல்லது பெரியனவோ பொதுவாகப் பல கோவில்களில் நிரந்தரமாகவே பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகளைத் தினமும் பூசை வேளைகளில் பயன்படுத்தி சுற்றுச்சூழலின் அமைதியைக் குலைக்கும் செயற்பாடுகள் அரங்கேறி வருவது கவலைக்குரியது.

திருவிழாக்காலங்களில் பெரும்பாலும் நாள்முழுவதும் இடைவிடாது ஒலிக்கும் ஒலிபெருக்கிச் சத்தத்தால் பாதிக்கப்படுவது முக்கியமாக மன உளைச்சல் உடையவர்கள், நோயாளிகள், பரீட்சை எழுதும் பள்ளி மாணவர்கள், என்பதை ஆலய நிர்வாகத்தினர் மறந்து செயற்படுவது மிகவும் வேதனைக்குரியது. ஆலயங்களை முறைப்படி இயங்க வைப்பதும், மதம் சார்ந்த கிரியைகள் முன்னெடுக்கப்படுவதும் மகிழ்ச்சிக்குரியவை தான்.

ஆனால் ஆலயம் என்ற பெயரில் ஒலிபெருக்கி ஓசையால் பாதிக்கப்படும் தரப்பினர்கள் குறித்து ஆலய பரிபாலன சபையினர் சற்றுச் சிந்தித்து செயற்பட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

இன்பத்திலும் துன்பம் உண்டு என்பது போல், இனி வருங்காலங்களிலாவது இரவு வேளைகளில் குறிப்பிட்டதொரு நேரத்தின் பிறகாவது ஒலிபெருக்கிப் பாவனையை நிறுத்தி காலை 4 மணிக்குப்பின்னர் மீண்டும் (நோயாளர் நன்மை கருதி) ஒலிக்க விடுவார்களா? ஆலயத்தில் தானே செய்கிறோம் எனச் சாட்டுப் போக்குக்கூறி, சுற்றுச்சூழலில் வசிப்போரை வருத்தும் இந்தச் செயற்பாடு ஒரு அடாவடித்தனம் தான் என்பதை தயவுசெய்து மறந்து விடாதீர்கள்!

அன்பு,
வரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்கான கோருதல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## மீள்குடியேற்ற அமைச்சுக்காக

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, சார்பில் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணத் திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்ற வருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டடம், குளங்கள் மற்றும் வீதி நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டிய லில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்திற்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக்கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது..

5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

**மீள்குடியேற்ற பிரிவு,**
**மாவட்ட செயலகம்**
**கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**Tel: 021-2212631 / 021-2224029**

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 17.07.2017 முதல் 03.08.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகை யினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விகள் 04.08.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராக ரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர் களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.

8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 25.07.2017 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.

9. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

10. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| இல | வேலை விவரம் | மீளளிக் கப்படாத தொகை (ரூபா) | கேள்வி அடையாள இல | மதிப்பீட்டுத் தொகை (வற் நீங்கலாக மில்லியன்) | தேவையான தராதரம் (CIDA) | கேள்வி பிணை விவரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| | வீதி | | | | | | | |
| 1 | அம்பன் கொட்டோடை கடற்கரை வீதி புனரமைப்பு | 2,500.00 | JF/RES/INFRAS-ROAD/IV/07/PPD/2017 | 5.12 | C7 ( வீதி) | 51,200.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| 2 | மண்கும்பான் பள்ளிவாசல் உள்ளக வீதி புனரமைப்பு | 2,500.00 | JF/RES/INFRAS-ROAD/IV/08/VELANAI/2017 | 3.61 | C8 (வீதி) | 36,100.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| | குளங்கள் | | | | | | | |
| 3 | சாவகச்சேரி முள்ளி முதல் மிருசுவில் வடக்கு வரையான வடமராட்சி நீரேரியின் வெள்ள நீர்த்தடுப்பு அணை மற்றும் ஒழுக்காக்கிகள் புனரமைப்பு | 3,500.00 | JF/RES/MINOR TANK-IRRI-CHAVA-01/IV/08/2017 | 10.9 | C6 and C5 ( நீர்ப்பாசனம்) | 109,000.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| 4 | அரியாலை உப்பாறு வெள்ள நீர்த்தடுப்பு அணை மற்றும் ஒழுக்காக்கிகள் புனரமைப்பு (கட்டம் II) | 2,500.00 | JF/RES/MINOR TANK-IRRI-NALLUR-01/IV/09/2017 | 5.46 | C7 ( நீர்ப்பாசனம்) | 54,800.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| 5 | காரைநகர் சிவன் கோவிலடி (பறவைக்கடல்) உவர்நீர்த்தடுப்பு அணை மற்றும் ஒழுக்காக்கிகள் புனரமைப்பு (கட்டம் II) | 2,500.00 | JF/RES/MINOR TANK-IRRI-KARAI-01/IV/03/2017 | 5.13 | C7 ( நீர்ப்பாசனம்) | 51,200.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| 6 | நயினாதீவு பெருங்குளம் மற்றும் கால்வாய் புனரமைப்பு | 2,500.00 | JF/RES/MINOR TANK-VELANAI-01/IV/02/2017 | 3.54 | C8 ( நீர்ப்பாசனம்) | 35,400.00 | 15.11.2017 | 90 நாள்கள் |
| | கட்டிடங்கள் | | | | | | | |
| 7 | அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை அமைத்தல் | 2,500.00 | JF/RES/RICE MILL/VII/01/2017 | 5.47 | C7 (கட்டடங்கள்) | 54,800.00 | 15.11.2017 | 120 நாள்கள் |
| 8 | யா/ஊறணி கனிஸ்ட வித்தியாலய வகுப்பறை கட்டுமானம் (50*25*2) | 2,500.00 | DS/JF/RESETTLE/2017-13 | 6.22 | C7 (கட்டடங்கள்) | 62,200.00 | 15.11.2017 | 120 நாள்கள் |

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.


# காலநிலை மாற்றங்கள் பொருளாதாரத்துக்கு சவாலாக அமைகிறது

*அரச தலைவர் கருத்து*



காலநிலை மாற்றங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பின்னடைவுகளை கண்டுள்ளது என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவை பளுகஸ்தமன அரச தலைவர் மாதிரி ஆரம்ப பாடசாலை தொடக்க நிகழ் வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே இந்தவிடயங்களை அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும்தெரிவித்ததாவது: "நெல் உற்பத்தி 40 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. காலநிலை மாற்றம் அதீத வறட்சியை தந்துள்ளது. வயல் நிலங்களில் அறுவடைகள் மேற்கொள்ளப்படவில்லை. உள்நாட்டு அரிசி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் அரிசி விலை அதிகரித்துள்ளது. அரிசி கொள்வனவுக்காக நான்கு நாடுகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளோம். எதிர்வரும் ஒரு மாத காலத்தினுள் நான்கு நாடுகளில் இருந்தும் அரிசி இறக்குமதி செய்யப்படும்." - என்றார்.

இதன்போது தொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதி அமைச்சின் வழிகாட்டலின் கீழாக செயற்படுத்தப்பட்ட ஸ்மார்ட் சமூக திட்டமும் அரச தலை வரால் ஆரமபித்து வைக்கப்பட்டது.

அரச தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன, இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் நடைமுறைக்கு வரவேண்டும்

நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு அரசிடம் கோரிக்கை

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களுக்கான தரக்கட்டுப்பாடு விதிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்தான அறிக்கையொன்றை வெளியிட்டு கருத்துரைத்துள்ள நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ரஞ்சித் பீரிஸ்,

"இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் சில பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களில் நச்சு இரசாயன அணுக்கள் அடங்கியுள்ளது. இந்த விடயங்கள் சுற்றுச் சூழல் துறைசார் நிபுணர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்களை இவை ஏற்படுத்தும்.

தற்போது இலங்கைக்குள் பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யும் போது எந்தவொரு தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகளும் பின்பற்றப்படுவதில்லை. இந்தச் செயல்நிலைகள் தரம் குறைந்த விளையாட்டுப் பொருள்களை எந்தவித தடையுமின்றி நாட்டுக்குள் உள்வருவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி தொடர்பான தரக்கட்டுப்பாட்டு விதிமுறை ஒன்றையும் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்" - என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவிலூர் கலா

> மனித இயல்பின் வழியேயான ஆசைகள் இயல்பானவை. கவர்ச்சி, தேவை, தரம், கௌரவம் என்பனவற்றில் அடிப்படையில் இவை கணிப்பினைப் பெறுகின்றன. ஆனாலும் இவை அழிவை ஏற்படுத்துவதாகவோ, மனித நேயத்தை சிதைவுறச் செய்வதாகவோ இருப்பதென்பது பாரதூரமான விளைவுகளை எமக்குத் தந்துவிடுகின்றன.



# மனிதநேயம் கொண்ட வாழ்வியல் காணல்

## அறம் சார்ந்த அழகியல் கோலம்

உலகில் வாழும் உயிர்மங்களுள் மனிதன் முதன்மையானவன். படைப்பியல் ரீதியில் ஆறறிவை மேன்மைத்துவம் செய்கின்ற தனித்துவப் படைப்பியல்பு உடையவன். பன்மைத்துவங்களின் கையாளுகைக்கு உட்பட்டவன். விழுமியங்களின் பின்பற்றுகையையும், அவை தருகின்ற பின்னூட்டங்களையும் கடைப்பிடித்து தன்னிலையில் வளம் பெற வேண்டிய வரையறைகளை கொண்டு அசைவியக்கம் காண்பவன். சமூகம் என்ற தன்னிறைவுக் குழுமங்களிடையே நிலையான அங்கத்துவங்களையும், அவை அனுசரித்துக் கொள்கின்ற இயல்நிலை ஒழுக்கங்களை ஏற்று நடக்க வேண்டிய கடப்பாடுகளையும் முழுமை செய்ய வேண்டிய பணியாளன். சமூக அபிவிருத்திப் பாதையில் பிறழ்வின்றி நடைபயில்வை மேற்கொள்ள வேண்டிய சேவகன். மொத்தத்தில் அறிவின் நயம் கொண்டு தர்க்க ரீதியில் சரியானவற்றை பயன் கொண்டு கட்டமைவோடு செயற்பட வேண்டிய தனிமம்.


அந்தவகையிலே கல்வியின் தனிச்சிறப்புகளை அறிவு கொண்டு பகுப்பாய்ந்து தன்னிறைவு காண்பதில் மனிதன் சிறப்புத் தேர்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ளான். அபிவிருத்தியின் ஆதார நிலைகளை அதீதமாகக் கண்டடைந்துள்ளான். மாறாக அதற்கு நிகரான நிலை குலைவுகளையும் அனுபவ நிலை சார்ந்து பெற்றுக்கொண்டுள்ளான். படைப்பியல் சார்ந்து அவனது பயணம் என்பது ஏற்ற இறக்கங்களையும், கடப்பாடுகளுள் இறுக்கங்களையும் தளர்வுகளையும் சுழற்சி முறைமையின் வழியே வடிவமைவு பெறச் செய்துள்ளது என்பது நோக்குதற்குரியது. தற்காலத்தின் தொழில்நுட்பங்களின் அறிவியல் நிலைப்பட்ட பயணம் கொள்ளலிடை இடைவிலகலின்றி அவற்றோடு சார்புநிலைப்பட வேண்டிய காரண காரியங்கள் யதார்த்தப் பாங்குடையவை.

**அறிவியல் கூறுகள்**

இந்தநிலையிலே மனித அறிவின்பால் வளர்ச்சியடைந்த அறிவியல் கூறுகள் மனிதனை அழிவுநிலைக்குட்படுத்துகின்றன. அறிவியல் செயல்நிலைகள் மனித இனத்துக்கு எவ்வளவு பயன்பாடுகளைத் தருகிறதோ அதை விடவும் பன்மடங்கு அளவுடையதான அழிவுகளையும் தருகின்றன.

அறிவியலில் தோய்ந்து மறைவு கொண்டுள்ள மனிதன் பலவிதமான ஆசைகளையும், அற்பமான தேடல்களையும் அவனது இயல்பு நிலையிலிருந்து தனதாக்கிக் கொள்கிறான். இதன்விளைவுகள் பிற நாகரிகங்களை உள்வாங்கவும், மனித வாழ்வுக்கு அப்பாற்பட்ட கலாசாரங்களை தோற்றுவிக்கவும் செய்கின்றன. இவை சமுதாயச் சமநிலைகளில் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியுள்ளதையும் காணமுடிகிறது.

அறிவுநிலைக்கு அப்பாற்பட்டதான உந்துதல்கள் போதை, பாலியல் வன்முறை, வாள் வெட்டு, திருட்டு என பல்பரிணாமக் கலாசார வெளிகளாக தோற்றம் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளதை காணமுடிகிறது. சமூக நிலையில் இனத்துவமான விழுமியப் பேண்தகு நிலைகளிடை சந்தோசங்களையும், தனித்துவங்களையும், மேன்மைத்துவங்களையும் விழிப்பின் றிய குழிகளுள் புதைத்து விட்டுள்ளன. முடிவில்லாத வேதனைகளோடும், கண்ணீரோடும் வாழும் நிலைகளைப் பரிசளித்துள்ளன. இந்த நிலைகளில் இருந்து மீண்டெழுந்து அழகிய கலாசாரவிழுமியங்களை சுத்தம் செய்துகொள[illegible]டிய நிலைக்கு நாம் ஆட்பட்டுள்ளோம்.



**ஆசையின் கீறல்கள்**

மனித இயல்பின் வழியேயான ஆசைகள் இயல்பானவை. கவர்ச்சி, தேவை, தரம், கௌரவம் என்பனவற்றில் அடிப்படையில் இவை கணிப்பினைப் பெறுகின்றன. ஆனாலும் இவை அழிவை ஏற்படுத்துவதாகவோ, மனித நேயத்தை சிதைவுறச் செய்வதாகவோ இருப்பதென்பது பாரதூரமான விளைவுகளை எமக்குத் தந்துவிடுகின்றன. ஆசைகள் எப்போதும் அறம் சார்ந்ததாகவும், நியாயம் சார்ந்ததாகவும், நீதியின் நிலைக்குட்பட்டதாகவும் இருக்கவேண்டும். அறம், நீதி, நியாயம், உண்மை என்பவற்றுக்கு அப்பாற்பட்ட ஆசையானது வலிசுமந்த மனங்களை உருவாக்கிவிடுகின்றன. பெண் சமூகம் மீதான ஈர்ப்பு என்பது அரவணைப்பையும், ஆறுதல்களையும், பாதுகாப்பின் அரண்களையும் கொண்டமைந்திருக்க வேண்டும். எப்போதுமே மாறுதலற்று பெண்மைக்கு மதிப்பளிப்பதாக இருக்க வேண்டும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஈர்ப்பு உடல் வருந்தலையும், வியர்வை சிந்திய தனித்துவப் பணிவிடைகளையும், நேர்மையான உழைப்பையும் கொண்டிருக்க வேண்டும். பதவிநிலை மீதான ஈர்ப்பு என்பது உரித்துடைய கல்வித்த[illegible]அடிப்படையில் ஊழலற்ற [illegible]சேவையின் வழியே செய்திருக்கப் பணிக்க வேண்டும். இவை தாண்டிய பயணப்பாடுகள் எப்போதுமே மானிட வாழ்வுக்கு ஏற்புடையவையல்ல. புரிந்துகொள்ள வேண்டும்.

**பிறழ்வின்றிய மனிதம் பேணல்**

தமிழ் சமூகத்தின் நிலைத்திருப்பை நோக்கின் நீண்ட காலப் போர், இடைநிலை கொண்டு எழுந்த சொற்ப கால நிலையுடைய சமாதானம் என்ற நிலை பெயர்வுகளும், தொடர் தேவைகளும், அதன்வழிப்பட்ட உயிர் உடமை இழப்புகளுமே எஞ்சியுள்ளன. மார் தட்டி வாழ்ந்த தனித்துவப் பரம்பரைக் குடிகளாய், ஒழுக்கவிழுமியங்களை பாண்பாட்டு ரீதியில் பற்றிக் கொண்டவர்களாய் நற் பயணங்களை மேற்கொள்ளாது அவை அனைத்தையும் வீசி எறிந்துவிட்டு வெறும் கையோடு வாழ்வதென்பது நியாயமானதா..? அற்ப சொற்பமான ஆசைகளுக்குள் அருமந்த மனிதத்தை தொலைப்பதா..? மானுடத்தின் உச்சநிலை என்பது நெறிமுறைகள் தவறாத வாழ்வியல் கோலங்களின் சிறத்தலே. தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆக, வாசலில் போடப்படும் எழிற்கோலமானது பலபுள்ளிகளை இணைத்து உருப்பெறுகிறது. அதேபோல் தயவு, தாட்சண்யம், அன்பு, விட்டுக்கொடுப்பு, மனிதநேயம் என்பவற்றை உள்ளடக்கியதாகவே மனித வாழ்வும் சிறப்புறு கிறது. வீட்டுவாசலில் போடப்படும் அழகியகோலமானது மனதுக்கு இதமளிக்கிறது. அந்தக் கோலத்தை மீறியதாய் எந்த ஒரு நீதி கெட்ட செயல்நிலைகளும் உட்செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கோலம் என்பது தற்காப்பாக ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். சமூக விழுமியம் என்கின்ற புள்ளிக் கோலங்க ளைத் தாண்டி எந்த ஒரு அசிங்கங்களும் உட்புகாவண்ணம் தடை போட வேண்டும். ஒவ்வொருவரதும் தலையாய கடமையாக இந்தக் கோலமிடல்கள் முன்னிலை பெற வேண்டும். இழிநிலைகளைத் தூர விரட்டிட கனதியான கட்டமைவைப் பெற வேண்டும்.

*"வையத்துள் வழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."* என்ற குறள் மொழியுரையும் தத்துவம் போலவே நீதி சார்ந்த, அறம் சார்ந்த வாழ்வை நாம் வாழ வேண்டும். வேண்டாத ஆசைகளைத் துறந்து அவற்றுக்கு முற்றுப்புள்ளிகளை இட்டுக் கொள்ள வேண்டும். அனைவரும் சகோதரத்துவத்துடனும், மனிதாபிமானத்துடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ராகு, கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மற்றவர்களின்மனஓட்டத்தைஅறிவதில்வல்லவர்களே! எதிர்வரும்27ஆம்திகதிமுதல்13.2.19வரைஉங்களுக்கு ராகு 5ம் வீட்டிலும், கேது 11ம் வீட்டிலும் அமர்ந்து பலன் தரப்போகிறார்கள்.

**ராகுவின் பலன்கள்:** ராகு பகவான், இப்போது உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். குடும்பத்தில்இருந்தசச்சரவுஓரளவுகுறையும்.தம்பதிக்கு இடையேமோதல்கள்விலகும். எனினும்சிலதருணங்களில் தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். சிலர் கல்வி அல்லது பணியின்பொருட்டு, குடும்பத்தைப் பிரிய நேரிடும். மகளின்திருமணவிஷயத்தில்அவசரம்வேண்டாம். மகனின் நட்புவட்டாரம் குறித்து கவனம் தேவை. வாகனத்தைஇயக்கும்போதும்அலட்சியம்கூடாது. யோசித்து செயல்படுங்கள். தாய் ஈாய்மாமன்வகையில்மனத்தாங்கல்வரும்.

உங்களின் சுக, சப்தமாதிபதியான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 4.4.18 வரை ராகு பகவான் செல்வதால், இக்காலக்கட்டங்களில் வேலைச்சுமை இருக்கும். வாகனம் வாங்குவீர்கள். வசதியானவீட்டுக்குமாறுவீர்கள். வேலைகிடைக்கும். பணம் வரும். போட்டிகளில்ஜெயிப்பீர்கள். 5.4.18முதல்10.12.18 வரைராகு உங்களின் விரய லாபாதிபதியான சனிபகவானின் பூசம் நட்சத்திரத்தில் செல்வதால், எதிர்பாராத நன்மைகள் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடிவடையும். வெளிநாடுசெல்லநுழைவுவிசைவு கிடைக்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. பணப்புழக்கம் உண்டு. மாணவர்கள் விளையாட்டு, இசைப் போட்டிகளில்பரிசும்பாராட்டும்பெறுவார்கள். சிலர், உயர்கல்விக்காக அயல்நாடு செல்ல வேண்டி வரும். கன்னிப்பெண்களே! உங்களின் நீண்டகால கனவுகளில் ஒன்று நிறைவேறும். வெளிமாநிலத்தில் வேலை கிடைக்கும். கலைத்துறையினரே! எதிர்பார்த்த வாய்ப்புகள் தேடி வரும். சம்பள விஷயத்தில் கறாராக இருங்கள். வியாபாரத்தில், மற்றவர்களின் பேச்சைக் கேட்க வேண்டாம். சந்தை நிலவரத்துக்கேற்ப முதலீடு செய்யுங்கள். வேலைச்சுமைஇருந்தாலும், பாராட்டால்உற்சாகம்அடைவீர்கள்.

**கேதுவின் பலன்கள்:**

கேது பகவான் உங்கள் ராசிக்கு லாப வீடான பதினொன்றில் வந்து அமர்கிறார். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வீட்டில்தடைப்பட்ட சுபகாரியங்கள் ஏற்பாடாகும். உங்களில்சிலர்சொந்தத்தொழில்தொடங்குவீர்கள். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள்.

சிலருக்குக்குழந்தைபாக்கியம்கிடைக்கும். மனைவிவழி உறவினர்கள்மத்தியில்செல்வாக்குக்கூடும். புதுபொறுப்புகள், பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்ப வர்களில் நல்லவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதை புரிந்துகொள்வீர்கள்.

எதிர்வரும்27ஆம்திகதிமுதல்29.11.17வரைஉங்களின் தன பாக்யாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம்1, 2ம்பாதம்மகரராசியில்கேதுபகவான்செல்வதால், இந்தக் காலகட்டத்தில் திடீர் யோகங்கள் உண்டாகும். பணவரவு உண்டு. சிலர், வீடுமாறுவீர்கள். சகோதரிக்குத் திருமணம் முடியும். தந்தையாரின் உடல்நிலை சீராகும். உங்களின்பூர்வபுண்யாதிபதியானசந்திரனின்திருவோணம் நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது செல்வதால், குழந்தைபாக்கியம்உண்டு. பூர்வீகச்சொத்து கைக்கு வரும்.

பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வர். வேலை கிடைக்கும். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் சஷ்டமாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ம் பாதம் மகர ராசியில் கேது செல்வதால், வழக்கில் வெற்றி கிடைக்கும். லாபம் இரட்டிப்பாகும். சிலர், சில்லறை வியாபாரத்திலிருந்து மொத்த வியாபாரத்துக்கு மாறுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். விரும்பிய இடத்துக்கே மாற்றம் கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடிவரும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1793 - ஊடகவியலாளரும்பிரெஞ்ச்புரட்சியாளருமான ஜீன்போல் மறாற் எதிர் அரசியல் சார்ந்த உறுப்பினரால் படுகொலை செய்யப்பட்டார்.

1919 - அத்திலாந்திக்சமுத்திரத்துக்குமேலாக182 மணித்தியால வெற்றிகர பயணத்தை முடித்துக் கொண்டு பிரிட்டிஷ் வானூர்தி சு3 பிரிட்டனின் நோர்போக்கில் தரையிறங்கியது.

1977 - சோமாலியா, எதியோப்பியா மீது போர் அறிவிப்பு செய்ததையடுத்து ஓர்கெடன் போர் தொடங்கியது.

1965 - அமெரிக்க அரச தலைவர் அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து உதவி அரசதலைவர் ஜோர்ஜ் H.W புஷ் அன்றையதினம்கடமைநிறைவேற்று அரச தலைவரானார்.

1986 - திருகோணமலைபிள்ளையார்கோயிலில் எரிந்த நிலையில் சடலம் மீட்பு.

1986 - இந்து-முஸ்லிம்கலவரத்தால்குஜராத்தில் 40பேர்சாவு 4நாள்களாகமோதல்.

1986 - அடம்பனில் இடம்பெற்ற வானூர்திக் குண்டு வீச்சில் 18 பேர் சாவு.

1986 - வவுனியா பாவற்குளத்தில் 11பேர், ஜிப்பில் சிவில் உடையில் சென்றோரால் சுட்டுக் கொலை. இதில் 9 பேர் தமிழர் 2பேர் சிங்களவர்.

1995 - யாழ். நிலையை எடுத்துரைக்க குருமார் கொழும்பு விரைவு.

1995 - கைப்பற்றிய இடங்களை ராணுவம் விட்டுக் கொடுக்காதென அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

2005 - பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் மூன்று ரயில்கள் மோதிக்கொண்டன 300 பேர் வரை உயிரிழந்தனர்.

2011 - இந்தியாவின் மும்பை நகரம் மூன்று குண்டு வெடிப்புக்களால் அதிர்ந்தது 26 பேர்சாவடைய130பேர்காயமடைந்தனர்.

2013 - கிழக்குச்சீனா மற்றும் தைவானில் சூறாவளிக் காற்றினால் 9 பேர்வரை உயிரிழந்ததுடன் 160 மில்லியன் வரையானவர்கள் பாதிக்கப்பட்டனர்

2016 - வித்தியா கொலை வழக்கு மரபணுச் சோதனை விவரம் உரிய நேரத்தில வெளிவரும் எனத் தெரிவிப்பு.

### நாளை

**ஆனி - 30**
புதன்கிழமை -12.07.2017
திதி: பஞ்சமி பி.ப.12.39 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.10.52 வரை
சுபநேரம்:06.00-07.30 வரை
ராகுகாலம்:10.30-12.00 வரை

## அல் பக்தாதி தொடர்பில் உண்மை நிலை என்ன?

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உலகம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிக்கும் போது இந்த நூற்றாண்டின் இன்பச்செய்தி ஈராக்கில் இருந்து வந்திருந்தது. அது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வீழ்ச்சியே ஆகும். ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அதாவது ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேற் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) என்று அறிவித்தார் அந்த அமைப்பின் தலைவரான அபுபக்கர் அல் பக்தாதி.

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் தாயகமாகவும் கோட்டையாகவும் மோசூல் விளங்கியது. இதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று பரப்பரளவில் மோசூல் மிகப் பெரியது. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகர் அதுவே. இரண்டாவது ஈராக்கின் முதன்மையான வர்த்தக நகர் என்ற வகையில் ஏகப்பட்ட வளங்களைஐ.எஸ்.ஐ.எஸ். மோசூலில் இருந்து பயன்படுத்திக் கொண்டது. இதன்படி போர்த்தளபாடக் கொள்வனவுக்கு மோசூலின் எண்ணெய் வளத்தை மிகையாகப் பயன்படுத்தியதுஐ.எஸ். எனவே இந்தநகரில்இருந்துஐ.எஸ். விரட்டப்பட்டால் அது அந்த அமைப்பின் அழிவுக்கு வித்திடும் என்று தெரிவிக்கப்பட்டது. நீண்டதும் கொடியதுமான போரின் பின்னர் மோசூலில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்ட செய்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்துசேர்ந்தது. எனினும் அதன் தலைவர் அல் பக்தாதி தொடர்பில் இன்றுவரை உறுதியான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

மோசூல் சுற்றிவளைக்கப்பட்ட போது அல் பக்தாதிஅந்தநகரிலேயேஉள்ளார்என்றும்அவர் எங்கும் தப்பித்துச் செல்லவில்லை, இனியும் அவ்வாறு செல்ல வாய்ப்பில்லை என்றும் அமெரிக்காவும் ரஷ்யாவும் தெரிவித்தன.




மோசூல் நகர் 75 சதவீதம் மீட்கப்பட்டிருந்த நிலையில் தமது வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி உயிரிழந்தார் என்று ரஷ்யா தெரிவித்தது. இதை ஈரானும் ஏற்றுக்கொண்டது. எனினும் அமெரிக்கா இதை ஏற்கவில்லை. பக்தாதி கொல்லப்பட்டமைக்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அமெரிக்கா அறிவித்தது. மோசூல் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னரும் பக்தாதி உயிருடன் பிடிக்கப்படவில்லை. அவரின் சடலமும் கிடைக்கவில்லை. இதனால் ரஷ்யா ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் பக்தாதி கொல்லப்பட்ட செய்தியை ஏற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சிரிய போர்க்கண்காணிப்பகம் பக்தாதி கொல்லப்பட்டார் என்று நேற்று அறிவித்துள்ளது. எனினும் அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் தமது மௌனத்தைக் கலைக்கவில்லை. மொத்தத்தில் பக்தாதி தொடர்பில் உறுதியான நிலை இன்றுவரை புலப்படவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை இந்த வருடம் முடிவதற்குள் உலகிலிரந்து ஐ.எஸ். ஐ.எஸ். வேரறுக்கப்படும் என்பதுதான் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 4 | | | | | |
| 3 | 6 | 1 | | | | | | |
| 2 | | 8 | | 7 | | | 3 | |
| | | 6 | | 1 | | | | 7 |
| 7 | | | 9 | | 5 | | | 2 |
| 8 | | | | 2 | | | | |
| | 3 | | | 4 | | 7 | | 6 |
| | | | | | | 3 | 4 | 1 |
| | | | | | 1 | | 2 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 9 |
| 1 | 9 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 2 |
| 6 | 7 | 2 | 4 | 8 | 9 | 5 | 1 | 3 |
| 7 | 5 | 6 | 1 | 3 | 2 | 9 | 4 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 |
| 9 | 3 | 4 | 7 | 6 | 8 | 2 | 5 | 1 |
| 3 | 6 | 1 | 5 | 9 | 7 | 8 | 2 | 4 |
| 5 | 2 | 9 | 8 | 4 | 6 | 1 | 3 | 7 |
| 8 | 4 | 7 | 2 | 1 | 3 | 6 | 9 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உன்னால சீக்கிரமா தூங்க முடியல. நேரத்துக்கு வேலைக்குச் செல்ல முடியல. நண்பர்கள் கூட சுத்த முடியல்ல. இப்படி என்ன புலம்ப விட்டுட்டியே...



அடேய் உன்னால் ஒன்னே ஒண்டு மிச்சம்டா, நான் டிவி பார்த்துப் பல மாசமாச்சுடா...

எவ்வளவு படிச்சு என்ன பிரயோசனம்



என்னதான் பெரிய போன் வச்சுருந்தாலும் கைநாட்டு வச்சாதான் வேலை செய்யுது.

தம்பி வங்கியில போய் நாம அடிச்சா கொள்கை




அவங்க நம்மகிட்ட அடிச்சா சர்வீஸ் சார்ஜ் அவ்வளவுதான் வித்தியாசம்

அனாதை இல்லத்தையும் முதியோர் இல்லத்தையும் ஒன்று சேர்த்து விடுங்கள்...



பேரக்குழந்தைகளுடன் தாத்தா, பாட்டி சந்தோசமாய் இருக்கட்டும்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடப் பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் மிகுந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் குடும்ப பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளின் செயல்பாட்டால் பெருமிதம் காண்பீர்கள்.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்லலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உண்டாகி மறையும். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். தொழிலில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செயல்களில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பிள்ளைகளுக்கு விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து அக்கறை கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கூட்டாகச் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலைதூக்கலாம். எச்ச ரிக்கையாக இருப்பது நல்லது.

**தனுசு:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம் கவனம். குடும்பத்தினரின் ஆதரவு கைகொடுக்கும். தொழிலில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கும். அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார். சுப விஷயத்தில் உறவினர்களின் ஆதரவு உண்டு..

**கும்பம்:** நண்பருக்குத் தேவையான உதவி செய்வீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**மீனம்:** குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது அவசியம். தொழிலில் உருவாகிற இடையூறு தாமதமின்றி சரிசெய்வது நல்லது. உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



## கோடிகளை அள்ளவுள்ள வேலைக்காரன்

சினிமா

சிவகார்த்திகேயன் நடித்து வரும் வேலைக்காரன்படத்தின் வெளி நாட்டு வியாபாரம் தொடங்கிவிட்டது. இதன்படி அந்தப் படத்தின் வெளி நாட்டு உரிமத்தைப் பெறுவதற்கு பல நிறுவனங்கள்போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மோகன் ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள படம் வேலைக்காரன். இப்படத்தில்முதல்முதலாகநயன்தாராவும்சிவகார்த்திகேயனும் டுயட் பாடி இருக்கிறார்கள்.

படத்தின் தயாரிப்புப் பணிகள் முடிவடைந்து தற்போது படத்தைப் பிரபலமாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய அளவில் இந்தப்படம் பெரியளவில்எதிர்பார்க்கப்படும்ஒன்றாகஉள்ளநிலையில், படத்துக்கான வெளிநாட்டு உரிமத்துக்கும் தற்போது போட்டோபோட்டி ஏற்பட்டுள்ளதாம். இதன்படி ரஜினி, கமல், விஜய், அஜித், சூர்யா, விக்ரம் உள்ளிட்ட முன்னணி நடிகர்களின் படங்களுக்கு வெளிநாட்டில் எவ்வாறானமவுசு இருக்குமோ அந்தஅளவுக்குசிவகார்திகேயனின் படத்துக்கும் மவுசு எகிறியுள்ளதாம்.

twitter

- குடும்பத்துல இருக்கிற சிக்கலைக்கூட ஈஸியா எடுத்துரலாம் போல... இந்த ஹெட் போன்ல விழுந்த சிக்கலை எடுக்குறதுக்குள்ள தலை வலியே வந்துருச்சு!
- விதைப்பது பொய்யென்றால், அறுவடை செய்வது துன்பமாகத்தான் இருக்கும்.

## ஆண் என்பவன்



எதிர்காலத்தை லோன் வாங்கி கட்டமைத்துவிட்டு, அதனை அடைக்க வாழ்க்கை முழுதும் லோ லோ என்று அலைபவன்..

அடுத்தவர்களின் ஆனந்தத்திற்காகவே ஆயுள் முழுக்க அர்ப்பணிப்பவன்..

ஆண்களின் உலகம், தியாகங்களாலும் வியர்வையாலும் சூழப்பட்டது.

சிரிக்கத் தெரியாதவன் அல்ல
நேசிப்பவர்களின் முன்
குழந்தையாய் மாறுபவன் ..

காதலைத் தேடுபவன் அல்ல
ஒரு பெண்ணிடம்
தன் வாழ்க்கையை தேடுபவன் ..

கரடுமுரடானவன் அல்ல ..
நடிக்கத் தெரியாமல்
கோபத்தை கொட்டிவிட்டு
வருந்துபவன்

கடவுளின் உன்னதமான படைப்பு.

சகோதரிகளுக்காக, இனிப்புகளை தியாகம் செய்பவன்..

பெற்றோர்களின் ஆனந்தத்திற்காக, தன் கனவுகளைத் தியாகம் செய்பவன்.

காதலிக்கு பரிசளிக்க, தன் பர்ஸை காலி செய்பவன்.

மனைவி குழந்தைகளுக்காக, தன் இளமையை அடகு வைத்து அலட்டிக் கொள்ளாமல் அயராது உழைப்பவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செங்கால் நாரை




இந்த நாரைக்கு நாம் வீட்டில் வளர்க்கும் வாத்தின் பருமனுடைய நீண்ட முடியற்ற சிவந்த கால்களும் நீண்டு வளைந்த கழுத்தும், குறுகிய பனங்கிழக்கு பிளந்தது போன்ற அலகும் உண்டு. நிமிர்ந்து நின்றால் இந்தப் பறவை ஒன்றரை மீற்றர் உயரம் இருக்கும். கால் விரல்கள் சவ்வால் இணைக்கப்பட்டிருக்கும். றோசாப் பூ நிறம் கலந்த வெள்ளையுடலும் கரு நிறமான இறக்கை ஓரமும் கொண்ட இந்தப் பறவைகள் கூட்டமாகப் பறந்து உயரச் செல்லும் காட்சி மனதைக் கவரும் தன்மையது. இவை சேறுபடிந்த கடற்கரை மேடுகளிலும் உப்புக் கலப்புள்ள அகன்ற நீர்த் தேக்கங்களிலும் ஆழமில்லாக் குளங்களிலும் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. இவை சிரமமில்லாது நீந்தும். சற்று ஆழமான நீரில் இரை தேடும் போது வால் மட்டும் நீருக்கு வெளியேயும் உடல் முழுவதும் நீருக்குள்ளும் இருக்க, அந்த முக்குளித்த நிலையிலேயே புழுக்களை அரித்து உண்ணும். சிறு நண்டு, கூன் இறால்கள், பூச்சிகள், புழுக்கள், நிலப்புழுக்கள், நீர்த் தாவரங்களின் விதைகள் என்பன நாரைகளின் முக்கிய உணவுகளாகும். இந்த நாரைகள், வாத்துக்கள் பறப்பது போன்ற அமைப்பிலோ அல்லது அலையலையான நீண்ட சாய்வு கோடுகளாகவோ வேகமாக சிறகுகளை அடித்துப் பறந்து செல்லும். ஒடுங்கிய கழுத்தை நீட்டிப் பறக்கையில் சிவந்த கால்களைச் சேர்த்து பின் நீட்டிக் கொள்ளும். இந்த நாரைகள் சத்தமிடுவதில்லை. சில சமயங்களில் மட்டும் வாத்துக்கள் கத்துவது போல் குரல் எழுப்பும். ஈரக்களி மண்ணால் உயரமாகக் கூப்பி வைக்கப்பட்ட கிண்ணம் போன்றதுதான் இவற்றின் கூடு. அடுப்பில் வைத்து சுட்ட பாத்திரம் போன்றிருக்கும் இதன் உச்சியிலுள்ள குழிவில் சராசரி ஒன்று இரண்டு முட்டைகளை இடும். இந்த நாரைகள் இந்தியாவின் கட்சிவளைகுடாவில் மார்ச் மாதங்களில் ஒரு லட்சம் பறவைகள் மட்டில் இங்கு கூடுவதால் இது நாரைகளின் நகரம் என வர்ணிக்கப்படுகிறது.



## கோலத்தில் அடுத்து வரும் உருவை வரைவோம்



## அதிகளவு நீர் கொள்ளும் பாத்திரத்தின் கீழ் கோடிடுவோம்



## ஒலி பேதங்களை அனுசரித்து வாசிப்போம்

**னகர,ணகர வேறுபாடு**

வானவில்
வாண வேடிக்கை
மன மகிழ்ச்சி
மண மக்கள்
அன்னப் பறவை
அண்ணன்
கனவளவு
கண்ணாடி

**ரகர,றகர வேறுபாடு**

அரங்கம்
அறநெறி
பரபரப்பு
பறவைகள்
கடற்கரை
சட்டைக்கறை
மரம்கொத்தி
பறவைகள்

**லகர, ழகர வேறுபாடு**

கலகம்
கழகம்
மரக்கலம்
வாழைப் பழம்
பெருமலை
பெருமழை

**லகர, ளகர வேறுபாடு**

வெல்லம்
வெள்ளம்
வில்லன்
விளம்பரம்
வலதுகை
பள்ளம்

**லகர, ழகர, ளகர வேறுபாடு**

பல்வலி
சூறாவளி
நேர்வழி
உலக வலம்
உழவர்கள்
உளவுத்துறை





## தேடுகிறோம்....

சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ்சிறிய பூச்சிதான்
வளைந்து வளைந்து புதுமையாக
வட்ட வலையைப் பின்னுதே


தேனீக் கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமை
பேணி வீட்டைக் கட்டுதே
பெரிய முயற்சி செய்யுதே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்
எள்ளைப் போன்ற உயிரினம்
அழகுப் புற்றை ஆக்குமே
உணவும் தேடிச் சேர்க்குமே

பகுத்தறிவு கூடிய
மனித இனத்தைப் பாருங்கள்
ஈனமான செயல்களால்
மானிடத்தை அழிப்பதை

உடன் பிறப்போ கடனிலே
உற்றவரோ தெருவிலே
பாசாங்கான வாழ்க்கையில்
பந்தபாசம் தான் எங்கே?

## இரண்டு படங்களுக்கும் இடையே 12 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்



# மெய்யான உறவுகள்

ஓர் ஊரில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் நீர் நிறைந்திருந்ததால் அது மிக அழகாகக் காட்சியளித்தது. மேலும் அந்தக் குளத்திலே ஆம்பல், நீலோற்பலம், தாமரை போன்ற நீர்க்கொடிகள் அழகாக பூத்தும், செழித்தும் அழகு செய்தன. நீர்ப் பறவைகளான கொக்கு, நாரை, மீன்கொத்தி போன்ற பறவைகளும் குளத்தையண்டி வாழ்ந்து குளத்தை மேலும் அழகு செய்தன. குளமோ, தன்னிலே தங்கி வாழும் நீக் கொடிகளுக்கு தன்னிடமுள்ள நீரைப் போதியவு கொடுத்தும் நீர்ப் பறவைகளுக்கு தன்னிடமுள்ள மீன்கள் நண்டுகள் என்பவற்றை உணவாகக் கொடுத்தும் உறவாடிக் களித்தது.

ஒரு ஆண்டில் உரிய காலத்தில் மழை பெய்யவில்லை. ஊரே வறண்டு போய் விட்டது. பயிர் பச்சைகளும் விளையவில்லை. அந்தக் குளத்திலும் நீர் சிறிது சிறிதாக வற்றி கடைசியில் அடித்தரையும் காய்ந்து போகும் நிலை வந்தது. இனி அந்தக் குளத்தில் தங்களுக்கு உணவு கிடைக்காது என்றறிந்த பறவைகள் காய்ந்து போகும் நிலையில் இருந்த நீர்க்கொடிகளிடம் "நீர்க்கொடிகளே! எமக்கு இனி இங்கே என்ன வேலை? எமக்கு உணவுக்கு இங்கு ஒன்றும் கிடைக்காது. ஆகவோ நாங்கள் வேறு நீர்நிலைகள் நாடி செல்லப் போகிறோம். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கிருந்து செத்து மடியப் போகிறீர்களா? நன்றாக யோசித்து முடிவெடுங்கள்" என்று கூறி எல்லாப் பறவைகளும் வேறு இடம் நாடிப் பறந்து சென்றன.

நீர்க்கொடிகளில் சின்னஞ் சிறிய கொடி ஒன்று மற்றக் கொடிகளைப் பார்த்து "பறவைகள் சொல்வது போல இந்தக் குளத்திலே நாம் வாழ்ந்தால் நாமும் கொஞ்ச நாள்களில் காய்ந்து சருகாகி விடுவோம். அதனால் வேறிடம் பார்ப்பதே நல்லது " என்று கூறி அடம் பிடித்தது. அதற்கு பெரிய பூங்கொடி ஒன்று பதிலளித்தது. "இந்தக் குளம் நீர் நிறைந்திருந்த போது ஒரு தாயைப் போல நம்மை ஆதரித்துக் காப்பாற்றியது. ஆனால் அதனை மறந்து விட்டு நீர்பறவைகள் சிறிது கூட நன்றியில்லாமல் தாய்க்குத் துன்பம் வந்த காலத்தில் பறந்து போய்விட்டன. நாமும் பறவைகள் போல் நன்றியற்றவர்களாக நடந்து கொள்ளக் கூடாது.



காய்ந்து கருகினாலும் இந்தக் குளத்திலேயே கிடந்து நாமும் சாவோம். குளத்துக்கு வந்த துன்பம் நமக்கும் வரட்டும். துன்பத்தில் பங்கு கொள்வதுதான் உண்மையான உறவு. இந்தக் காலத்து மனிதர்களும் இப்படித்தான். ஒருவரிடம் பண உதவியோ வேறு உதவிகளோ பெறுவதற்கு ஒருவரோடு ஒட்டி உறவாடுவார்கள். தாம் பழகிய மனிதர் ஏழ்மைப்பட்டோ இயலாதவராக ஆகிவிட்டாலோ நன்றியில்லாமல் அவரை விட்டு ஒதுங்கி விடுவதுமல்லாமல் அவர் செய்தவற்றை மறந்து அவதூறும் பேசுவார்கள். இந்த நிலை கெட்ட மனிதர் போல், நாம் இருக்காமல் குளத்தின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்வோம் என்றது. அதன் கருத்தை எல்லாப் பூங்கொடிகளும் ஒப்புக் கொண்டு தங்கள் மெய்யான உறவை நிலைநிறுத்தின.

**தமக்கு உதவி செய்தவர்களுக்கு வறுமை, துன்பம் ஏற்பட்ட காலத்தில் நீர்ப் பறவைகள் போல் விட்டு நீங்கிச் செல்பவர்கள் உறவினரல்லர். பூங்கொடிகள் போல் அவர்களோடு சேர்ந்திருந்து துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் இயல்பினரே உண்மையான உறவினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மக்கள்...*

செயலை எம்மால் செய்ய முடியாது. ஆகவே புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை இத்தோடு நிறுத்திக்கொள்வது தான் நல்லது என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான ஆணையை ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடம் கோரின. ஆனால் எந்தக் கட்சிக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்தக் கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியவில்லை. அதேபோல் சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டும் அந்தக் கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்தன.

எந்தக் கட்சி வென்றாலும் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைக்கும் என்றுகூறினாலும்கூட விரும்பியோவிரும்பாமலோ இரண்டு கட்சிகளும் சேர்ந்தே ஆட்சி அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிராக இன்று நாட்டில் எதிர்ப்புகளும் உள்ளன. பௌத்த பீடங்கள்கூட எதிர்க்கின்றன. மக்கள் ஆணை இல்லாத ஒரு வேலையைச் செய்யப்போனால் பிரச்சினைகளும் எதிர்ப்புகளும் வரவே செய்யும்-என்றார். (கு-3)

*...ழல்...*

வைக்குச் சமர்ப்பித்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்ட பின் இந்தக் காரியாலயம் திறக்கப்பட்டது. 2016 நவம்பர் 22 ஆம் திகதி அதன் ஒரு வருடப் பதவிக்காலம் முடிந்தபின் மற்றுமொரு பிரேரணையின் படி பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி பதவிக்காலம் மீண்டும் முடிவடைந்தது. இந்தக் காரியாலயத்தின் செயற்பாடுகள் குறித்து அரச தலைவர் தனது கடும் அதிருப்தியைத் தெரிவித்ததையடுத்து நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தக் காரியாலயத்தை மூடிவிடுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (கு)

*றெஜிபோர்ம்...*

கார சபையினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய, சமயம், சமூகம், கலாசாரம் மற்றும் அரசியல் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் பொலித்தீன் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சொப்பிங் பாக் மற்றும் லஞ்சீற்களின் பயன்பாட்டினால், சுற்றாடலுக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டுள்ளபோதிலும், அவற்றைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு, மாற்றுப் பொருள்களை அறிமுகப்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு, அரசுக்கு உரியது என, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது. (கு)

## சிறு நீரகம் தேவை

50 வயதுடைய ஆண் ஒருவருக்கு A/O இரத்தவகை சிறுநீரகம் தேவை.

**தொடர்பு. 076 837 4540, 077 2431310**

## பிற்போடப்பட்டுள்ளது

ஒட்டுசுட்டான் ஒளிரும் வாழ்வு அமைப்பினால் நாளை (14.07.2017) வெள்ளிக்கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு எதிர்வரும் 30.09.2017 அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஒளிரும் வாழ்வு அமைப்பு, ஒட்டுசுட்டான்**

## விற்பனைக்கு

பந்தல் செற், மணவறை செற், பிளாஸ்ரிக் கதிரைகள், சோபா செற்றி, பியூட்டி பாலக்கதிரைகள், ஆவி பிடிக்கும் மெசின்கள், பாத்திரங்கள், பான்சிப் பொருள்கள் இன்னும் பல விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 077 218 6919**

## காணி தேவை

மாவிட்டபுரம் சந்தியில் இருந்து ஊறணி வரையாக பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணி உடனடியாகத் தேவை.

**காங்கேசன்துறை, அபிவிருத்தி சங்கம்**

**JF/VN/VOL/2016/32**

**077 233 5254**

Galaxy Star

வெற்றி வாரம் 176 திகதி 2017.07.12

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

04 03 05 13 38

04 17 34 41

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி

ரூ. 3, 253, 100/-

2017.07.16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும். வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரடி அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2902 திகதி 12.07.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 24 41 47 72 K

போனஸ் இல.: 32

சனிக்கிழமை ஜக்பொட்: 31, 048, 060/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 19 30 31 59

பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.07.15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## தொழில்வாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கொள்வனவு உத்தியோகத்தர் (PROCUREMENT OFFICER)**
**2. களஞ்சிய பொறுப்பாளர் (STORE KEEPER)**

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1) க.பொ.த. (சா/த) (O/L) மற்றும் க.பொ.த. (உ/த) (A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2) குறைந்தது ஒரு வருட துறைசார் அனுபவம்.
3) கணினி பற்றிய அறிவு
4) ஆங்கில அறிவு
5) வயதெல்லை 25 இற்கு மேல்.

கவர்ச்சிகரமான சம்பளம் தகுதிக்கிணங்க பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 20.07.2017 இற்கு முதல் நேரிலோ தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைக்கமுடியும்.

**மனிதவள முகாமையாளர்,**
**நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை,**
**No.342, பலாலி வீதி, திருநெல்வேலி.**
**Tel No. 0212219988, Extension No. 324**
**Mobile No. 077 77 32892,**
**Email - nchjaffna@gmail.com**

## உடனடி வேலை வாய்ப்பு

**1.MARKETING MANAGER**
**2.MARKETING CO- ORDINATOR**
**3.MARKETING ASSISTANT**
**4.GRAPHIC DESIGNER**
**5.WEB DESIGNER**
**6.LECTURER** /விரிவுரையாளர்
(தகைமை :-**MCA ,M.Sc in Comp. Sc)**
**7.**சுத்திகரிப்பாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
அனுபவம் விரும்பத்தக்கது
வெள்ளிக்கிழமை (14.07.2017) CV உடன்
நேரில் சமூகமளிக்கவும்
NORTH LANKA IIT
TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING
STANLEY ROAD, JAFFNA

DLB தசலக்ஷபதி CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 14
சீட்டிழுப்பு திகதி 2017.07.12

வெற்றி இலக்கங்கள்: 01 29 49 V வியாழ

13 16 40

1 17

5,526,240/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DL என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரடி அழைப்பு 1919

அடுத்த சீட்டிழுப்பு 2017.07.19 ஆம் திகதி புதன்கிழமை
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. மேலும் கணினியில் அனுபவமுள்ள (பில் கிளார்க்) உடன் தேவை.

**தொடர்புகளுக்கு - 071 013 6284, 076 328 3763**

## வேலையாள்கள் தேவை


**சுஜித் என்டர்பிறைசஸ் நிறுவனத்தில் பணி புரிய அலுவலக உதவியாளர். பெண்கள் தேவை. (சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை - சம்பளம் 12,000 - 15,000 வரை பெறலாம்) அத்துடன் பணம் அறவிடும் உத்தியோகத்தர் ஆண்கள் முன்னனுபவம் விரும்பத்தக்கது. (50,000-75,000 வரை பெறலாம்) .**

**தொடர்பு. 077 904 1258, 021 227 0586**

## கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
**27.03.1965**

**மறைவு**
**10.07.2017**



நெடுந்தீவு அஞ்சலகஅஞ்சலரான

**பொன்னையா**
**கிருஷ்ணகுமாரன்**
**(கண்ணன்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அஞ்சல் சமூகம், நெடுந்தீவு.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30
12
1952

மறைவு
24
07
2016

அமரர்

**கந்தையா சச்சிதானந்தசிவராசா** (சச்சி)

**( முன்னாள் இலங்கை மின்சார சபை ஊழியர்)**

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நாளை(14.07.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பரமேஸ்வரி அம்மன் வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**குடும்பத்தினர்.**
**மனைவி ச. கமலாம்பிகை**

## மரண அறிவித்தல்



**திருமதி மாணிக்கம் முத்துலிங்கம்**

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் முத்துலிங்கம் நேற்று (12.07.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் கேதாரீஸ்வரி காலஞ்சென்ற கோவர்த்தனன் மற்றும் அண்ணாமலை, கௌரீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம், சாந்தினி ஆனந்தசற்குருநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ராஜ்குமார், விஜித்தா, சர்மினி, தர்ஷனி, சிவகுமார், ரமணகுமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லத்திக்கா, யக்சியா, அஸ்ஷிக் வர்ஷனா, கரீஷன், சந்தோஸ், அபிஷயன், சுஜானன் ஆராதனி, கஜன், தீபா, அபிகேல், ஈனோத் கரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி,**
**இணுவில் மேற்கு.**

**தகவல்: சு.இராசலிங்கம்** (மருமகன்)
**ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்**
**0777 187 752.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற...

லாவது போர்க்குற்ற நீதிமன்றம் அமைக்கப்படும். அந்த நீதிமன்றில் மகிந்த ராஜபக்ச உட்பட படை அதிகாரிகள் அனைவரும் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய விடுதலை முன்னணியின் தலைவரும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

பலவந்தமாகக் காணாமல் போவதைத் தடுக்கும் சட்டவரைவு தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை வென்று கொடுத்த படையினரையும் அதற்குத் தலைமைத்துவம் வழங்கிய முன்னாள் அரச தலைவர் மகிந்தவையும் எப்படியாவது தண்டித்துவிடவேண்டும் என்ற முனைப்பில் இந்த அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பன்னாட்டுச் சக்திகளினதும் வெளிநாடுகளில் வாழும் புலிகளினதும் புலம்பெயர் தமிழர்களினதும் விருப்பம் அதுவாகவே இருக்கின்றது. அந்த விருப்பத்தை நிறைவேற்றும் முகவர்தான் இந்த அரசு.

பலவந்தமாகக் காணாமற்போவதைத் தடுத்தல் என்றொரு சட்டவரைவைக் கொண்டு வந்து அதனூடாகச் சூட்சுமமான முறையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் எமது படையினரையும் முன்னாள் அரச தலைவர் மகிந்தவையும் தண்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காணாமற்போனோர் செயலகத்தை நிறுவுவதற்காக ஏற்கனவே சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் படையினருக்கு எதிரான முறைப்பாடுகள் சேகரிக்கப்படும். நீதிமன்ற அனுமதி இன்றி வேண்டிய இடங்களுக்குச் சென்று தேடுதல் நடத்த முடியும்.

இதற்குச் சாட்சியம் வழங்குபவர்கள் அவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயமில்லை. ஆனால் இலங்கையின் சாட்சிகள் சட்டத்தின்படி சாட்சியம் கூறுபவர் அவரது அடையாளத்தை வெளிப்படுத்திய ஆக வேண்டும். ஆனால் காணாமற்போனோர் செயலகச் சட்டத்தின்படி சாட்சி அடையாளத்தை வெளிப்படுத்த மாட்டார். எங்கேயாவது இருந்து கொண்டு சாட்சியம் வழங்க முடியும். அந்தச் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படும்.

பின்பு பலவந்தமாகக் காணாமற்போவதைத் தடுக்கும் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டு அந்தச் சட்டத்தின் அடிப்படையில் முதலாவது போர்க் குற்ற நீதிமன்றம் அமைக்கப்பட்டு மேற்படி சாட்சிகளிடம் இருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் இந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும்.

போருக்குத் தலைமை தாங்கிய மகிந்த உட்படப் படை அதிகாரிகள் அனைவரும் அந்த நீதிமன்றில் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவர். இறுதியில் தண்டிக்கப்படுவர். இதுதான் அரசின் திட்டம்- என்றார். (த-3)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 60 |
| கத்தரி | 120 | 160 | 120 | 140 | 140 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 120 | 160 | 120 | 140 |
| பாகல் | 180 | 160 | 240 | 160 | 180 |
| க.கிழங்கு | 120 | [illegible] | 160 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 250 | 260 | 260 | 260 |
| பூசணி | 80 | 80 | 100 | 120 | 80 |
| தக்காளி | 120 | 160 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 | 60 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 300 | 300 | 250 | 200 |
| புடோல் | 80 | 60 | 100 | 80 | 80 |
| கோவா | 120 | 160 | 140 | 140 | 120 |
| வெண்டி | 80 | 60 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 220 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100 |
| தேங்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 180 | 240 |
| இராசவள்ளி | | | 300 | 300 | 260 |
| முருங்கைகாய் | 200 | 150 | 240 | 150 | 200 |

## அரச...

மன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த அணிக்கான செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதால் அந்தச் செல்வாக்கை எப்படியாவது குறைத்துவிடுவதற்கு அரசு திட்டமிடுகின்றது. அந்தச் செல்வாக்குக்குப் பயந்துதான் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திப்போட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களுக்கும் அதே கதிதான்.

கோத்தபாய ராஜபக்ச 2020 அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவாரோ என்ற அச்சம் இந்த அரசுக்கு இருக்கின்றது. அதன் காரணமாக இப்போதே அவரை அடக்கி ஒடுக்குவதற்கு அரசு திட்டமிடுகின்றது. அவரைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு சதி செய்கிறது.

அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக் களைத் தேடிக்கொண்டிருக்கின்றது. இந்தக் கீழ்த்தரமான வேலைகளை அரசு செய்யக்கூடாது. கோத்தாவைக் கைது செய்வதற்குச் சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்குமாக இருந்தால் அவர்களைப்போல் மனநோயாளிகள் வேறு யாரும் இருக்க முடியாது.

இந்த அரசு கோடிக்கணக்கில் திருடியுள்ளது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்காக தலைமை அமைச்சர் பதவி விலக வேண்டும். அலோசியஸ் சிறையில் அடைக்கப்பட வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யாரென்று இறுதி நேரத்தில் தான் வெளியிடுவோம். மைத்திரி வெற்றி பெற்றமைக்குக் காரணம் இறுதி நேரம் வரை இரகசியம் பாதுகாத்தமைதான். நாமும் அவ்வாறு செய்து வெற்றி பெறுவோம்-என்றார். (த-3)

## பொலிஸ்...

ருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன. குற்றஞ்சாட்டப்படும் பொலிஸாரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. பக்கச் சார்பின்றி விசாரணை இடம்பெறும்.

இவ்வாறு வடமராட்சியில் விசாரணையில் ஈடுபட்டுள்ள கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவின் அதிகாரியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குணசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

"குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் நாம் வாக்குமூலம் பெற்றுள்ளோம். அவர்கள் சொல்வதனை மட்டும் கவனத்தில் கொண்டு நாங்கள் விசாரணையை முன்னெடுக்க முடியாது. முடிவுக்கும் வரமுடியாது. அதனால் பாதிக்கப்பட்ட தரப்பினரது கருத்துக்களையும் வாக்குமூலங்களையும் பெற்று விசாரணை முன்னெடுத் துள்ளோம்.

குற்றம் நடந்த இடத்தையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் முதலில் கொண்டு செல்லப்பட்ட அம்பன் வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலையிலும் விசாரணை முன்னெடுத்துள்ளோம். வாகனம் தொடர்பிலும் அதில் பயணித்ததாகக் கூறப்படும் 5 பேர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுகிறது. சம்பவங்கள் பற்றிய மேலதிக தகவல்களைக் குறித்த வாகனத்தில் கூட இருந்து பயணித்தவர்களிடம் பெறவேண்டியுள்ளது. அவர்களது தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டே பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணையைத் துரிதப்படுத்தலாம்" என்று தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பருத்தித்துறை துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது - 24) என்ற இளைஞன் உயிரிழந்தான். " குறித்த இளைஞன் உள்ளிட்டவர்கள் வாகனத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றபோது மறித்தும் நிற்காது சென்றதனால் அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது" என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவத்தையடுத்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து துன்னாலையில் மதன்மைச் சாலைகளில் ரயர் போட்டுத் தீ மூட்டினர். பொதுப் போக்குவரத்தையும் தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-26)

## பொலிஸார்...

னால் தற்காலிக குழாய் கிணறு அமைத்துத் தருகின்றேன் என்று பாடசாலைச் சமூகத்திடம் பதிலளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்குப் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்கு கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று வருகை தந்திருந்தார். நிகழ்வின் ஒரு பகுதியாக காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரிக்கும் அமைச்சர் சென்றிருந்தார்.

பாடசாலையின் ஒரு பகுதி இன்னமும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்பதையும், பாடசாலைக்குச் சொந்தமான குடிதண்ணீர்க் கிணற்றைப் பொலிஸாரே பயன்படுத்தி வருகின்றனர் என்பதையும், அதிபர் அமைச்சருக்கு எடுத்துக் கூறினார். இவற்றைக் கேட்ட அமைச்சர், தற்காலிகக் குழாய் கிணறு அமைத்துத் தருகின்றேன் என்று பதிலளித்துள்ளார்.

பாடசாலையுடன் இணைந்த கல்லூரி வீதியில் 200 மீற்றர் தூரத்தை இராணுவத்தினர் தம்வசப்படுத்தி வைத்துள்ளனர். அவற்றை விடுவித்து தருமாறும் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (வ-5)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 350 | 300 | 600 | 400 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 500 | 500 | 700 |
| விளை | 500 | – | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 400 | 400 | 500 | 450 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 400 |
| சூடை | 150 | 100 | 200 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 350 |
| திருக்கை | 350 | 300 | 400 | 300 |
| மதனம் | 250 | 150 | 250 | 500 |
| கொய் | 200 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 500 | 500 |
| | 200 | | 400 | 400 |

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா மயில்வாகனம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா மயில்வாகனம் நேற்று (12.07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வானத்தின் அன்பு மனைவியும் யோகலிங்கம் - குணபூரணி (பெரியகிளி), பரஞ்சோதி - நாகேஸ்வரி (சின்னக்கிளி), கருணாநிதி, காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், பரஞ்சோதி மற்றும் சற்குணதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.



பெண்களுக்கான சட்டைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை முழு பருத்தித்துணியில் தைக்கப்பட்டவை. இவை 2 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பின்...

எம் காட்டி வருகின்றோம். தமிழ் அரசுக் கட்சியின் ஊடாக அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக ஒருமித்துச் செயற்பட வேண்டும் என்பதே முக்கியமான விடயம்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கிளிநொச்சி நகரில் வைத்துத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்களுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையேயான சந்திப்பு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். அரசமைப்பு முயற்சி தொடர்பில் பத்திரிகைகளுக்கு தான் கருத்துக் கூறுவதில்லை எனவும், ஏதாவது தெரிவித்தால் அதற்கு தெற்கில் பத்துப் பேர் பதில் சொல்லுவதற்கு வாய்ப்பை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் இதன்போது இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

சந்திப்பு முடிவில் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு இரா.சம்பந்தன் பதிலளித்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனியாகவும், ஏனைய கட்சிகள் தனியாகவும் செயற்படுகின்றன என்று கேள்வி எழுப்பப்பட்டது. "அப்படி நடைபெறவில்லை. இந்தியாவின் தலைமை அமைச்சர் மோடி என்னை மாத்திரம் சந்திக்க விரும்பியபோதும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று சந்திப்பதற்கு ஒழுங்கு செய்தேன்" என்று இரா.சம்பந்தன் இதன்போது சுட்டிக்காட்டினார். புதிய அரசமைப்பு முயற்சியில் ஒரு உபகுழுவின் தலைவராக பங்காளிக் கட்சியைச் சேர்ந்த த.சித்தார்த்தன் செயற்பட்டதையும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

"நாம் ஒற்றுமையுடன் இருக்கின்றோம். அதனை உறுதி செய்ய வேண்டும். பெரும்பான்மைச் சமூகம் நாம் பிளவுபட்டு நிற்கின்றோம் என்று எண்ணக் கூடாது" என்று சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு அதன் அங்கத்துவக் கட்சிகள் அனைத்தும் இணங்க வேண்டும் என்று குறிப்பிட்ட இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அதற்கான விருப்பத்தை இதுவரை வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார். அந்தக் கட்சி 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பழமையான கட்சி என்றும், அந்தக் கட்சிக்கு தலைவர், செயலாளர் இருக்கின்றனர் எனவும், அந்தக் கட்சிதான் முடிவு எடுக்க வேண்டும். நான் தனித்து முடிவு எடுக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லை என்று நீங்கள் கூறியுள்ளீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சம்பந்தன், "யார் உருவாக்கினார்கள் என்பது இப்போது தேவையில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் பங்களிப்புத் தொடர்பாக எவரும் எந்தக் கருத்தும் கூறுவதற்கில்லை. அவர்களுடைய காலத்தில் அவர்கள் தங்களால் இயன்ற அளவு பங்களிப்பைச் செய்தார்கள்" என்று பதிலளித்தார்.

இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராசா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலர் வேளமாளிதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (வ-ற-5)

## புதிய...

எனவும் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புகள் வலுத்து வருவது குறித்து எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கட்சியின் பிரசாரச் செயலாளரான விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அராஜக ஆட்சிக்கு முடிவுகட்ட ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவார் என உறுதிவழங்கிவிட்டே பொதுவேட்பாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன களமிறங்கினார். இதற்காக புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அவர் கூறினார். நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிப்பு குறித்தும் அவரால் பல தடவைகள் உறுதிமொழி வழங்கப்பட்டன.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமும், பொதுசன வாக்கெடுப்பும் அவசியம். எனவே, அன்று அப்படியொரு வாக்குறுதியை வழங்கிவிட்டு இன்று இழுத்தடிப்பு இருட்டடிப்பு செய்வது ஏற்புடையதல்ல. மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றியே ஆகவேண்டும் - என்றார்.

காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து ஆள்களைப் பாதுகாப்பது குறித்த பன்னாட்டுச் சமவாய சட்டவரைவு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த விஜித ஹேரத்,

எதிர்காலத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்படுதல் தடுத்து நிறுத்தப்படவேண்டும். காணாமல் ஆக்கப்படுவதைக் குற்றவியல் குற்றமாக அறிவிக்கும் வகையிலேயே குறித்த சட்ட வரைவு கொண்டுவரப்படுகின்றது. அது அவசியமானதொன்றாகும். குறித்த சட்டவரைவு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பி. இருக்கின்றது" என்று குறிப்பிட்டார். (த)

## காணாமற்...

சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளும் தீர்வதற்கு நாம் கடவுளைக் கும்பிடுவோம்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் 143ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களை இரா.சம்பந்தன் நேற்றுச் நேரில் சென்று சந்தித்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள், இரா.சம்பந்தனின் காலில் வீழ்ந்து கட்டிப்பிடித்துக் கதறி அழுதனர். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்? என்றும், தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறும் அவர்கள் அழுது குளறிக் கேட்டனர்.

அவர்கள் ஆசுவாசப்படுத்திய பின்னர், அந்த மக்கள் மத்தியில் இரா.சம்பந்தன் பேசினார். அவர் அங்கு குறிப்பிட்டதாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரைச் சந்திக்கும் போது சாதாரணமாக நான் பேசுவதில்லை. மிகவும் கடுமையாகவே பேசுகின்றேன். எமது மக்களுக்கு முடிவு சொல்ல வேண்டும் என்று கோரியுள்ளேன். தற்போது சில கருமங்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன. அவற்றிலும் தாமதங்கள், குழப்பங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எல்லாவற்றையும் வெற்றிகொள்ளும் வகையில் விடயங்களைக் கையாள வேண்டும்.

நாம் இந்தக் கருமங்களை நிறைவேற்ற வேண்டும் என்றால் அவகாசம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அவகாசம் கொடுக்காதுவிட்டால் கைவிடப்பட்ட ஒரு விடயமாக இது மாறிவிடும். இந்தப் பிரச்சினை தொடர்பாக இறுதி முடிவை எட்டுவதற்குக் கடும் முயற்சி எடுப்பேன். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் நாம் முயற்சிகள் எடுக்காமல் இல்லை.

இது மிகவும் சிக்கலான விடயம். இந்த விடயத்தில் ஒரு முடிவு வர வேண்டியது அவசியம். முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் என்ன நடந்தது? என்று அறியப்பட்டு, அவர்களின் உறவினர்களுக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டும். நிம்மதி ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காக ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தக் கருமங்கள் தொடர்பாக நாங்கள் அரசுடன் தொடர்ந்து பேசுகின்றோம். தொடர்ந்தும் நாம் அரசுடன் கடுமையாகவே நடப்போம் என்றார்.

இந்தச் சந்திப்பின்போது இரா.சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோரும் உடன் சென்றிருந்தனர். (வ-ற-53-5)

## விக்கியின்...

தயாரில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மீனவர்கள் அநேகமாக மீன்பிடி நடவடிக்கைகளை கைவிட்டிருப்பதாலேயே இந்திய மீனவர்கள் வடக்குக் கடற் பரப்பை ஆக்கிரமிக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போடும் அனைத்து தாளங்களுக்கும் இராணுவத்தினர் ஆடத் தயாரில்லை. அவரது அனைத்து எதிர்பார்ப்புக்களும் வெறும் கற்பனையேயாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆவா குழுவின் செயற்பாடுகள் இல்லாவிட்டாலும் சட்டவிரோத மணல் அகழ்வாளர்கள் மக்களைப் பீதிக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

வடக்கில் மிகவும் சொற்ப அளவிலான மீனவர்களே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அநேகமானவர்கள் வலைகளைப் பயன்படுத்தி சொற்ப அளவு மீன்களைப் பிடித்து அன்றாடம் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மீன்கள் கொண்டு வரப்பட்டது. தற்போது அந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. தெற்குக் கடற்பரப்பில் பலநாள் கலங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் வடக்கில் இவ்வாறான நிலையை அவதானிக்க முடியவில்லை என்றார். (த)

## கடற்படை...

னாய்வுப் பிரிவினர் கோட்டை நீதிவானுக்குச் சிறப்பு அறிக்கை ஊடாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே மேற்படி கைது இடம்பெற்றுள்ளது.

2008ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு கோட்டை நீதிவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். இதன்போது, கடற்படையைச் சேர்ந்த சந்தேகநபரான லெப்.கொமாண்டரைக் கைது செய்வதற்கு ஏன் நீண்ட காலம் எடுக்கிறது? என்று நீதிவான் கேள்வி எழுப்பியிருந்தார். அதே வேளை, கடற்படையின் முன்னாள் பேச்சாளரான கப்டன் டி.எம்.கே.பி.தசநாயக்கவை இந்த வழக்கில் சந்தேகநபராக பெயரிடவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரிவித்திருந்தனர்.

நாம் அவரை விசாரணைக்காக அழைத்த போது அவர் வெலிசறைக் கடற்படை வைத்தியசாலையில் சேர்துள்ளார் எனவும் அவர்கள் மன்றில் குறிப்பிட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியின்றி புலனாய்வுப் பிரிவினர் ஏதேச்சாதிகாரமாகச் செயற்பட்டு வருவதாக தசாநாயக்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இதன்போது மன்றில் குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் சந்தேகநபர் எனத் தென்பட்டால் அவரைக் கைது செய்ய முடியும். அதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதியளிக்கும் எனவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே தசாநாயக்க நேற்றுக் கைது செய்யப்பட்டார். (வ-5)

## அரசியல்...

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் பாதிப்பு, சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.

மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், பென் எமர்சன், ஐந்து நாள்கள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ளார். வவுனியாவுக்கு அவர் நேற்று மதியம் வருகை தந்தார். வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்தரன் தலைமையிலான குழுவினரை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தந் சந்திப்பு வவுனியா நீதிமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் மாவட்ட நீதிபதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் பின்னர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு பென் எமர்சன் குழுவினர் சென்றனர். அங்கு தனியான அறையில் தமிழ் அரசியல் கைதிகளான எம்.சுலக்சன், பி.அரவிந்தன், என்.உமர்காதப், ஆர்.ஜெனன், என்.சிவலிங்கம் ஆகியோரைத் தனித் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, கைதிகளின் மனநிலை, அவர்கள் மீதான சித்திரவதை தொடர்பில் அவர் தகவல்களைத் திரட்டினார்.

புத்தகக் கட்டுக்களை தலைமேல் வைத்து கொட்டன்களால் அடித்து துன்புறுத்தியமை உள்ளிட்ட பல்வேறு சித்திரவதைகள் தொடர்பில் அரசியல் கைதிகள் அவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர். இவ்வாறு சித்திரவதை மேற்கொண்டு பலவந்தப்படுத்தி குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதையும் அவர்கள் தெரிவித்தனர். இப்படி பெறப்பட்ட வாக்குமூலத்தை அநுராதபுரம் நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்றமையும் சிறப்பு அறிக்கையாளரிடம் அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தன்னைக் கொலை செய்ய முயற்சித்த தமிழ் அரசியல் கைதியை பொதுமன்னிப்பில் விடுதலை செய்திருந்தார். கடந்த காலங்களில் கிளர்சியில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எமது பிரச்சினை தற்போது அரசியல் மயப்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே அரசியல் கொள்கை முடிவு எடுத்து எம்மை விடுவிக்க வேண்டும்" என்று தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் சிறப்பு அறிக்கையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வடமராட்சி...

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்துக்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்துள்ளார்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்ப்பாணத்தில் 16 நீர்வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இவற்றின் மூலம் 9 சதவீதமானவர்களுக்கே குழாய் நீர் வசதிகளை வழங்க முடிந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பொருத்தமான நீர் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் வடமராட்சி கடலேரி நீர்வளத்தைச் சுத்திகரித்து, அதன்மூலம் குடிதண்ணீரை வழங்குவதற்காக நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித் துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அரச நிறுவனம் மற்றும் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து முழு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (த)

## வான்...

என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

சம்பவ இடத்திற்கு விரைந்த லண்டன் தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோதும் வாகனத்தின் உள்ளே இருந்த நபரைக் காப்பாற்ற முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தீ விபத்தில் யாழ்ப்பாணம் அளவெட்டியை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ் என்ற வர்த்தகரே உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைக ளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (த)

## பொறி வெடியில்...

வெடி வெடித்ததால் இரு கைகளிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரின் இரு கைகளும் சத்திரச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த எஸ்.தினேஸ்குமார் (வயது -43) என்பவரே படுகாயமடைந்தார்.

போர்க் காலத்தில் விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களாக விளங்கிய முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறுகின்றன. நேற்றைய தினம் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டு நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் ஓர் பொறி வெடி வெடித்ததில் இரு கைகளிலும் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு சத்திரச் சிகிச்சை மூலம் இரு கைகளும் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலூன்றிப் பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துவுக்குப் பதக்கம்

## அருணோதய, மகாஜனக் கல்லூரிகளின் ஏக ஆதிக்கம் இம்முறை தகர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரிகளின் ஏக ஆதிக்கம் இம்முறை இருக்கவில்லை. இதன்படி சாவகச்சேரி இந்துக் கல்லூரி போதிய பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றது.

யாழ்ப்பாணம் துரைப்பா விளையாட்டு அரங்கில் கடந்த வியாழக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

18 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி சங்கவி முதலாமிடத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சி.ஹரினா வெள்ளிப் பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி டக்சிதா வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

20 வயது பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணேதயக் கல்லூரி மாணவி சாத்விகா தங்கப் பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி பி.கிரிசா வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி எஸ்.டிலானி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

18 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் எ.புவிதரன் தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் எஸ்.கபிலக்சன் வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் கே.கேதுசன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

20 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் எஸ்.டிலக்சன் தங்கப்பதக்கத்தையும், அருணோதயக் கல்லூரியின் நெப்தலி ஜொய்சன் வெள்ளிப் பதக்கத்தையும், மகாஜனக் கல்லூரியின் ரி.சியானஸ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

கடந்த வருடம் மகாஜனா மற்றும் அருணோதயக் கல்லூரிகளே கோலூன்றிப் பாய்தலில் பெருமளவு பதக்கங்களைச் சுவீகரித்திருந்தன. ஆனால் இம்முறை இந்த இரு கல்லூரிகளினதும் பதக்கவேட்டை ஒப்பீட்டளவில் பரவலாக்கப்பட்டுள்ளது. இதன்படி கணிசமான பதக்கங்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது. (ம-23)

## இரண்டாவது டெஸ்ட் நாளை

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தெடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முன்னதாக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இதனால் நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலமை தென்னாபிரிக்க அணிக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று வியாழக்கிழமை மின்னொளியில் ஆரம்பமாகின்றன. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அ.வரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலியூத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## பற்றிமா மகா வித்தியாலயம் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் ஆர்.ரக்சன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ரக்சன் 56.70 செக்கன்களில் ஓடி வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.டிலக்சன் 57 செக்கன்களில் ஓடி வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை சேர்ந்த ஜி.கோபிநாத் 57.50 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-108)

## ஐக்கியம் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 13
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஐக்கியம் அணி வெற்றிபெற்றது.

ஐக்கியத்தின் மைதானத்தில் இந்தத் தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும், பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் அணி 106:54 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)




## சென். ஆன்ஸுக்கு தடைதாண்டலில் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அபிக்சன் 58.20 செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த என்.நசாத்கன் 59.00 செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், மன்னார் சென். ஜோசப்வாஸ் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். டிலக்சன் 59.60 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினர். (ம-422)



## சாவகச்சேரி இந்து வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.விதுசன் 51.50 செக்கன்களில் ஓடி வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.அபினாஸ் 52.90 செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கமும், யாழ். மத்திய கல்லூரியை சேர்ந்த எஸ். செந்தூரன் 52.40 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-108)

## அருணோதயக் கல்லூரி அணி அஞ்சலோட்டத்தில் சாதித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் 16 வயதுப்பிரிவு பெண்களுக்கான அஞ்சலோட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.


யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. 56.70 செக்கன்களில் ஓடி அருணோதயக் கல்லூரி தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது. 57.30 செக்கன்களில் ஓடி முடித்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தையும், 58.80 செக்கன்களில் ஓடி முடித்த யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகினார் மத்தியூஸ் தரங்க தலைவரானார்

## டெஸ்ட் தலைவராக சந்திமல்




இலங்கை அணியின் மூவகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த மத்தியூஸ் தனது பொறுப்பில் இருந்து நேற்று விலகினார். சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து ஆட்டங்கள் கொண்டு ஒருநாள் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரை இலங்கை 2:3 என்ற அடிப்படையில் இழந்ததை அடுத்தே மத்தியூஸ் பதவி விலகுவது தொடர்பான அறிவிப்பு வந்துள்ளது.

தொடரை இழந்ததன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், பதவி விலகுவது தொடர்பில் உறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை என்றும், எனினும் இலங்கை கிரிக்கெட் சபை, தெரிவுக்குழு ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து ஓர் முடிவு எடுக்கப்படும் என்றவாறாக மத்தியூஸ் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தலைமைப் பதவியில் இருந்து நேற்று விலகினார். மத்தியூஸ் விலகியதை அடுத்து ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைமைப் பதவி உப்புல் தரங்கவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் தலைவராக சந்திமல் பெயரிடப்பட்டார்.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் சந்திமலின் தலைமையில் மத்தியூஸ் களமிறங்கவுள்ளார். (ம)






# சம்பளங்கள் வேண்டுமா? ஆடையைக் களையுங்கள்

## இலங்கை கிரிக்கெட் சபையின் 'டீல்' இது

இலங்கை கிரிக்கெட் மைதானத்தை பராமரித்த ஊழியர்களிடம் "ஊதியம் தர வேண்டுமாயின் காற்சட்டையைத் திருப்பித் தாருங்கள்" என்று தெரிவித்து அதிகாரிகள் அநாகரீகமாக நடந்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக இலங்கை கிரிக்கெட் சபை மன்னிப்புக் கோரியுள்ளது.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடை யிலான ஒருநாள் தொடரில் சுமார் 100 ஊழியர்கள் இலங்கை கிரிக்கெட் சபையால் நாள் சம்பளத்துக்கு பணியில் அமர்த்தப்பட்டனர். தொடர் முடிந்த பின்னர் தங்களுக்கான சம்பளத்தை சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஊழியர்கள் கேட்டுள்ளனர். முதலில் ஊழியர்கள் அணிந்திருந்த காற்சட்டைகளை அவிழ்த்துக் கொடுத்தால்தான் ஊதியம் என அதிகாரிகள் அவர்களிடம் தெரிவித்தனர் என்று ஊழியர்களால் வெளிப்படுத்தப்பட்டது.

சர்ச்சையை கிளப்பியுள்ள இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் குறித்த சம்பவத்துக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்ட இலங்கை கிரிக்கெட் சபை சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொட்சொபேக்குத் தடை



தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொட்சொபேக்கு எட்டு ஆண்டுகள் தடை விதித்துத் தீர்ப்பிடப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஆட்டநிர்யச் சூதாட்டத்தில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டதாலேயே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டது. (ம)

## இலங்கை அணியில் தனஞ்சய நீக்கம்



சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. தனஞ்சய டி சில்லா அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை சிம்பாப்வே அணி கைப்பற்றியதை அடுத்து இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் கொழும்பில் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான அணி நேற்று அறிவிக்கப்பட்டது. புதிய தலைவர் டினேஷ் சந்தி மலின் தலைமையில் விளையாடப்படவுள்ள முதலாவது ஆட்டமாக அமையவுள்ள இந்த ஆட்டத்தில், ஒருநாள் ஆட்டங்களில் சிறப்பான திறனை வெளிப்படுத்திய தனுஸ்க குணதிலக, முதன் முறையாக இடம்பிடித்துள்ளார். அதே போன்று, காயம் காரணமாக அண்மைக்காலத்தில் இடம்பெற்றிருக்காத அஞ்சலோ மத்தியூஸ், நீண்டகாலத்தின் பின்னர் சாதாரண வீர ராகக் களமிறங்கவுள்ளார். தனஞ்சய டி சில்வா, காயமடைந்த வீரர்களான குசல் பெரேரா, நுவான் பிரதீப் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை. இலங்கை அணி விவரம் - சந்திமல் (தலைவர்), உப்புல் தரங்க, அஞ்சலோ மத்தியூஸ், நிரோசன் டிக்வெல்ல, திமுத் கருணாரத்ன, தனுஷ்க குணதிலக, குசல் மெண்டிஸ், அசேல குணரட்ன, ரங்கன கேரத், டில்ருவான் பெரேரா, லக்சன் சண்டகன், விஷ்வ பெர்ணான்டோ, துஷ்மந்த சமீர, சுரங்க லக்மல், லஹிரு குமார. (ம)

பிரமாண்டமான
பெற்றோல், டீசல் மோட்டார் வாகன
ஏல விற்பனை

இரண்டு சக்கர ட்ரக்டர்கள், நான்கு சக்கர ட்ரக்டர்கள், ஹாவெஸ்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், லொறிகள், ட்ரக்குகள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட சகல வகையான வாகனங்களும் நல்ல நிலையில்

ஜூலை 15ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்ரேசன் றோட், வைரவப்புளியங்குளம்.
வவுனியா

திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பிரஷாந்தினி - 0245 11 8181

பார்வையிடல்
ஜூலை 13 மற்றும் 14ஆம் திகதிகளில்

LOLC MICRO CREDIT
LOLC FINANCE (An LOLC Group Company)

சொக்மன் & சமரவிக்கிரம
D,ads

இல.24,டொரிங்டன் வீதி, கண்டி.
தொ.பே:081 222 7593,
பெக்ஸ்:081 2224371
ஈமெயில்:schokmankandy@sltnet.lk
இணையத்தளம்: www.sandilanka.com

நகர கிளையும் காரியாலயமும்,
இல.290,ஹெவ்லொக் வீதி, கொழும்பு-05,
தொ.பே:2502580,2585408
பெக்ஸ்:011 2588176
ஈமெயில்:schokmansameral1892.com

விவசாய விஞ்ஞானம்
கருத்தரங்கு - 1000 Slide
1000 Slide மூலமான
முழுமையான தொகுப்பு
இடம் : பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்
திகதி : 13/07, 14/07
நேரம்: பி.ப. 2.00 - 5.00
ஆசிரியர்: S.சஜீவன்
தொடர்பு: 0775185934

உங்கள் முதற்தர ஆங்கிலப்பயிற்சி மையம்
SAAMSON Experts in English Training
பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கிலப்பாடநெறி
school plus
உங்கள் குழந்தைக்கு 13 வயதாகிவிட்டதா? அப்படியானால் ஷாம்சனின் விசேட ஆங்கிலப் பாடநெறியில் இணைத்து ஆங்கில பாடத்தில் A தர சித்திபெறுவதையும், சிறுவயதிலேயே சரளமாக ஆங்கிலம் பேசுவதையும் இன்றே உறுதிசெய்யுங்கள்.
மேற்படி பயிற்சிநெறியில் தரம் 8, 9, 10, 11 மாணவர்கள் மட்டுமே இணைக்கப்படுவர்
ஆரம்பிக்கும் திகதி: 16.07.2017 பயிற்சி நேரம்: பிரிவு 1: மாலை 3-4 பிரிவு 2: மாலை 4-5 (புதன் மற்றும் வெள்ளி)
SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்!
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 15.07.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
4. மாலை 03.00-05.00
3. பி.ப 01.00-03.00
SAAMSON Experts in English Training
403, மனிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோவில் அருகில்)
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரை அண்மித்தபகுதியில் இரண்டு அல்லது மூன்று அறைகளைக்கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 077 201 7004

வேலையாள்கள் தேவை
ஆண்கள், பெண்கள் இருபாலாரும், 21-45 வயது வரை திருமண மண்டபங்களுக்கு, கல்விசார் நிறுவனங்களுக்கு, சுத்திகரிப்பிற்கு, உணவு பரிமாறுவதற்கும் ஆண்கள், பெண்கள் தேவை. அனுபவம் உள்ள யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (CS 5751) (14)
077 497 5962/ 077 903 7288




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org